Uthayan.com

உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 32 ■ சுடர்: 28 ■ கதிர்: 291 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 28, வெள்ளி 13.09.2013

தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்

இலங்கைக்குப் போர்க்கப்பல்; தமிழ் மக்களைப் புண்படுத்தும் 16

சிரிய சமரசத் திட்டம் தயார் 17

தேசிய மட்டப் போட்டிகளின் 2 ஆம் கட்டம் நாளை ஆரம்பம் 30

தெற்காசியச் சம்பியனானது ஆப்கானிஸ்தான் 31

போரில் இராணுவத்தினரிடம் எவரும் சரணடையவில்லை

நீதிமன்றில் அரசு அறிக்கை. நீதிவான் மன்ற விசாரணைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13
இறுதிக் கட்டப் போரின் போது இராணுவத்தினரிடம் எவரும் சரணடையவில்லை என்று வவுனியா மேல் நீதிமன்றத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது இலங்கை அரசு.
யாரையும் எவரிடமிருந்தும் இராணுவம் பொறுப்பேற்கவில்லை என்றும் அரசு கூறியுள்ளது.
விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான எழிலன் உட்பட இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட முன்னாள் புலிகளை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கோரும் ஆள்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணை நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்றது.
2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி எழிலன் உள்ளிட்ட 50 புலிகள் வண. பிதா ஒருவருடன் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர் என்று உறவினர்கள் நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்பாக சாட்சிய மளித்திருந்தனர். அரசின் பாதுகாப்பு உறுதி மொழியை ஏற்று இராணுவத்தினரிடம் இவர்கள் அனைவரும் சரணடைந்தனர் என்று அவர்களது உறவினர்கள் கூறுகின்றனர்.
சரணடைந்தவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்பதை இராணுவமோ அரசோ இதுவரை தெரியப்படுத்தவில்லை. அவர்கள் எங்கு வைக் கப்பட்டுள்ளனர் என விசாரணை செய்வதுடன் நீதிமன்றில் முற்படுத்தி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி எழிலன் உட்பட 5 பேர் சார்பில் வவுனியா மேல் நீதிமன்றில் இந்த ஆள்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.
பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் இராணுவத்தினரிடம் தமது உறவினர்களைத் தாம் கையளித்தனர் என வும் இராணுவத்தினர் அவர்களைப் பொறுப்பேற்று பஸ்களில் ஏற்றிச்சென்றனர் என்றும் இன்று வரை இவர்கள் தொடர்பில் எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை எனவும் மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக் காட்டி இருந்தனர்.
இதன் பிரதிவாதிகளாக இராணுவத் தளபதியும் முல்லைத்தீவு மாவட்ட 58 ஆவது டிவிசன் தளபதியும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.
இந்த மனுக்கள் தொடர்

29

சமஷ்டி வேறு பிரிவினை வேறு இதுகூட புரியாதா மஹிந்தவுக்கு?

கொழும்பு, செப்.13
நாட்டைப் பிரிக்கச் சொல்லி ஒரு போதும் கூட்டமைப்பு கோரவில்லை. நாங்கள் கேட்பதெல்லாம் நம்மை நாமே ஆளக் கூடிய சமஷ்டி ஆட்சியைத் தான். அது எங்களின் சுய நிர்ணய உரிமையும்கூட. பிரிவினை வாதத்துக்கும் சமஷ்டிக்குமான வித்தியாசம் சட்டம் பயின்றவரான ஜனாதிபதிக்குக்கூட தெரியவில்லையா?
இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ் வரன்.
கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் அராலி தெற்கு மாவத்தை மைதானத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்

29

கூட்டமைப்பின் பேச்சை கேட்பவர்கள் முட்டாள்கள்

சீறிச் சினக்கிறார் வடக்கு ஆளுநர்

கொழும்பு, செப்.13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறுபவற்றைக் கேட்பவர்கள் மூடர்கள் என்று திட்டியிருக்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி.
ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் அரச தலைவர்களின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்துகொள்வது தவறு என்று எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கொழும்பிலுள்ள 'சிறிலங்கா ருடே' ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்துத் தான் கவலைப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்சொல்லும்கருத்துக்களுக்கு செவிமடுப்பவர்கள் முட்டாள்கள். எவருடனும்எங்குவேண்டுமானாலும் செல்வதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது. நான் ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் எனக்கு அரசியல்உரிமைஇருக்கிறது.வடக்கை அபிவிருத்தி செய்வதில் ஜனாதிபதியுடனும் அவரது சகோதரரான பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனும் நான் பல சந்தர்ப்பங்களில் பயணித்திருக்கிறேன். அவர்கள் வடக்கில் இருக்கும் போது நான் அவர்களுடன் இருக்கவேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.
"என்னுடைய பரப்புரைப் பணிகள்மீது உரிமைகள் ஆணைக் குழுவினால் விசாரிக்கப்படும் என்பது பற்றி நான் கவலைப் படமாட்டேன். நான் ஆளுநராக இருக்கையில் வடக்கின் எந்தப்

29

தீவகத்தில் கூட்டமைப்பினர் நேற்று சூறாவளிப் பரப்புரை

யாழ்ப்பாணம், செப். 12
தீவகப் பகுதிக்கு நேற்று சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கு வடமாகாண மாகாணத் தேர்தலுக்கான சூறாவளிப் பரப்புரையில் ஈடுபட்டனர்.
கடந்த சில நாள்களாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று தீவகத்துக்குச் சென்று அங்கு

29

கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் சர்வதேசம் கூட ஏற்கவில்லை

தான் அறிந்தாரென கூறுகி[redacted]

கொழும்பு, செப்.13
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுயநிர்ணய உரிமை உட்பட்ட சர்ச்சைக்குரிய விடயங்கள் இடம்பெற்றிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. சர்வதேச நாடுகள் கூட இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை விரும்பவில்லை என்பதை அறிந்தேன்."
இவ்வாறு தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் பிரதானிகளுட னான சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

"போர் முடிவடைந்து இந்த நாடு ஐக்கியப்பட்டுள்ளது. மக்கள் சமாதான மாகவும் ஒற்றுமையாகவும் வாழ்கிறார்கள். இப்படியான நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமக்கள்மத்தியில்பிரச்சினைகளை ஏற்படுத்தாதுசெயற்பட வேண்டும்" என்றும் அவர் கோரிக்கை

29

வடக்கில் வெற்றி நிச்சயம்

கொழும்பு,செப் 13
நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றி உறுதியாகிவிட்டதுஎனதகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

29

கூட்டமைப்பு வென்றாலும் ஆட்சி அமைக்க விடோம்

ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.13
வட மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினாலும், அவர்களை ஆட்சியமைப்பதற்கு நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்று ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.
சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்க வேண்டாம் என வும் அது கூறியுள்ளது.
ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசமைப்பை மீறிச் செயற்படுவதோடு நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

தமிழ் இளைஞர்களைத் தூண்டிவிட்டு மீண்டும் பயங்கரவாதத்தை உருவாக்கும் செயற்பாட்டிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரத்தவெறி கொண்டலைகின்றது.
சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்க வேண்

29

இறுதிப்போர் வேளை ஐ.நாவின் பணிகள் குறித்து மீள்பரிசீலனை

நியூயோர்க், செப்.13
இலங்கையில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் தான் மேற்கொண்ட நடவடிக் கைகள், அவற்றிலிருந்து தான் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆகியவை தொடர்பான மீள் பரிசீலனையில் ஐ.நா. தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.
இத்தகவலை ஐ.நா. இணைய பேச்சாளர்

29

வடமாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்
"இளைஞர்களுக்கான தலைமைத்துவம்"
அங்கஜன் இராமநாதன்
MBA (International) B.Eng (Hons)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் தாயகம்

சுன்னாகத்தில் சிறுவர் தின விழா

வலி. வடக்கு, செப். 13
சுன்னாகம் மக்கள் வங்கியினால் நடத்தப்படும் சர்வதேச சிறுவர் தின விழா நாளை சனிக்கிழமை சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.
சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான நிறந்தீட்டும் போட்டிகள் இடம்பெறுவதுடன் பிள்ளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.
இதேவேளை மக்கள் வங்கியில் பிள்ளைகளுக்கான கணக்குகளைப்பேணும் இசுறு உதான சிசு உதான வாடிக்கையாளர்களுக்கான அதிஷ்டம் பார்க்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஒ-86)

விஹாரைக்கு தீ வைப்பு

கொழும்பு,செப் 13
புளத்சிங்கள ஏகல்ஓயா விஹாரைக்கு நேற்று அதிகாலை வேளையில் தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்த விஹாராதிபதி தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக புளத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.
கிராமத்துக்கு இரண்டு விஹாரைகள் தேவையில்லை என்று புளத்சிங்கள பிரதேச சபைத் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

வீட்[illegible] ஊக்குவிக்க மிளகாய் கன்றுகள்

தென்மராட்சி, செப்.13
சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வாரத்தையொட்டி வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக அலுவலக உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்குநல்லின மிளகாய்க்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நகர சபை முன்றலில் இடம்பெறும். 'திவிநெகும' திட்டத்தில் வழங்கப்பட்ட மிளகாய் விதைகள் மூலம் நகரசபை வளாகத்தில் அமைக்கப்பட்ட நாற்றுமேடையில் வளர்ந்துள்ள மிளகாய்ச் செடிகளே வழங்கப்படவுள்ளதாக நகர சபை தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (ந-9)

விக்னேஸ்வரன் கொழும்பை கனவிலும் நினைக்கக் கூடாது

எச்சரிக்கிறது ராவண பலய

கொழும்பு,செப்.13
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டுவிட்டு கொழும்புக்குத் திரும்பி வர முடியும் என்று விக்னேஸ்வரன் கனவிலும் நினைக்கக் கூடாது என்று சிங்கள அடிப்படை வாத அமைப்பான ராவணபலய தெரிவித்துள்ளது.
ராவண பலயவின் பொதுச் செயலர் இத்தேகன்டே சத்ததிஸ்ஸ தேரர் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், அரசமைப்பை மீறும் வகையில் உள்ளது. இது நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலானது.
விக்னேஸ்வரனும் அவரது குழுவினரும், வடக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் தனியான நிர்வாகத்தை உருவாக்க முனைகின்றனர். சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்துக் காணி, பொலிஸ், கல்வி, நிதி, சுகாதாரம் போன்ற அதிகாரங்களைக் கோருகின்றனர்.
வெளிநாட்டிலிருந்து நேரடியாகக் கடன்களைப் பெற முனைகின்றனர். இது அரசமைப்புக்கு முரணானது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு விட்டு, கொழும்புக்குத் திரும்பி வர முடியும் என்று விக்னேஸ்வரன் கனவு காணக்கூடாது என்றும் சத்ததிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். (த-5)

லண்டனில் ஈழத்தமிழர் மீது கொள்ளையர்கள் தாக்குதல்

லண்டன்,செப் 13
லண்டன் நகரின் அமைந்துள்ள கடையொன்றில் புகுந்த முகமூடி அணிந்த கொள்ளையர்கள் இலங்கைத் தமிழர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.
லிவர்பூல் பிரதேசத்தின் லித்தர் லேண்ட் என்ற பகுதியில் அமைந்துள்ள கடையொன்றுக்குள் புகுந்த முகமூடி அணிந்த கொள்ளையர்கள், கடை ஊழியரான மில்டன் தர்மலிங்கம் என்ற தமிழர் மீதே தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியள[illegible]ந்துள்ளது.
[illegible]பவம் தொடர்பாக மேலும் [illegible]வருவதாவது:-
தமிழரான கனகசபை சிறிதரன் என்பவருக்குச் சொந்தமான கடைக்குள் இரண்டு முகமூடி அணிந்த கொள்ளையர்கள் இரும்புச் சங்கிலியுடன் புகுந்துள்ளனர்.
கடைக்குள் புகுந்த கொள்ளையர்களைத் தடுத்த மில்டனை இரும்புச் சங்கிலியால் தாக்கியுள்ளனர். இதனால் அவரது முகத்திலும் தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.
கடைக்குள் புகுந்த கொள்ளையர்களைத் தடுக்க அவர்களுடன் ஆயுதங்கள் இன்றி மில்டன் தர்மலிங்கம் சண்டையிட்டுள்ளார்.
கடையில் இருந்த பாதுகாப்புக் கமராக்களில் அவர் கொள்ளையர்களுடன் சண்டையிடும் காட்சிகள் பதிவாகியுள்ளன.
இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த தர்மலிங்கம், கடைக்கு வந்திருந்த வாடிக்கையாளர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.
அவரது தலையில்10 தையல்கள் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

பொது அறிவுப் போட்டி

தென்மராட்சி, செப்.13
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 வகுப்புக்களில் விவசாய பாடம் கற்கும் மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

சிங்கள பாடநெறி; நாளை பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.13
யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் சிங்கள மொழிப் பாடநெறி இறுதிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவிருப்பதால் பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு சிங்கள மொழிப் பாட நெறி போதனாசிரியர் அறிவித்துள்ளார். (ஒ-11)

சனல் 4 கெலும் மக்ரே இலங்கை வருகிறார்

லண்டன்,செப் 13
பிரிட்டன் சனல் 4 தொலைக்காட்சியின் தயாரிப்பாளர் கெலும் மெக்ரே இலங்கை வரவுள்ளார்.
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவே அவர் இலங்கை வரவுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
இலங்கையின் இறுதிக் கட்ட போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கெலும் மக்ரே ஆவணப்படங்களைத் தயாரித்து வெளியிட்டிருந்தார்.
இதனால் இலங்கையிலும் உலகம் முழுவதும் சர்ச்சை கிளம்பியது. இலங்கை மீது சர்வதேச போர்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்த சனல் 4 ஆவணப்படங்களே உந்துதலாக இருந்தன என்றும் கூறலாம்.
போர் தவிர்ப்பு வலயம், இலங்கையின் கொலைக்களங்கள், இலங்கை கொலைக்களங்கள் தண்டிக்கப்படாத குற்றங்கள் என இலங்கை போர் தொடர்பான ஆவணப்படங்களை தயாரித்தவர் கெலும் மக்ரே.
"இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படுவது ஆழ்ந்த வருத்தத்தை தருகிறது. அதன் மூலம் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குப் பொதுநலவாய நாடுகளின் தலைவர் பதவி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கிடைக்கும். மனித உரிமை மீறல், சட்ட ஒழுங்குப் பிரச்சினை போன்றவற்றில் இலங்கை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது" எனக் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார். (த)

சாவகச்சேரி நகர சபையின் தொழிலாளர் வேலை நிறுத்தம்

தலைவரின் தலையீட்டால் கைவிடப்பட்டது

தென்மராட்சி, செப்.13
சாவகச்சேரி நகரசபை தொழிலாளர்கள் சந்தையில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் மரக்கறி வியாபாரியொருவரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று வியாழக்கிழமை நகரசபைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
தகவல் அறிந்து அங்கு சென்ற நகர சபைத் தலைவர் சி.தேவசகாயம்பிள்ளை வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுடன் கலந்துரையாடியதுடன் குறிப்பிட்ட மரக்கறி வியாபாரியுடன் கதைத்து பாதிக்கப்பட்ட தொழிலாளியிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கச் செய்தார்.
இதனையடுத்து போராட்டத்தைக் கைவிட்டு ஊழியர்கள் கடமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

யாழ். நகரில் 9 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம்,செப்.13
சர்வதேச சிறைச்சாலைகள் தினத்தை முன்னிட்டு சிறு குற்றங்கள் புரிந்த 9 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
சிறு குற்றங்கள் புரிந்து தண்டப் பணம் செலுத்தத் தவறியவர்கள் குறுகிய கால சிறை வாசம் அனுபவிக்கும் நிலையில் சிறைச்சாலைகள் தினம் மற்றும் விசேட தினங்களின் போது விடுதலை செய்யப்படுவது வழமை. அந்த வகையில் நேற்றைய தினம் யாழ். சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் ரி.இந்திரகுமாரின் மேற்பார்வையில் கைதிகள் 9 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். (ஒ-14)

கிளிநொச்சியில் தபால் வாக்காளரை மிரட்டினார் ஆளும்கட்சி வேட்பாளர்

பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கிளிநொச்சி,செப் 13
கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் ஆளும்கட்சி வேட்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன், தபால் மூல வாக்காளர்களை மிரட்டியுள்ளார் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் குற்றம்சாட்டியுள்ளது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு கடந்த 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதன் போதே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் கீதாஞ்சலி நகுலேஸ்வரன், தபால் மூல வாக்காளர்களை அச்சுறுத்தியுள்ளார் எனப் பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் றொகான் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவாக வாக்களிக்காவிட்டால், வேலைகளை இழக்க நேரிடும் என்று கிளிநொச்சி பன்னங்கண்டியில், சிவில் பாதுகாப்புப் படையில் உள்ளவர்களுக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று பவ்ரல் கூறியுள்ளது. (த)

மீண்டும் Mega
After O/L & A/L
தகவல் தொழினுட்பம், ஆங்கில கற்கைநெறிகளுக்கான
புலமைப்பரிசில் பரீட்சை 14th Sep.
நாளை பரீட்சை - விரையுங்கள் - வெற்றிபெறுங்கள்
You can Win upto 75% scholarship
இலவச பரீட்சை அனுமதி, மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்களுக்கு

யாழ்ப்பாணம்	நெல்லியடி	சாவகச்சேரி	கிளிநொச்சி	வவுனியா
2G ஸ்ரான்லி வீதி, 021 2225677	கொடிகாமம் வீதி, 021 2262399	கட்டுக்காணி வீதி, 021 2270267	A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283925	192, குருமண்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050

ஆஸிக்கு ஆள் கடத்தும் குழுவின் பிரதானி கைது

கொழும்பு,செப் 13
சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும் குழுவொன்றின் முக்கிய நபரை மாத்தறை விசேட பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.
இந்த நபர் நேற்றுக் காலை கிரிபத்கொட பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்தது.
திருகோணமலை கிண்ணியாசரத் என்ற செல்வந்த வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேக நபர் பலரிடம் லட்சக் கணக்கில் பணத்தைப் பெற்றுகொண்டு அவர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.
அண்மையில் ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோமாகப் படகில் செல்ல முயற்சித்த போது கைது செய்யப்பட்டவர்களின் தகவலின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கடற்படை அதிகாரி உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

அதி விரைவு சேவை
உங்கள் உறவுகளுக்கு 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான அதிவிரைவு சேவை இப்பொழுது பெற்றுக்கொள்ள
உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
மிகக்குறைந்த கட்டணம்:
3 தொடக்கம் 5 நாட்களில் ஆன சேவை (தேவை ஏற்படின் 3 நாட்கள் சேவை கட்டணம் வேறுபடும்)
நீங்கள் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைக்கப்படும்.
இது போன்று மற்றைய நாடுகளுக்கும் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
முன்னணி பொதிகள் சேவை நிறுவனத்துக்கூடான சேவை
இந்த கட்டண சலுகை குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே
எங்கும் இல்லாத கட்டணம்
(உதாரணமாக) கனடா 1 Kg தொடக்கம் 10 Kg 1 Kg கட்டணம்
1300/- 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg -900/- மட்டும் அறவிடப்படும்
திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835 (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
TCN Express
இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 6

மாகாண சபை
தேர்தல்
உதயன் சிறப்புக் கண்ணோட்டம்

உதயன் செப்ரெம்பர் 13 2013 வியாழக்கிழமை பக்கங்கள்: பன்னிரண்டு

இனவாதம் போக இனிமேல் பிரதேசவாதம் கிளப்பாதீர்கள்

அரசுக்கு சரவணபவன் சாட்டையடி

வடமாகாணத்தில் வாக்குரிமை அற்றவர் விக்னேஸ்வரன். அவர் கொழும்பில் வாழ்பவர். வடக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறுகிறார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. அப்படியானால் நான் அமைச்சரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறேன். எங்கள் கடல் எல்லைக்குள் சீனாவும், ஜப்பானும் மீன்பிடிக்க என்ன தகுதியைக் கொண்டுள்ளன? இதற்கு அமைச்சர் பதில் கூறியாக வேண்டும்.

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாண சபைத் தேர்தலில் வாக்குக் கேட்பதற்காக வந்துள்ள அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தமது கைப்பொம்மைகளுக்காக இப்படி பிரதேசவாதம் பேசக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களது எதிர்காலம் கருதி தூர நோக்குடன் செயற்பட்டு வருகிறது என்பதை உணர்வுள்ள தமிழ் மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

அவர்களுக்கு நீங்கள் எதைக் கூறினாலும் பரவாயில்லை. காரணம் மக்கள் தமது முடிவை ஏற்கனவேவெடுத்துவிட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை நிதானமாகச் சிந்தித்துத்தான் வடக்கு தேர்தலில் போட்டியிடுவது. அதில் யாரைப் போட்டியிட வைப்பது போன்ற முடிவுகளை எடுத்தது.

முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை தேர்வு செய்தமைக்கும் உண்மையான பல காரணங்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் அரச தரப்புக்குச் சொல்லி தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எமக்கில்லை.

அமைச்சர் பஸில் கூறுகிறார், வடக்கு மாகாணத்தில் வாக்குரிமை அற்ற ஒருவர் தேர்தலில் முதலமைச்சராகப் போட்டியிடுகிறார் என்று.

வடக்கைச் சேர்ந்த ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தவில்லை என்று. அப்படியானால் தென்னிலங்கையில் வாக்குரிமை கொண்ட ஒருவர்தான் ஜனாதிபதியாகப் போட்டியிட முடியும் என்று இவர் சொல்கிறார் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் குடியுரிமை பெற்ற ஒருவர் கொண்டுள்ள தகுதிகளைக் கூட அறியாது பேசுகின்றார். சீனாவுக்கும், ஜப்பானுக்கும் கொழும்பை அடைவு வைத்து விட்டு வாழ்க்கை நடத்தும் அரசு பிரதியுபகாரமாக சீனர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் எமது கடலைத் தாரைவார்த்து கொடுத்துள்ளது. இது எந்த வகையில் நியாயமானது? இந்த நாட்டில் குடியுரிமையே இல்லாத சீனாக்காரர்கள் எமது கடலில் மீன் பிடிக்கலாம். விக்னேஸ்வரன் போட்டியிடக் கூடாதா? இதிலிருந்து நாம் ஒன்றை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். இனவாதம், பிரதேசவாதம் பேசி பிரிவினையை ஏற்படுத்துபவர்கள் யார் என்று. யாழ்ப்பாணம், [redacted] தென்னிலங்கை என்று வேறுபடுத்தும் இவர்கள் தான் எமக்குத் தீர்வு பெற்றுத்தரப் போகிறார்களா? இப்படிப் பிரிவினை பேசுபவர்களைத் தான் கடவுள்கள் என்று நம்பிக் கொண்டு தன்மானம் இழந்து செயற்படுகின்றனர் சிலர்.

இணக்க அரசியல் என்று கூறி சிங்களவர்களுக்கு எல்லாவற்றையும் தாரைவார்த்துகொடுத்துவிட்டுதமிழ் மக்களை இந்த நாட்டை விட்டு விரட்டவே இவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் உண்மை நிலையறிந்து வாக்களிக்க வேண்டும். மக்களை சூழ்ச்சியால் வெல்லலாம் என்று துடிக்கும் ஆளும் தரப்பு வேட்பாளர்களைப் புறக்கணித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பேராதரவு வழங்கி, தமிழனின் இருப்பைப் பலப்படுத்து வோம்- என்றார். (ஐ)

வடக்கு மாகாண எதிரணியாக ஐ.தே.கவை தெரிவு செய்யுங்கள்

அந்தக் கட்சியின் வேட்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பிரதான எதிரணியாக எம்மைத் தெரிவு செய்யுங்கள். அண்ணன் மகேஸ்வரன் செய்த பணியை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். இவ்வாறு ஜக்கிய தேசியக்கட்சி சார்பில் கிளிநொச்சியில் போட்டியிடும்வேட்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூர் கிட்டு பூங்காவில் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு எனது வாழ்த்துக்களை இந்த இடத்தில் தெரிவித்து கொள்கிறேன். அதேநேரம் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பிரதான எதிரணியாக எம்மைத் தெரிவு செய்யுங்கள்.

அண்ணன் மகேஸ்வரன் உயிரோடு இருக்கும்போது இரவு பகல் பாராது எந்நேரமும் மக்களுக்கான பணிகளைமுன்னெடுத்தார். அந்தப் பணிகளை நாம் தொடர்ந்து முன்னெடுக்க எமக்கு வாக்களியுங்கள்.

அற்ப சொற்ப சலுகைகளுக்காக நீங்கள் எவரும் அடிபணியக் கூடாது.

தமிழ் உணர்வோடு செயற்படும் நாம் உங்களுக்கான எமது சேவைகளை தொடர்ந்து முன்னெடுக்க எமக்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள் - என்றார். (ஐ-4)

இராணுவ பிடியில் இருந்து நிலங்களை மீட்டெடுப்போம்

வேட்பாளர் ஜெயசேகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

தமிழ் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாதவாறு கடல் பிரதேசங்களையும், நிலங்களையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டு அல்லற்படும் மக்களை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது.

அந்தப் பொறுப்பை தாம் நிறைவேற்ற மாகாண சபை அதிகாரங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

கொக்குவிலில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் போரினால் தமிழ் மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இத்தகைய பாதிப்புக்களிலிருந்து இன்றும் மீள முடியாது தவிக்கின்றனர். போரினால் உறவுகள், சொத்துக்களை இழந்ததுமட்டுமல்லாமல் அங்கவீனர்களாகவும் அநாதைகளாகவும் இருக்கின்றனர்.

இதற்கு மேலதிகமான தமிழ் மக்கள் தங்கள் வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வலி.வடக்கில் பொன் விளையும் பூமியென சொல்லப்படும் விவசாய நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மீன்பிடியிலும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களை மீட்டெடுக்க வேண்டிய பெரிய பொறுப்பு எங்களிடம் இருக்கின்றது. மாகாண சபை ஊடாக இதனை முதன்மைப்படுத்தி எனது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளேன். உயர்பாதுகாப்பு வலயங்களிலுள்ள காணிகள் மற்றும் மீள்குடியமர்வு தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் மாகாண சபையில் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமையும்.

தமிழினம் எதிர்நோக்கிய இழப்புகளுக்கும் இன்று தமிழினம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கும், மாகாண சபை தீர்வல்லாவிட்டாலும் மக்கள் விரும்புகின்றதனை எம்மால் சர்வதேசத்துக்குத் தெளிவாகவும் உறுதியாகவும் கூற முடியும்- என்றார். (ஐ-5)

வேட்பாளர் கஜதீபனை நிச்சயம் மாகாண சபைக்கு அனுப்புவோம்

தமிழரசுக் கட்சி யாழ். இளைஞரணி செயலர் கூளுரை

யாழ்ப்பாணம், செப்.13

வலி.வடக்கு, வலி.தெற்கு பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடும் தமிழரசுக் கட்சி இளைஞர் அணித் தலைவரும் ஆசிரியருமான பா.கஜதீபனை வெற்றிபெறச் செய்வது இளைஞர்களது கடமையாகும்.

இளமைத் துடிப்புடன் எங்களுக்காகக் குரல் கொடுத்து வரும் கஜதீபனை வெற்றி பெறச் செய்ய வேண்டியது அனைவரதும் பொறுப்பு.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இளைஞரணிச் செயலாளரும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளருமான ப.தர்ஷானந் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாற்றானின் ஆளுகைக்குட்பட்டு நாம் சொல்லொணாத் துன்பங்களுக்குமுகம்கொடுத்து வந்தோம்.

எமது சொந்தங்கள், தாங்கள் வாழ்ந்த, தவழ்ந்த பூர்வீக பூமியை விட்டுப் பிரிந்து 32 வருடங்கள் கடந்துவிட்டன.

இன்றைய இளைய தலைமுறை தமது மண்ணைப் பார்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். எமது மக்கள் மீண்டும் தமது பிரதேசங்களுக்குச் சென்று மகிழ்வுடன் வாழ எம்மை நாமே ஆளுகின்ற தமிழரசை நிறுவியாக வேண்டும்.

> **ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் இராஜதந்திர ரீதியாக எமது மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுக்காக குரல் கொடுக்கும் ஜனநாயகப் போராளியான கஜதீபனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.**

வலி.வடக்கு, வலி.தெற்குப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் இளைஞர் அணித் தலைவர் கஜதீபன் போட்டியிடுகின்றார். இவர் மட்டுமே தமிழரசுக் கட்சியின் சார்பில் இரு பிரதேசங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தி போட்டியிடுகின்றார்.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் இராஜதந்திர ரீதியாக எமது மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுக்காக குரல் கொடுக்கும் ஜனநாயகப் போராளியான கஜதீபனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

மக்கள் அனுபவித்த அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமாகவிருந்த இராணுவ வல்லாதிக்கத்துக்கு எதிராக எமது உணர்வுகளை ஜனநாயக ரீதியாகப் பிரயோகித்து இராணுவ அட்க்குமுறைக்கு முடிவுகட்டமாகாண சபையை நாம் பயன்படுத்த வேண்டும்.

இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தேர்வு செய்வதுடன் இளைஞரணித் தலைவரையும் தேர்வு செய்ய வேண்டும்.

நான் குற்றத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது எனது விடுதலைக்காகத் துணிச்சலோடு குரல் கொடுத்துப் போராடியவர் அண்ணன் கஜதீபன்.

காணாமற்போன உறவுகளை மீட்பதற்கும் சிறையில் வாடும் இளைஞர்களுக்கு மறுவாழ்வளித்து அவர்களது விடுதலைக்காகக் குரல் கொடுக்கவும் இந்த மாகாண சபையை பலப்படுத்துவோம்- என்றுள்ளது. (ஐ-5)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013

யாழ் மாவட்டம்

அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)

அன்பானவர்களே!

உரிமைகளை பெற்றுக்
கொள்வதற்கு நான்
தகுதியானவனல்ல.
சாத்தியமான வழிகளில்
உரிமைகளுக்காக முயற்சிப்போம்.
ஆனால் உரிமைகளை
பெறுவதற்கான கனவில்,
காத்திருப்பில் மீண்டும்,
மீண்டும் எமது வாழ்வை
தொலைத்துக் கொண்டிருக்கலாமா?
சிந்தியுங்கள் அபிவிருத்தி பாதையில்
எமது வாழ்வை வளப்படுத்துவதனூடே
உரிமைகளைச் சாத்தியமாக்குவதே
புத்திசாலித்தனமானதாகும்.

1

எங்களின் நேர்மை
உங்களின் நம்பிக்கை

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் முல்லைத்தீவு செம்மலையில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாலா

நிர்வாகத் தலைமைத்துவம் விக்னேஸ்வரனுக்கு உள்ளது

கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டியது தமிழ் மக்களின் கடமை என்கிறது அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம்

வவுனியா, செப்.13

" வட மாகாணத்தில் சிறந்த நிர் வாகக் கட்டமைப்பை ஏற்படுத் தக் கூடிய தலைமைய்ாக முத லமைச்சர் வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் திகழ்கின் றார். எனவே நாம் அதற்கான ஆணையை வழங்க வேண் டும்."

இவ்வாறு தெரிவித்துள்ளார் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் லோகநாதன்

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத் துவ சபைக் கூட்டம் கல்முனை சனசமூக நிலைய மண்டபத் தில் நடைபெற்றது.

இதல் கலந்துகொண்டு உரை யாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

" வட மாகாண சபைத் தேர்தல் பரப்புரைகள் சூடு பிடித்துள்ள இந்த நாள்களில் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் நமது தொழிற்சங்கம், தமது நிலைப் பாட்டை தெளிவுபடுத்த வேண் டிய நிலையிலுள்ளது.

வடக்கு மக்கள் எதிர்நோக்கி யுள்ள மாகாண சபைத் தேர் தல் நமது உரிமைப் போராட்ட களத்தில் முக்கியத்துவம் பெற் றிருக்கின்றது.

சிறுபான்மை சமூகங்கள் இந்த நாட்டில் அடக்கி, ஒடுக்கப்பட்டு, வாழும் உரிமையைக் கூடப் பறிகொடுக்க வேண்டிய அவ லத்திற்கு உள்ளாகியிருக்கும் நிலையில், தமிழ் மக்கள் தமது உணர்வுகளையும், உரிமைக் கான போராட்ட நிலைமைகளை யும் சர்வதேசம் வரை எடுத்தி யம்புவதற்கு இதவே சந்தர்ப்ப மாக அமைந்துள்ளது.

எனவே வடக்கில் சிறந்த நிர் வாகக் கட்டமைப்புடன், நமக் கென்ற நிலையான ஆட்சி ஒன்றை நிலை நிறுத்துவதற்கு வடக்கு மக்கள் தமிழத் தேசி யக் கூட்டமைப்பின் பின்னால்

> **" பலமான எதிர்க் கட்சி ஒன்று நாட்டில் இல்லாதது துரதிஷ்டமே, கழுத்தைப் பிடித்து தள்ளினா லும் அரசை விட்டு வெளியேற மாட் டோமென, அடம்பிடிக்கும் ஒரு சில சிறுபான்மை தலைமை களும் மக்கள் பிரச்சினையை விற்க முற்படுகின்றனர்.**

ஏகோபித்து அணி திரள வேண் டும்.

நீதி,நேர்மை

வட மாகாண சபைத் தேர்தல் நீதி, நேர்மையுடன் நடத்தப்ப டுமா? என்ற சந்தேகம் இன்று பல தரப்பிலிருந்தும் எழுப்பப் பட்டு வருகின்றது.

எனவே படைக் குவிப்பு, அரச வளங்களைத் தேர்தல் பரப்புரை களுக்குப் பயன்படுத்தல் என் பவற்றைத் தவிர்த்து வடக்கில் மட்டுமன்றி தேர்தல் நடை பெறும் மூன்று மாகாணங் களிலும் நீதி, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள் கிறோம்.

பொதுபலசேனாவின் மட மைத்தனம்

கூட்டமைப்பின் தலைவர் சம் பந்தனைக் கைது செய்து சிறை யில் அடைக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் கருத்து வெளியிடும் பொது பல சேனவின் பொதுச் செயலாளர் கலகொட அததே ஞானசார தேரர் தெரிவித்துள் ளார்.

உண்மையில் சிறையிலடைக் கப்பட வேண்டியவர் ஞானசார தேரரேதான்.

நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளன் போல் உரு வாகி, சிறுபான்மை சமூகங் களுக்கெதிராக நாட்டில் மதப் பயங்கரவாதத்தை முன்னெ டுத்து மக்களிடையே குழப்ப நிலையை உரு வாக்கி வருபவர் இவர். தமிழ் மக்கள் குறித்துப் பேச இவருக்கு எந்த அருகதை யும் கிடையாது.

அமெரிக்கா, இஸ்ரேல், நோர் வேயிடம் நிதி பெற்று ஞான சார தேரர் முஸ்லிம்களுக்கு எதிரா கச் சதி செய்கிறார் என்ற தகவல் கூட இப்பொழுது வெளியாகி யிருக்கின்றது.

எனவே சம்பந்தனைக் கைது செய்து சிறையிலடைக்கவேண்டு மென்ற கொக்கரிப்பை ஞான சார தேரர் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பலமான எதிர்க் கட்சி ஒன்று நாட்டில் இல்லாதது துரதிஷ்டமே, கழுத்தைப் பிடித்து தள்ளினா லும் அரசை விட்டு வெளியேற மாட் டோமென அடம்பிடிக்கும் ஒருசிலசிறுபான்மை தலைமை களும் மக்கள் பிரச்சினையை விற்க முற்படுகின்றனர். இத்த கைய துரோகிகளை இனங் கண்டு தூர விலக்கவேண் டும். இதற்கான சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்கு இப்போது கிடைத் துள்ளது - என்றார். (ஜ-30)

பாவத்துக்கு பரிகாரம் தேடுபவர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளா?

கேள்வி எழுப்புகிறார் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், செப். 13

விமானத் தாக்குதல் மூலம் சுன்னாகம் மின்சார நிலை யத்தைஅழித்தவர்கள், கோயில் களை அழித்தவர்கள், பாலங் களைத் தரைமட்ட மாக்கிய வர்கள் இன்று பிரதியுபகார மாக அவற்றைத் தாமே புனர மைக்கின்றார்கள். இத னைக் கணக்குக் காட்டி அபிவிருத் தியாளர்கள் தாமே எனக் கூறி மக்களை ஏமாற்றி வாக்குக் கேட்கின்றனர். தமிழ் மக் களுக்கு எதிராக சொல்ல முடியாத் துன்பங்களைத் தந்துவிட்டு இன்று தாம் எதையும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். இவர் களை எமது பிரதிநிதிகள் விரட்டியடிக்க வேண்டும் என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன்.

தமிழரசுக் கட்சி இளைஞர் அணித் தலைவரும் மாகாண சபைத் தேர்தல் வேட்பாளரு மாகிய பா.கஜதீபனுக்கு ஆதர வாக புன்னாலைக்கட்டு வன், ஈவினைப் பகுதியில் நடத்தப்பட்ட தேர்தல் பரப்பு ரைக் கூட்டத்தில் உரையாற் றிய அவர் மேலும் தெரிவித்த தாவது;

1956 ஆம் ஆண்டு ஒரே இரவில் தனிச் சிங்கள சட்டத் தைக் கொண்டு வந்தவர் களும், 1958 இல் தென்பகுதி யில் தமிழர்களை கொலை

> **" சர்வதேசம் உற்றுப் பார்க்கும் அளவுக்கு கொடுமைகளைச் செய்துவிட்டு தமிழ் மக்கள் கொல்லப்படவில்லை, குழந் தைகள் அநாதைகளாக் கப்பட வில்லை என்று கூறுகின்றது அரசு.**

செய்தவர்களும், பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களை கிழித்தெறிந்த வர்களே ஜக்கிய மக்கள் சுதந் திர முன்னணி குழுவினரே. ஆசியாவில் தலைசிறந்த நூலகமான யாழ். நூல கத்தை எரித்தவர்களும், 1983 இல் தமிழர் வாழ்வில் கறைபடிந்த கறுப்பு ஜூலைப் படுகொலையாளர்களுமே ஜக்கிய தேசியக் கட்சியினர். எமது பிரதேசத்துக்கு ஒளியூட் டிய சுன்னாகம் மின்சார நிலையத்தை விமானக் குண் டுத் தாக்குதல் மூலம் தரை மட்டமாக்கினர், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தவர் களை யும், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய திருவிழா வின் போதும் இதே விமானத் தாக்குதலில் எங்களின் உற வுகள் கொல்லப்பட்டார்கள். இப்படியெல்லாம் கொடுமை களைச் செய்துவிட்டு இன்று வடக்கில் வீதிகளையும் கட்ட டங்கள் சிலவற்றையும் புனர மைத்துவிட்டு தாமே தமிழ் மக்களது இரட்சகர்கள் என்று உரிமை கொண்டாட முற் படுகின்றனர் இவர்கள்.

முடிந்தால் இவர்கள் மக் களின் வாழ்வுரிமைப் பிரச்சி னையாகியுள்ள 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணியை மீட் டுக் கொடுக்கட்டும் பார்க்க லாம்?

சர்வதேசம் உற்றுப் பார்க்கும் அளவுக்கு கொடுமைகளைச் செய்துவிட்டு தமிழ் மக்கள் கொல்லப்படவில்லை, குழந் தைகள் அநாதைகளாக் கப்பட வில்லை என்று கூறுகின்றார் கள். அதுமட்டுமல்லாது எமது மக்கள் மத்தியில் வாக்குக் கேட்டு வந்திருக்கி றார்கள்.

தன்மானத் தமிழர்கள் எதை யும் எளிதில் மறக்க மாட்டார் கள். இவர்களுக்கு இந்தத் தேர்தலில் நல்ல பாடம் புகட்டி இவர்களை மண்ணைவை விட்டு விரட்டியடிப்பர் என்பது உறுதி - என்றார். (ஜ-5)

ஐ.தே.கவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம்

வடமேல் மாகாணசபைத் தேர்தலுக் கான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பரப்புரைக் கூட்டம் குருநாகல் மாவட்டத்தின் இரண்டாவது பெரு நகரான குளியாப்பிட்டி யில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற உள்ளது.

இதில் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் விசேட பிரமுகர் களாக கலந்துகொள்ள உள்ளனர்.

பரப்புரையை நாடாளுமன்ற உறுப் பினர்களான சஜித் பிரேமதாஸ, ரவி கருணாநாயக்க, கயந்த கருணாதிலக, ஹரீன் பெர்னாண்டோ, ரஞ்சன் ராமநாயக்க, ரோஸி சேனாநாயக்க ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்தக் கூட்டம் குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் அகிலவிராஜ் காரியசம் தலை மையில் நடைபெறும். (ஜ-200)

அபிவிருத்திக்குப்பின் தேசியம் தானாகவே உருவாகுமாம்

நேர்காணல்
● கி. பிருதிவி

எதிர்வரும்வடமாகாணசபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் அரசு தரப்பு வேட்பாளராக போட்டியிடும் வை. தவநாதன் உதயனுக்கு வழங்கிய நேர்காணல் இங்கே பிரசுரமாகிறது.

கே: தேர்தலில் பங்கு கொள்ள தங்களை தூண்டிய காரணி யென்ன?

ப: கடந்த 25 ஆண்டுகளாக போராட்ட அரசியலில் செயற்பட்டு வந்ததன் காரணமாகவும் 1980களின் ஆரம்பத்தில் மக்களின் வர்க்க ரீதியானவிடுதலைக்கானபோராட்டங்களை ஆரம்பித்தவர்களில் ஒருவன் என்ற காரணத்தாலும் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறேன். மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்ட 1987 களின் பின்னர் மக்களின்அடிப்படைத்தேவைகளை படிப்படியாக பெற் றுக் கொள்ளலாம் என்பதை 90 களின் ஆரம்பத்திலிருந்தே எமது கட்சி வலியுறுத்தி வந்துள்ளது. எனவேமாகாண சபைத் தேர்தலில் பங்கு கொள்ளக்கூடிய தகுதியுடைய ஒரே ஒரு கட்சி எமது கட்சியே. இதன் அங்கத்துவன் என்ற ரீதியில் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

கே: மாகாண சபை எவ்வாறு தமிழர்களின் அரசியல்அபிலாஷைகளை நிறைவேற்றும்?

ப: மாகாண சபை மூலம் மக்களின்அடிப்படை அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறோம்.

ஆரம்பத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபை தற்காலிக மாக இணைந்த மாகாண சபையாக இருந்தது.

தமிழ்த் தரப்புகள் அதனை ஏற்றிருந்த தால் அது நிரந்தர இணைப்பாக மாற்றப்பட்டிருக்கும். குறிப்பாகத் தமிழ்த் தரப்பில் ஒரு தரப்பு அதை ஏற்கவில்லை. இன்னொரு தரப்பு ஏற்று மாகாண சபையைச் சீரழித்தது.

இவ்விரண்டு தரப்புக்களும் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தேர்தலில்போட்டியிடுகின்றன. மாகாண சபை முறைமைஎன்பதுசட்ட பூர்வமானமுறைமை. இது இலங்கை அரசியல் யாப்பு முறைமையால்ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம்.

பெரும்பான்மை இன மக்களும் அதனை ஏற்றுக் கொண்டு ஏனைய மாகாணங் களில் நடைமுறைப் படுத்தியுள்ளனர்.

எல்லோராலும் ஏற் றுக் கொள்ளப்பட்ட அ ர சமைப் பில் உள்ள விடயத்தை வைத்துக் கொண்டு படிப் படியாக தமிழர் களின் அடிப் படைப் பிரச்சினைகளையும் உரிமைப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியுமென்ற நம் பிக்கை எமது கட்சிக் குண்டு.

கே: போலித் தேசியவாதிகள் என்று நீங்கள் சில ரைக் கூறுகிறீர்கள். அப்படியானால் உண்மையான தேசிய வாதி கள் யார்?

ப: சம்மந்தப்பட்ட இனம் முதலில் தனது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற் கான ஏது நிலைகள் இருக்க வேண்டும்.

அபிவிருத்தி இல்லாமல்கல்வி யில் வளர்ச்சியில்லாமல் ஏனைய விடையங் களில் எல்லாம் நிறைவு பெறாமல் தேசியம் பற்றி மட்டும் பேசிக் கொண்டு அதனை அடைந்து விடமுடி யாது.

இந்த நிலைப் பாட்டில் உள்ள வர்களையே போலித் தேசிய வாதிகள் என் கிறேன். நாம் இவை எல்லா வற்றையும் மக்களுக்குப் பெற்று கொடுப்போம். அதன் பின் தேசியம் தானாக உருவாகும்.

கே: நீங்கள மாகாண சபை உறுப்பினரா கத் தெரிவு செய்யப் பட்டால்....?

ப: மாகாண சபை யில் உள்ள அதி காரங் களில் கல்வி, சுகாதா ரம், உள்ளூராட்சி என ஐந்து அமைச்சுக்கள் எமக்கு கீழ் வருகின் றன. கல்வித்துறையை முன்னேற்றுவதுதான் எனது நோக்கமாக இருக்கும்.

அபிவிருத்தியும் அரசியலும் சமமாகச் செல்லவேண்டும்

இணக்கமே இதற்கு வழி என்கிறார் அரசதரப்பு வேட்பாளர்

அக்கராயன், செப். 13

அபிவிருத்தியும் அரசியலும் சமாந்தரமாக சென்றால்தான் மக்களின் வாழ்வில் நிலையான சமாதானம் ஏற்படும் என அரச தரப்பு வேட்பாளராக கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் கந்தசாமி பிரகலாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க மூன்று சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் அந்தச் சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போயின.

ஒன்று இலங்கை இந்திய ஒப்பந்தம், மற்றது சமஷ்டி வடிவிலான அதிகார பரவலாக்கம். மூன்றாவது 2002ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம். இந்த மூன்று சந்தர்ப்பங்களும் தவற விடப்பட்டன.

பின்பு போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்போது மீள் குடியேற்றத்தின் பின்பு அபிவிருத்தியில் வளர்ச்சி கண்டு வருகிறோம்.

அபிவிருத்தியில் முழுமை பெற இன்னமும் 10 ஆண்டுகள்எடுக்கும். எதிர்ப்பு அரசியல் எங்களை நிர்க்கதியாக்கியது.

தற்போது உரிமையைக் கேட்கமுடியாத நிலையில் உள்ளோம். தமிழ் மக்களுக்கு உரிமையும் தேவை அபிவிருத்தியும் தேவை. இரண்டையும் சமமாக பெற்றுக் கொள்வதற்கு இணக்கமான வழிதான் சாத்தியம். -என்றார். (ஈ-18)

கிளிநொச்சி தட்டுவன்கொட்டி கண்ணகை நகரில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வேட்பாளர் குருகுலராஜா உரையாற்றுவதையும் கிராம மக்கள் அணிதிரண்டு ஆதரவு தெரிவிப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)

இராணுவ ஆட்சியை ஒழிப்பதற்கு தேர்தலில் வெற்றிபெறுவது அவசியம்

கிளிநொச்சி வேட்பாளர் குருகுலராஜா

மக்கள் மத்தியில் பயப்பீதியை உருவாக்கி அவர்களை எப் போதுமே ஓர் அழுத்தத் துக்குள் வைத்திருக்க வேண் டும் என்றநோக்குடன் இராணு வம் ஒவ் வொரு நிமிடமும் பணி யாற்றி வருகிறது. இந்த நிலைமாறவேண்டும். வடக்கு மாகாணசபை அதிகாரங் களில் சில மக்களின் அமைதி வாழ்வுக்கு ஏதுவாக அமை யும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் த.குருகுலராஜா. கிளிநொச்சி தட்டுவன்கொட்டி கண்ணகை நகரில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் இந்த நாட்டில் சுதந் திரமாக வாழ வேண்டும். இந்தக் காரணத்துக்காக முப்பது ஆண்டுகள் எங்கள் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினர். ஆனால் தமிழ் மக்களுக்கு தனிநாடு என்ற

பதத்தையே விரும்பாத அரசு எமது போராட்டத்தை ஒடுக்கியது. இப்போது வாக்கு என்ற ஆயுதம் மட்டுமே எங்கள் கைகளில் உள்ளது. இந்த ஆயுதத்தைக் கொண்டு மாகாண சபையை நாம் வென்றாகவேண்டும்.

வடக்கு மாகாண சபையைக் கொண்டு, நாங்கள் எமது உரிமைக்காகக் குரல் கொடுக் கப்போகிறோம்.

எமது உரிமைகளை வென் றெடுப் பதே எங்கள் முதற் கடமை. புதிய ஒரு வாழ்வை அமைத்துக் கொள்வதற் காகவும் சுயாட்சியை பெற்றுக் கொள்வதற்காகவும் நாங்கள் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவது அவசியம். வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து உரிமையை நிலைநாட்டு வோம் -என்றார். (ஐ-18)

ஒரே மின் மார்க்கம் நாடு...

தீவிரவாதிகளால்
பாதிப்பிற்கு உள்ளான
வடக்கு மற்றும் தெற்கை இணைத்து
மின் செலுத்துகை
மார்க்க முறைமை
நிர்மாணிக்கப்பட்டு உள்ளது.

இலங்கை சோசலிச குடியரசின் ஜனாதிபதி
அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களால்

2013.09.14 ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு
உதிக்கும் சுபமுகூர்த்தத்தில்

தேசிய மின் சக்தி முறைமை
யாழ்ப்பாண குடாநாட்டிற்கு இணைக்கப்பட உள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
மின்வலு சக்தி அமைச்சு
இலங்கை மின்சார சபை

எங்கள் மண் பறிபோதலை தொடர்ந்து இனியும் இடமளிக்கலாமா?





எங்கள் மண்
உங்கள் தெரிவு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

X 10

க.வி.விக்னேஸ்வரன்

வட மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கும் தகுதியுடைய, கொழும்பில் வசிக்கும் வாக்காளர்களுக்கான விசேட கலந்துரையாடல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையினரின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் மாலை வெள்ளவத்தையில் அமைந்துள்ள அக்ஷயா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ,சிரேஷ்ட சட்டத்தரணிகளான சி.வி. விவேகானந்தன், இராஜகுலேந்திரா, அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் உட்பட பலர் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

கூட்டமைப்புக்கு ஒன்றும் தெரியாது

சொல்பவர் அமைச்சர் பஸில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரிடம் மாகாண சபையை நிர்வகிக்கக்கூடிய பலமோ திறமையோ மக்கள் மீதான அக்கறையோ இல்லை என்பதற்கு அப்பால் அவர் களால் ஆட்சியை சரியான முறையில் நிர்வகிக்க முடி யாது. இவ்வாறு விமர்சித்துள் ளார் அமைச்சர் பஸில்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் நேற்று முன்தினம் வேலணை ஐய னார் விளையாட்டுக்கழகத் திடலில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் 8 மாகாணங் களிலும் அந்தந்த மாகாண மக்களால் தெரிவு செய்யப் பட்டபிரதிநிதிகளினால்மாகாண சபைகள் நிர்வகிக்கப்பட்டு வரும்நிலையில்வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்தி நிர்வாகத்தை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ திட்ட மிட்டுள்ளார்.

இன்று நாட்டுமக்கள் அச்ச மின்றி வாழக்கூடிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்களை விடவும் வடமாகாணத்தின் அபிவிருத்திற்காக அரசு அதிகளவான நிதியை ஒதுக்கீடு செய்து பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங் களை முன்னெடுத்து வரு கின்றது.

மக்களால் தெரிவு செய்யப் படும் பிரதிநிதிகளால் நிர்வகிக் கப்படவுள்ள இந்த மாகாண சபையூடாக நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மை களையும் அதனூடான மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு பலம், சேவை, திறமை கொண்ட நிதிகளை நீங்கள் தெரிவு செய்ய வேண் டும்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினரிடம் மாகாண சபையை நிர்வகிக்கக்கூடிய பலமோ திறமையோ மக்கள் மீதான அக்கறையோ இல்லை. அவர்களால் ஆட்சியை சரி யான முறையில் நிர்வகிக்க முடியாது .

கடந்த காலங்களில் மக்க ளால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரின் உள்ளூராட்சி சபைகள் சரியானமுறை யில் இயங்கவில்லை.

யாழ் மாவட்டத்தில் குறிப் பாக தீவகத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மத்திய அரசின் நிதி யுதவியு டனேயே முன்னெடுத்து வரு கின்றோம்.

குறிப்பாக தென்பகுதியிலி ருந்து லக்சபானா மின்சாரம் விநியோகத் திட்டம் நிறைவு பெற்றுள்ள நிலையில் எதிர் வரும் 14ஆம் திகதி சுன் னாகத்திலுள்ள மின்பரி மாற்று நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

கடந்த காலங்களில் உங்க ளால் உங்களது விருப்பத் துக்கு ஏற்ப ஒரு தலைமைத் துவத்தைத் தெரிவு செய்ய முடியாத நிலையிருந்தது. தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனை நீங்கள் சரிவர பயன்படுத்தி சரியான பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியி னரோ சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளோ தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினரோ இன்றைய அமைதிச் சூழ

லைப் பெற்றுத்தந்தவர்கள் அல்லர். இந்த அமைதியை மட்டுமல்லாது நீங்கள் விரும்பும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான உரி மையையும் பெற்றுத்தந்த வர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே -என்றார். (ஜ)

ஈ.பி.டி.பி. இல்லை என்றால் வடக்கில் அபிவிருத்தியை காணமுடியாதாம்

ஐக்கியமக்கள்சுதந்திரமுன்னணி யும் மக்களின் மேம்பாடு நோக் கிய அரசியலை முன்னெடுக் கத் தவறியிருப்பின் வடமாகா ணம் அபிவிருத்திசார் மேம் பாட்டை எட்டுவதில் தோல்வி கண்டிருக்கும் என நாடாளு மன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, விவேகானந்தா நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் அரசின் பங்காளிக் கட்சி யாக இருந்து, மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் அடிப் படையில் கிடைத்த அதிகாரத் தைக் கொண்டு மக்களுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவ தற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

கடந்த 22 வருடங்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்க அரசியலைக் கடைப் பிடித்து வந்துள்ளார். இந்த அரசியல் அணுகுமுறை எமது பிரதேச அபிவிருத்திக்கும் மக்க ளின் மேம்பாட்டிற்கும் மிகப் பெரும் பங்காற்றியிருக்கின்றது. எமது அபிவிருத்தி அரசியல் பாதை என்பது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வழிமுறையே வெற்றியும் கண்டிருக்கின்றது.

இன்று சர்வதேசம்கூட அபிவி ருத்தி அரசியலையே ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சியும் இவ்வாறான அரசி யலைமுன்னெடுத்தவறியிருப் பின் வடமாகாணம் அபிவிருத்தி சார் மேம்பாட்டை எட்டுவதில் தோல்வி கண்டிருக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மூன்றரை வருடங்களாகத் தான் மக்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கும் பிரதேச கட்டுமான மேம்பாட்டுக்கும் ஏற்ற பங்களிப்புயைச் செய்யக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. இந்த மூன்றரை ஆண்டுகளுக்குள் முற்றுமுழு தாக அழிந்துபோன கிளி நொச்சி மாவட்டம் பெரும் முன் னேற்றத்தைக் கண்டிருக்கின் றது. மக்களின் வாழ்க்கையில் மிகப்பெரும் மாற்றங்களும் முன் னேற்றங்களும் ஏற்பட்டிருக் கின்றன. - என்றார். (ஜ-18)

புலிகள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்பதற்கே விசார்ணை

விளக்கமளிக்கிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், செப்.13

தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றமற்றவர்கள் என்பதை நீரூபிப்பதற்காகவே அவர் கள் மீதும் சர்வதேச விசா ரணையை நாம் கோரியுள் ளோம். தேர்தல் விஞ் ஞாபனங்களை வெளியிட முடியாதவர்கள் எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை பிழையாக அர்த்தப்படுத்தக் கூடாது என்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் முன் னாள் நாடாளுமன்ற உறுப் பினரும், வேட்பாளருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்,

வடமராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப் பில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமது நிலைப்பாடுகள், கொள் கைகள் தொடர்பில் மக்க ளுக்கு தெரியப்படுத்த திராணி யற்ற கோழைகளாக, சிங் களக் கட்சிகளுடன் ஒட்டியி ருந்து கொண்டு எமது தேர்தல் விஞ்ஞானபத்தை குறை கூறக் கூடாது.

தமிழ் மக்களின் தீர்வுத் திட் டத்தை நோக்கிய தாகவே எமது தேர்தல் விஞ்ஞாப னம் தயாரிக்கப்பட் டுள் ளது.

நாம் அரசு மீதும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் சர்வ தேச போர்க்குற்ற விசாரணையை எமது தேர்தல் விஞ் ஞாபனத்தில் கோரி யுள்ளோம்.

விசாரணை என் பது ஒரு தரப்பை மட்டும் விசாரிப் பதல்ல. சம்பந்தப் பட்ட இரு தரப்பின ரையுமே விசா ரணை செய்ய வேண்டும்.

அப் போதுதான் குற்றவாளி யார் என்பது தெரிய வரும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றமற்றவர்கள் என்று சர்வதேச விசாரணையின் இறுதியில் தெரியவரும். இதற்காகவே நாம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் சர்வதேச போர்க் குற்ற விசா ரணையை கோரினோம்.

நாம் ஒரு போதும் தமிழீழ விடுதலைப்புலிகளைக் காட்டிக் கொடுக்கவில்லை.

விசாரணை என் பது ஒரு தரப்பை மட்டும் விசாரிப் பதல்ல. சம்பந்தப் பட்ட இரு தரப்பின ரையுமே விசா ரணை செய்ய வேண்டும். அப் போதுதான் குற்ற வாளி யார் என்பது தெரியவரும்.

சிங்கள அரச கட்சிகளோடு கூடவிருந்து கொண்டு இராணுவத்தினருடன் சேர்ந்த எம் மக்களை நாம் சுட்டுக் கொல்லவில்லை. -என்றார். (ஐ-5)

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் வேலணை துறையூர் ஜயனார் சனசமூக நிலயத்தில் பரப்புரையில் ஈடுபட்டார். (ஜ)

முஸ்லிம்களது எதிர்காலத்துக்காக அரசின் கரத்தைப் பலப்படுத்துக

வேட்பாளர் சுபியான் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

எட்டாயிரம் குடும்பங்கள் வாழ்ந்த முஸ்லிம் பகுதியில் இன்று ஆயிரத்துக்கும் குறைவான குடும்பங்களே மீள் குடியமர்ந்துள்ளன. இடம் பெயர்ந்த அனைத்து முஸ்லிம்களும் இங்கு குடியமர ஐ.ம.சு. முன்னணி ஆட்சியமைத்தால் மட்டுமே முடியும். அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குங்கள் என ஆளுந்தரப்பு வேட்பாளர் மௌலவி சுபியான் தெரிவித்துள்ளார்.

யாழ். நாவலர் வீதியில் உள்ள முஸ்லிம் மக்கள் பணிமனையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐ.ம.சு. முன்னணி கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்த மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தி கட்டம் கட்டமாக அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு ஜனாதிபதியே காரணம்.

> எமது மக்கள் மாகாண சபையை ஆளமுடியாமல் இருந்த சந்தர்ப்பம் இப்போது நீங்கிவிட்டது. தேர்தல் நடத்தி, மக்கள் தமக்கென ஒரு பிரதி நிதியைத் தெரிவு செய்யும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

எமது மக்கள் மாகாண சபையை ஆளமுடியாமல் இருந்த சந்தர்ப்பம் இப்போது நீங்கிவிட்டது. தேர்தல் நடத்தி, மக்கள் தமக்கென ஒரு பிரதி நிதியைத் தெரிவு செய்யும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

மீள்குடியேற்றம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்ய அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டியது அவசியம். ஒரு பலமான இலங்கையைக் கட்டியெழுப்பவும் வடக்கின் வளர்ச்சிக்காகவும் துரித அபிவிருத்தித் திட்டங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஏற்படுத்தியுள்ளார்.

மீள்குடியேற்றம் வாழ்வாதார உதவிகளுக்கான எனது கோரிக்கைகளையேற்று அரசு அபிவிருத்திப் பணிகளுக்கு உதவியுள்ளது.

ஐக்கிய உணர்வுடன் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் எனக்கும் ஆதரவை நல்குமாறு கேட்கின்றேன். - என்றார். (ஜ-7)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எமது உயிரை உடைமைகளை உரிமைகளை
நாமே பாதுகாக்க...

X 4

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

குறுகிய காலத்தில் மக்களை மீளக்குடியமர்த்தியது அரசே

பெருமை பேசுகிறார் பஸில்

> வடமாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்ற முடியாமல் இருந் தது. ஏனைய மக்களுக்குச் செய்தது போன்று உங்க ளுக்கு உதவி செய்ய சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது. இதற்காக வருத்தப் படுகின் றேன்.

யாழ்ப்பாணம், செப்.13

உலக வரலாற்றில் குறுகிய காலத்தில் பெரிய அளவில் மக்களை மீளக்குடி யேற்றி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கியது மஹிந்த அரசு மட்டுமே. நவ நீதம்பிள்ளையும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை நாவலர் வீதியில் உள்ள முஸ்லிம் மக்கள் பணிமனையில் வடமாகாண சபைத் தேர்தலில் ஐ.ம.சு.முன்னணி வேட்பாளராகப் போட்டியிடும் மௌலவி சுபியானுக்கு ஆதரவாக நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

20 வருடங்களுக்கு முன் இங்கு வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டதை நினைவுகூர விரும்பவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் நான்கு வருடங்களின் பின் சூழ்நிலையில் மாற்றம் தென்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்ற முடியாமல் இருந்தது. ஏனைய மக்களுக்குச் செய்தது போன்று உங்களுக்கு உதவி செய்ய சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது. இதற்காக வருத்தப் படுகின் றேன்.

இப்போது உங்களது தேவைகளை நிறைவேற்றக் கூடிய தான ஒரு சந்தர்ப்பம் வந்துள்ளது. உங்களை மீள்குடியேற்றும் பொறுப்பு ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இன, மத பேதங்களை வளர்த்து அதன் மூலம் வெற்றி பெறவேண்டும் என்ற தேவை ஜனாதிபதிக்கு இல்லை. அனைவருக்கும் நிம்மதியான வாழ்க்கையை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே எமது கடமை. நீங்கள் சரியான முடிவை எடுப்பதன் மூலம் உங்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்- என்றார். (ஜ-7)

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தேர்தல் பரப்புரை

பரப்புரைக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும்

இடம் : அண்ணா சன சமூகநிலைய முன்றல் - பெரியபுலவு, சுழிபுரம்.
காலம் : இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி

வரவேற்புரை: திருமதி என். ஐங்கரன் (தவிசாளர் - வலி மேற்கு பிரதேச சபை)

சிறப்புரைகள்:

கௌரவ இரா. சம்பந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ மாவை.சேனாதிராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ க.வி. விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வேட்பாளர்)
கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ எம்.கே. சிவாஜிலிங்கம் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

யாழ்.பிரபல இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சி

அன்புடன் அழைக்கின்றோம்.

TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

முன்னிலை சோஷலிஸ கட்சி ஆதரவாளர்களால் நேற்று யாழ்.மத்திய பஸ் தரிப்பிடத்தில் பொதுமக்களுக்கு தேர்தல் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. (2-14)

இனவாதத்தை மக்களிடம் விதைத்து வாக்குக் கொள்ளையிடுகிறது மு.கா.

தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அமீர் அலி குற்றச்சாட்டு

இனவாதப் பேச்சுகளைப் பேசியே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையில் ஆசனங்களைக் கைப்பற்றியது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

எனினும், கிழக்கு முதலமைச்சர் பதவி அமீர் அலிக்கு வழங்கக்கூடாது என்ற நிபந்தனையை மாத்திரமே விதித்து அரசுக்கு கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடும் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு புத்தளம் நகரில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

வேண்டுமாயின், முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களியுங்கள், முஸ்லிம் பள்ளிகள் உடைக்கப்பட வேண்டுமாயின் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களியுங்கள் எனத் தெரிவித்து வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் இன்று மேற்கூறிய ஒரேயோரு நிபந்தனையுடன் அரசுக்கு ஆதரவளித்துள்ளது என அவர் தெரிவித்தார்.

அரசமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவளித்துவிட்டு புத்தளத்திற்கு வந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம்பாவமன்னிப்புகேட்கிறது. அந்தளவு தூர திருஷ்டியற்ற ஒரு தலைமைத்துவமாக அந்தக் கட்சியின் தலைமைத்துவம் மாறியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மலையக சமூகத்தின் வளர்ச்சி ஆரோக்கியமாக இருக்க வேண்டும்

ம.ம.மு. தலைவி சாந்தினிதேவி வலியுறுத்து

"தெளிவான அரசியல் கருத்துகளோடு இணைந்த வளர்ச்சிதான் ஒரு சமூகத்தின் முழுமையானதும், ஆரோக்கியமானதுமான வளர்ச்சியாகும்."

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவியும், ஜனாதிபதி ஆலோசகருமான திருமதி சாந்தினிதேவி சந்திரசேகரன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மாகாணசபை வேட்பாளர் குமார், வட்டவளையில் ஏற்பாடு செய்திருந்த பல்வேறு மக்கள் சந்திப்புகளில் சாந்தினி தேவி தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

"வட்டவளையைச் சேர்ந்த வேட்பாளர் குமாரைப் போன்று துடிப்புள்ள பல இளைஞர்கள் அமரர் சந்திரசேகரனின் கொள்கையை ஏற்று முன்னணியில் இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை எமக்கு நம்பிக்கையைத் தருகின்றது. இவ்வாறான இளைஞர்கள், மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் தெளிவான அரசியல் கருத்துகள்தான் நாளைய ஆரோக்கியமான சமுதாயத்தைப் படைக்கப்போகின்றன.

நாம் அரசின் ஓர் அங்கமாகவோ அல்லது ஆதரவு வழங்கும் கட்சியாகவோ இருக்கலாம். நாம் எவ்வாறு எமது சமூகத்திற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரச வளங்களைப் பெறுகின்றோமோ அதற்குச் சமமாக எமது சமூகத்தின் அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கான விடயங்களுக்காகவும் அரசிடம் வேலைத்திட்டங்களை முன்வைக்கவேண்டும்.

இது முடியாத காரணமும், காரியமும் அல்ல என்பதை எமது ஸ்தாபகத் தலைவர் சந்திரசேகரன் தனது காலத்தில் தெளிவாக நிரூபித்துச் சென்றுள்ளார். எனவே, அவரது கொள்கை களைப் பின்பற்றும் நாம் அவர் வகுத்துச் சென்ற அரசியல் அணுகுமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

அரசுடன் எமக்குள்ள நல்லுறவின் ஊடாக எமது சமூகத்திற்கான அரசியல், பொருளாதாரம் போன்ற வளர்ச்சியையும் பெறும்போதுதான் எமது சமூக வளர்ச்சி ஆரோக்கியமானதாக அமையும்" - என்றார்.

அம்பேகமுவ பிரதேச சபை உறுப்பினரும், மாகாண சபை வேட்பாளருமான தங்கராஜ் பிரசாத் உட்படப் பலர் இங்கு உரையாற்றினார்கள்.

சிங்கள இனவாதிகளுக்கு புத்தளத்தில் இடமில்லை!

சோமவன்ஸ தேரர் தெரிவிப்பு

புத்தளத்தில் சிங்கள இனவாதிகளுக்கு இடமில்லை என புத்தளம் மாவட்ட பௌத்த தேரர்கள் ஒன்றியத்தின் செயலாளரும், புத்தளம் மற்றும் ஆனமடுவ பௌத்த தேரர்கள் ஒன்றியத்தின் தலைவருமான வெடத்த சோமவன்ஸ தேரர் தெரிவித்தார்.

பல்லாண்டு காலமாக புத்தளத்தில் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்து வரும் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தினருக்கு மத்தியில் பிளவினை ஏற்படுத்த ஒருபோதும் இட மளியோம்.

இந்த நாட்டினுள் குழப்பத்தை ஏற்படுத்தும் சக்திகளிடம் பணத்தை வாங்கிக்கொண்ட ஒரு சிறிய குழுவினரே முஸ்லிம் - சிங்கள மக்களின் உறவுகளில் விரிசலை ஏற்படுத்த முயல்கின்றனர்.

சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் இனவாதிகளுக்கு இடமளிக்காமல் தொடர்ந்து எமது ஒற்றுமையை வலுப்படுத்தவேண்டும். ஒரு செயலினை ஊடகத்தில் பார்த்தால் அதன் உண்மை தன்மையினைத் தேடி அறிந்து கொள்ள வேண்டும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தேர்தல் பரப்புரை

பரப்புரைக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும்

இடம் : சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் ஆலய முன்றல்.
காலம் : இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி

தலைவர்: கௌரவ ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)

வரவேற்புரை: திருமதி என். ஐங்கரன் (தவிசாளர் - வலி மேற்கு பிரதேச சபை)

சிறப்புரைகள்:
கௌரவ இரா. சம்பந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ மாவை.சேனாதிராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ க.வி. விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வேட்பாளர்)
கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ எம்.கே. சிவாஜிலிங்கம் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

யாழ்.பிரபல இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சி

அன்புடன் அழைக்கின்றோம்.

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

அரச மற்றும் உள்ளூராட்சித் துறையில் உள்ளவர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு எனது காத்திரமான பங்களிப்பை வழங்கிடுவேன்

X 7

தம்பி க.மு. தம்பிராசா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் -2013
மன்னார் மாவட்டம் இலங்கைத்தமிழரசுக்கட்சி
நாளை நமது பிள்ளைகளின் சுதந்திரம்
இன்று- நமது கைகளில் உள்ள வாக்குகளே தீர்மானிக்கும்
இ.சார்ல்ஸ் நிர்மலநாதன் [தொழில் அதிபர்]

X 3

மலையகத் தமிழரின் உரிமைக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்

மலையகத் தொழிலாளர் முன்னணி வேண்டுகோள்

"மலையகத்தின் அரசியல் தலைமை கள் மலையக மக்களின் உரிமை களைப் பெற்றுக்கொடுப்பதைவிடுத்து தங்களுடைய சுய தேவை களைப் பூர்த்திசெய்துகொள் வதற்காக மலையக அப் பாவித் தமிழர்களை கூறு போடும் செயலிலே இறங்கி யுள்ளதை நிறுத்தி எமது மக்களின் உரிமைகளைப் பெற் றுக்கொடுக்க ஒன்றி ணைந்து செயற்பட வேண் டும்."

இவ்வாறு மலையகத் தொழி லாளர் முன்னணியின் உடப் புசல்லாவ மாவட் டப் பொறுப் பாளர் பொ.மதி வாணன் (ஜே.பி.) தோட்டக் கமிட்டித் தலைவர் களுக்கான கூட்டத் தில் கேட்டுக் கொண்டார்.

அவர் அங்கு மேலும் கூறி யவை வருமாறு:-

1993ஆம் ஆண்டு மலை யக மக் கள் முன்னணி மத்திய மாகாண சபைத் தேர்தலில் மண்வெட்டி சின் னத்தில் போட்டியிட்டது. முன்னாள் தலைவர் அமரர் பெ. சந்திரசேகரன் சிறையி லிருந்து போட்டி யிட்டு வெற்றிபெற்றார். அன்றே மலைய கத்தில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. 1994 ஆம் ஆண்டு நாடாளுமன் றத் தேர்தலில் மண்வெட்டி சின்னத் தில் போட்டியிட்டு வெற்றிபெற்று முதன் முதலில் தோட்ட உட்கட்டமைப்பு வீட மைப்பு நிர்மாணத்துறை அமைச்சை உருவாக்கினார். லயன் அறை களிலி ருந்த எம்மக்களுக் குத் தனி வீடு களை அமைத்து ஏனைய மக் களைப்போல சுதந்திரமாக வாழ வழி வகுத்தார்.

மலையக மக்கள் முன் னணி தொடர்ந்தும் தனது தனித்துவச் சின்னமான மண்வெட்டி சின்னத்திலே போட் டியிட்டு இருவரை மாகாணசபைத் தேர்தல் களில் வெற்றி பெற்றிருக் கிறது. மலையகத்தில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரே சின்னத்தின் கீழ் போட்டி யிட்டுப்பெரும்பான்மைவாக்கு களைப் பெற்று ஆளும் எந்த அரசாக இருந்தாலும் எம் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் அரசிற்கு ஆதரவை வழங்கி எமது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வ தென்பதே அமரர் சந்திரசேக ரனின் கனவாக இருந்தது.

அந்த வகையில் 2013 ஆம் ஆண்டு மத்திய மாகாண சபைத் தேர்தலிலே ஆறு கட்சிகளைஉள்ளடக்கிமலைய கத் தேசிய முன்னணி என்ற அமைப் பொன்றை உரு வாக்கி அனுபவமுள்ள வர் களானஎதையும்எதிர்கொள்ளத் தயாரான இளைஞர்கள்வேட் பாளர்களாகக் களமிறக்கபபட் டுள்ளார்கள்.

இம்முறை மாபெரும் வெற் றியை மண்வெட்டி சின்னம் பெறுவதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. அத் தோடு எதிர்வரும் காலங் களில் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் ஒன்றி ணைத்து மலையகத்திலே புதிய மலையகத்தை உரு வாக்க மலையக மக்கள் முன்னணியின் தலைவி திருமதி சாந்தினிதேவி சந்திர சேகரன், மலையக மக்கள் முன்னணியின் அரசி யல்துறைத் தலைவர் வி. இராதாகிருஷ் ணன் எம்.பி. ஆகியோர் முயற்சியை மேற் கொண்டு வருகின்றனர் - எனத் தெரிவித்தார்.





தலவாக்கலை ஹொலி ரூட் தோட்டத்தில் அண் மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி யின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போது..

கல்வி வளர்ச்சிக்காகவே சேவையாற்றுவேன்

வடமேல் மாகாண சபை வேட்பாளர்

கடந்த வடமேல் மாகாண சபையில் முன்னாள் முதல்வருடன் ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள் 25 பேரும் ஒத்துழைக்கவில்லை. இதனால் மக்களுக்கு சேவை வழங்க முடியாமல் போய்விட்டது.

இவ்வாறு தெரிவித்தார் குருணாகல் மாவட்ட ஐ.ம.சு. முன்னணி வேட்பர்ளர் தயாசிறி ஜயசேகர. மாகோ கல்வி வலயத்தில் கல்வித்துறை சார்ந்தவர்களுடனான சந்திப்பு தலதாகம பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய நிலையில் இரண்டாம் இடத்தில் இருந்த வடமேல் மாகாண கல்வித்துறை எட்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. கடந்த மாகாண சபை நிர்வாகத்தில் கல்வித்துறை பாழாக்கப்பட்டுள்ளது. முன்பு நிர்வாகம் செய்தவர்கள் இதற்குப் பதில் கூறியாக வேண்டும். எனக்கு ஆதரவான கல்வி அலுவலர்கள் என்று நான் ஒருவரை யும் சேர்த்துக் கொள்ளவில்லை. பொதுப்பணியே முக்கியமானது. ஓர் அதிபர் என்னிடம் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பணம் சேர்த்துத் தருவதாகக் கூறினார். நான் வேண்டாமென்றேன். அப்படி வாங்கி னால் அவருக்கு உதவவேண்டிவரும். அப்போது ஊழலும் உருவாகும். கல்வித்துறை வீழ்ச்சிக்கும் ஊழலுக்கும் துணைபோக மாட்டேன். நான் ஜனாதிபதியுடன் முதல்வர் பதவி தொடர்பாக பேசிய பின் கட்சி மாறி வந்தேன். மாகாணக் கல்வி அமைச்சு முதல்வரின் கீழேயே வரும். எனது தலைமையின் கீழ் சிறந்த நிர்வாகம் உருவாகும். கடந்த மாகாண சபை நிர்வாகத்தில் தனிப்பட்ட ரீதியில் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் பணிப்பாளர்களும் உதவியமை காரணமாகவே வடமேல் மாகாணத்தில் கல்வித்துறை வீழ்ச்சியடைந்து உள்ளது. எனது நிர்வாகத்தில் அவ்விதம் நடைபெறாது- என்றார். (ஜ-200)

வடக்கில் வசிக்கும் வாக்காளப் பெருமக்களே!

- ஜனநாயகத்தை முதன்மைப்படுத்தி சகல இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வை முன்வைத்தல்
- சகல இன மக்களும் சம உரிமையுடனும் சம அந்தஸ்துடனும் வாழக்கூடிய சூழலை உருவாக்குதல்.
- நாட்டைப் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையச் செய்யக் கூடிய வல்லமை கொண்ட தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பது நீங்கள் அறிந்த உண்மையாகும்.
- இந்த இனவாத அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்வரை நீதியையோ, நியாயத்தையோ எதிர்பார்க்க முடியாது.
- யுத்தத்தினால் இழந்த செல்வங்களையும், சொத்துக்களையும் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்கி சகலருக்கும் நியாயம் கிட்டக்கூடிய வழிமுறையை ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுக்கும்.
- ஆட்சி மாற்றத்திற்கான ஓர் ஆரம்பம்.
- சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பதை உறுதிசெய்தல்

ஐக்கிய தேசியக் கட்சியை
வெற்றிபெறச் செய்வோம்.



ஐக்கிய தேசியக் கட்சி - நாட்டுக்காக

உணவு தருவதாக ஏமாற்றி பசியோடு அனுப்பினார் ஆளுநர்

கிளிநொச்சி, செப்.13

வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றியவர்களுக்கு மதியபோசனம் வழங்கப்படும் என பல தடவை அறிவிக்கப்பட்டுப் பின்னர் வழங்கப்படவே இல்லை. இதனால் வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் உட்பட அனைவரும் பசியோடு திரும்பிச் சென்றனர்.

வடமாகாணத்தில் இந்த வருடம் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ்.கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில், புதிதாக அரச சேவையில் நியமனம் பெற்ற 600 இற்கு மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும் என மேலிடத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டம் முடிந்ததும் தூர இடங்களிலிருந்து வந்தவர்களுக்கே மதிய உணவு வழங்கப்படும். ஏனையவர்கள் வீடுகளுக்குச் செல்லலாம் என ஒழுங்கமைப்பாளர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால் பின்னர் வெளி மாவட்டத்தவர்களுக்கும் மதிய போசனம் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டது.

இதனால் வெளி மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் மதிய போசனம் கிடைக்காமையால் அவர்கள் மாலை 6 மணி வரை உணவு இன்றி பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-400,426)

வடக்கின் வசந்தம் விரைவில் ஊர்காவற்றுறைக்கும் வரும்

வலி.தென்மேற்கு, செப். 13

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையிலுள்ள வீதிகள், மயானங்கள், முன்பள்ளிகள், நூல் நிலையம் ஆகியன 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபை செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

ஒரு கி.மீ. நீளமான கடற்கரை வீதி 8.7 மில்லியன் ரூபா செலவிலும் 1/2 கி.மீ. நீளமான ஊர்காவற்றுறை சுங்கவீதி வடிகாலமைப்புடன் 8.7 மில்லியன் ரூபா செலவிலும் 1.கி.மீ. நீளமான மண்குழி வீதி 7 மில்லியன் ரூபா செலவிலும் ஒரு கி.மீ நீளமான நாரந்தனை சென்.பீற்றர்ஸ் வீதி 7.6 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள கோட்டை வாசல் இந்து மயானம், துவில் இந்து மயானம், நாரந்தனை வடக்கு மயானம், எழுவைதீவு இந்து மயானம் ஆகிய நான்கு மயானங்களும் தலா 12 லட்சம் ரூபா வீதம் 48 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை அண்ணா முன்பள்ளி 9 லட்சம் ரூபா செலவிலும் காந்திஜி முன்பள்ளி 4 லட்சம் ரூபா செலவிலும் திருத்தியமைக்கப்படவுள்ளன.

எழுவைதீவு உப அலுவலகத்திலுள்ள நூல் நிலையம் 6.9 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, நீண்ட காலமாக சுமார் 30 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் சேதமான நிலையிலுள்ள நெருஞ்சிமுனை அன்னை வேளாங்கண்ணி வீதியும் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. (வ-115)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் திங்கட்கிழமை கைலாச வாகன வெள்ளோட்டம் இடம்பெற்றது. (வ)

தொழிலாளியின் ஊர்ப்பற்று

மெய்சிலிர்க்க வைத்த பங்காளன்

தென்மராட்சி, செப்.13

தினைக்களக் காசோலை கிடைக்கும் வரை பொருளின் பெறுமதித் தொகையை சம்பளத்தில் அறவிடுமாறு தெரிவித்து தனது ஊர்ப்பற்றை வெளிப்படுத்திய கடைச் சிப்பந்தி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் பற்றாக்குறையை நீக்குவதற்காக சுகாதாரத் தினைக்களத்தினர் அங்குள்ள குழாய்க் கிணற்றுக்கு பொருத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து மின் மோட்டரைக் கொள்வனவு செய்ய நேற்றுமுன்தினம் வர்த்தகநிலையத்துக் குச்சென்றுள்ளனர். வர்த்தக நிலைய உரிமையாளர் தினைக்களத்தினரால் காசோலை வழங்க காலதாமதமாகும் எனக் காரணம் காட்டி கடனுக்கு பொருளை வழங்க மறுத்து விட்டார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த கடைச் சிப்பந்தியான தென்மராட்சி வாசி முதலாளியிடம் எமது பிரதேச வைத்தியசாலை வரலாற்றில் தினைக்களக் காசோலை வரும் வரை எனது சம்பளத்திலிருந்து அறவிடுங்கள் எனக் கூறி மின்மோட்டரை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை கடையின் உரிமையாளரும் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

வலி.தென்மேற்கு பிரதேசசபை மாதாந்தக் கூட்டம் ஒழுங்கில்லை

சபை உறுப்பினர்கள் விசனம்

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டங்கள் வசதிக்கேற்றவாறு நடத்தப்படுவது குறித்து விசனம் தெரிவித்துள்ள உறுப்பினர்கள், நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்கு அமைவாக மாதாந்தக் கூட்டங்களைக் குறிப்பிட்ட தினங்களில் மட்டும் நடத்துமாறு தவிசாளரைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டங்கள் வசதிக்கேற்றவாறு நடத்தப்படுவதால் உறுப்பினர்கள் சிரமங்களுக்குள்ளாவதுடன் தங்களது அவசர தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இது குறித்துச் சுட்டிக் காட்டிய உறுப்பினர்கள், எதிர்காலத்தில் தீர்மானத்துக்கு அமைய கூட்டத்தைநடத்துமாறு தவிசாளரைக் கோரியுள்ளனர். (வ-115)

யாழ்.கோம்பயன் மயானத்தில் மின்சார எரியூட்டல் வசதி

யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் சடலங்களை மின் எரியூட்டும் கட்டடத் தொகுதி நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. 22 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்டுள்ள குறித்த கட்டடத்தில் மின் எரியூட்டல் பணியை மேற்கொள்ள இளைஞர்கள் இருவருக்கு கருவிகள் வழங்கப்பட்டன. (வ-10)

பாவனையாளர் விதிகளை மீறிய 9 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப்.13

பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்டு வர்த்தகர்கள் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்தினர். நீதிமன்றுக்கு வராத வர்த்தகருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் யாழ். பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை உட்பட பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய 9 வர்த்தகர்கள் இனங்காணப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் யாழ்.நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணையின் போது குற்றத்தை ஒப்புக் கொண்ட எட்டு வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. நீதிமன்றுக்கு வருகை தராத மற்றொரு வர்த்தகரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (வ-9)

மீசாலை ஏ-9 வீதியில் வெள்ளம் பயணிப்போர் பெரும் பாடு

தென்மராட்சி, செப்.13

ஏ-9 வீதியில் அரை மைல் தூரத்துக்கு மழை வெள்ளம் வீதிவரை தேங்கி நிற்பதால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் செல்வோர் வாகனங்கள் செல்லும் வேளையில் நனைய வேண்டிய நிலை காணப்படுகிறது.

ஏ-9 வீதி அகலமாக்கப்பட்ட போது வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் அமைக்கப்படாதால் நீண்ட தூரத்துக்கு வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

மீசாலை கமநல சேவை நிலையத்துக்கும் இராமாவில் கந்தசாமி கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதைக் காண முடிகிறது.

பெருமழை பெய்யும் வேளைகளில் வீதியில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் செல்ல முடியாத நிலை ஏற்படுமெனவும் தெரிவித்தனர். (வ-9)

25 மில்.ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் பளையில் சேதமடைந்த கடைத்தொகுதி

வலி.தென்மேற்கு, செப்.13

பளை பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களின் வசதி கருதியும் பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டும் போரால் சேதமடைந்த நிலையிலுள்ள கடைத் தொகுதி "புறநெகும" திட்டத்தின் கீழ் 25 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

பளை பஸ் நிலையத்துக்கு அருகில் சேதமடைந்த நிலையிலுள்ள கடைகளுக்குப் பதிலாக 15 கடைகளைக்கொண்டகடைத் தொகுதி 20 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. அண்மையில் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பஸ் நிலையத்தின் மேற்பகுதியில் 5 மில்லியன் ரூபா செலவில் குறித்தொதுக்கப்பட்டுள்ள மாகாண நிதி மூலம் கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ளது.

> வேலைகளுக்கான கேள்விகள் கோரப்பட்டு விரைவில் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி வேலைகளுக்கான கேள்விகள் கோரப்பட்டு விரைவில் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (வ-115)

பிரிட்டன் பிரதமர் இல்லத்தில் அமிதாப்பச்சன்



லண்டன், செப்.13

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மனைவி சமந்தா கமரூன் நடத்திவரும் 'சில்வர் ஸ்டார்' அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பொலிவூட் நடிகர் அமிதாப்பச்சன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்ச்சி உலகப் புகழ் பெற்ற பிரிட்டன் பிரதமர் இல்லத்தில் நடைபெற்றது. அந்த இல்லம் 275 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டன் பிரதமர்களின் உத்தியோக பூர்வ வாஸஸ்தலமாக இருந்து வரும் சிறப்பைப் பெற்றது.

நீரிழிவு நோய்க்கு எதிராகப் போராடிவரும் 'சில்வர் ஸ்டார்' அமைப்பு ஆறு ஆண்டுகளை நிறைவு செய்ததை முன்னிட்டே இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏழைகள் அதிகம் வசிக்கும் பகுதிகளுக்கு சென்று அங்குள்ளவர்களுக்கு இலவசமாக நீரிழிவு நோய்க்கான பரிசோதனைகளைச் செய்வதுடன், உணவுக் கட்டுப்பாடு, வாழ்வியல் முறைகள் பற்றிய ஆலோசனைகளையும் இந்த மையம் அளித்து வருகிறது.

இது போல நான்கு நடமாடும் நீரிழிவு மையங்களை நடத்தி வரும் இந்த அறக்கட்டளை, பிரிட்டனிலும், இந்தியாவிலும் இதுவரை 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நீரிழிவுப் பரிசோதனை செய்துள்ளது.

இந்த அறக்கட்டளைக்கு அமிதாப் நீண்ட காலமாகவே உதவி செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

உணவு பொதிக்குள் குட்டிப் பாம்பு

திருவனந்தபுரம், செப்.13

கேரளா திருவனந்தபுரத்தில் மருத்துவமனையொன்றில் வழங்கப்பட்ட உணவில் ஒரு சிறிய பாம்பு இறந்த நிலையில் இருந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு பெண்மணி தனது மகனை சிகிச்சைக்காக அனுமதித்திருந்தார்.

அங்குள்ள உணவு விடுதியில் அவர் தனது மகனுக்கு உணவு வாங்கி கொடுத்தார். அந்த உணவுப் பொதியைத் திறந்து பார்த்த போது அதில் ஒரு குட்டிப் பாம்பு இறந்த நிலையில் கிடப்பதை கண்டு அதிர்ந்துபோனார்.

தகவல் அறிந்த பொதுமக்கள் வைத்தியசாலை முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர். அதையடுத்து பொலிஸாருக்கும், உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் வைத்தியசாலை நிர்வாகம் முறைப்பாடு செய்தது.

அவர்கள் வந்து பொதுமக்களுடன் பேச்சு நடத்தி, அவர்களைச் சமாதானப்படுத்தியதுடன், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதியும் அளித்தனர்.

தற்போது வைத்தியசாலைக்குள் இருந்த உணவு விடுதி மூடப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த உணவு மாதிரிகள் சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. (ற)

இலங்கைக்குப் போர்க்கப்பல்; தமிழ் மக்களைப் புண்படுத்தும்

உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்; மன்மோகனிடம் வலியுறுத்துகின்றார் 'ஜெ'

சென்னை, செப்.13

இலங்கைக்குப் போர்க்கப்பல்களை வழங்கும் மத்திய அரசின் செயற்பாடு தமிழர்களின் மனதைப் புண்படுத்தும் செயல் என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

இலங்கைக்கு இந்திய அரசு இரு போர்க்கப்பல்களை வழங்கவுள்ளமை தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"மத்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழ் மக்களின் மனதைப் பெரிதும் புண்படுத்துகின்றது. மத்திய அரசு இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படக் கூடாது என்று தமிழ் மக்கள் கோரி வரும் நிலையில் மத்திய அரசு அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இலங்கைக்குப் போர்க்கப்பல்கள் வழங்கும் திட்டத்தை பிரதமர் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். போர்க்கப்பல்கள் வழக்குவது தொடர்பாக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், பிரதமர் மன்மோகன் சிங் தலையிட்டு அவற்றை நிறுத்தவேண்டும். இந்த விடயத்தில் பிரதமர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

விஜயகாந்த் மனுவை ஏற்றது மன்று

சென்னை, செப்.13

தமிழக அரசு தொடர்ந்த அவதூறு வழக்கில் நேரில் முன்னிலையாவதில் இருந்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விஜயகாந்த் தாக்கல் செய்திருந்த மனுவை ஏற்று சென்னை 2ஆவது அமர்வு நீதிமன்றம், வழக்கு விசாரணைக்கு நேரில் முன்னிலையாவதற்கு விலக்கு அளித்துள்ளது. மற்றொரு வழக்கில் வரும் 20ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டி இருப்பதாலேயே இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அவதூறு வழக்கில் விஜயகாந்துக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, பின்னர் அது விலக்கிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)



செவ்வாய் கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இந்தியா முதன்முறையாக அனுப்பவுள்ள விண்கலம் அடுத்தமாதம் விண்ணில் செலுத்தப்படவுள்ளது. அந்த விண்கலத்தின் இறுதிக்கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்துக்கான மொத்தச் செலவு இந்திய மதிப்பில் 450 கோடி ரூபாவாகும்.. இறுதிக்கட்டப் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் குறித்த விண்கலம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்துக்கு கொண்டு செல்லப்படவுள்ளது. (ற)

உத்தரப் பிரதேச வன்முறைகளுக்கு சமாஜ்வாதி கட்சியே காரணம் -ராஜ்நாத்

புதுடெல்லி, செப்.13

முஷாபர்நகர் கலவரத்துக்கு சமாஜ்வாதி கட்சி தொண்டர்களே காரணம் என்று பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் குற்றம்சாட்டியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலத்தில் முஷாபர்நகர் மாவட்டத்தில் இருபிரிவினருக்கு இடையே ஏற்பட்ட இன மோதல் கலவரமாக மாறியது. அதில் 48க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த கலவரத்துக்கு பாரதிய ஜனதா கட்சியே காரணம் என்று சமாஜ்வாதி கட்சி குற்றம் சாட்டியிருந்தது.

இந்நிலையில், முஷாபர்நகர் கலவரத்திற்கு சமாஜ்வாதி கட்சி தொண்டர்களே காரணம் என்று பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டியுள்ளார். புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற)

திருமாவளவன் கைது

இலங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியதால்

சென்னை, செப்.13

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்று வலியுத்தி ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் உட்பட 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றக் கூடாது. கச்சதீவை மீட்க வேண்டும் என்று வலியுறுத்தி சென்னை வள்ளுவர் கோட்டம் பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் அறிவித்திருந்தார்.

எனினும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குப் பொலிஸார் அனுமதி மறுத்திருந்த நிலையில், அதனை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முற் பட்டதை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் திருமண மண்டபம் ஒன்றில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் மீது இதுவரை வழக்குப் பதிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை" என்று சென்னைப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

கலவரப் பகுதிகளைப் பார்வையிட உ.பி. செல்கின்றார் சோனியா

முஷாபர்நகர், செப்.13

உத்தர பிரதேசம் முஷாபர்நகர் மாவட்டத்தில் நடந்த கலவரத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட காங்கிரஸ் தலைவி சோனியாவும், துணைத் தலைவர் ராகுல் காந்தியும் அடுத்த வாரம் செல்லவுள்ளனர்.

"கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட காங்கிரஸ் தலைவி சோனியாவும், துணைத் தலைவர் ராகுலும் அடுத்த வாரம் உத்தரபிரதேசம் வருகின்றனர். அவர்கள் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அத்துடன் கலவரம் நடத்த பகுதியின் நிலவரம் குறித்தும் ஆலோசனை நடத்தப்படும்" என்று உத்தரபிரதேச காங்கிரஸ் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் மதுசூதனன் தெரிவித்துள்ளார்.

முஷாபர்நகர் பகுதியில் சில நாள்களாக இடம்பெற்றுவரும் வன்முறைகளில் 48 பேர் உயிரிழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது (ற)

பிரதமர் வேட்பாளர் யார்? பா.ஜவுக்குள் கடும் மோதல்

புதுடில்லி, செப்.13

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ. தரப்பில் நரேந்திர மோடியைப் பிரதமர் வேட்பாளராக அறிக்கும் விடயம் தற்போது பெரும் பிரச்சினையாக வெடித்துள்ளது.

மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார் பா.ஜ. தலைவர் அத்வானி. அவரைச் சமாதானப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ள கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங், அதில் பயன் கிட்டாது விட்டால் கட்சித் தலைவர் என்ற முறையில் பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கக் கூடும் என்று பா.ஜ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மோடியை பா.ஜ. பிரதமர் வேட்பாளராக அறிவிக்க ராஜ்நாத் சிங் எடுக்கும் முயற்சிக்கு அருண்ஜெட்லி, வெங்கையா நாயுடு ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர். இது போல் ஆர். எஸ். எஸ். தலைவர் மோகன்பகவத், பிரவீண் தொக்காடியா, ராம்விலாஸ்தாஸ் ஆகியோர் மோடியை பிரதமர் வேட்பாளராக விரைவில் அறிவிக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

ஆனால் அத்வானி அதற்கு ஆரம்பம் முதலே எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார். "இந்த விடயத்தில் அவசரப்படத் தேவையில்லை. எதிர்வரும் சட்டசபைத் தேர்தல் முடிந்த பின்னர் மோடியை அறிவிக்கலாம். இப்போது அறிவித்தால் கட்சிக்கு அழிவு ஏற்பட்டு விடும். இதனால் எனது மனசாட்சி இதற்கு இடம் தர மறுக்கிறது" என்று கூறுகின்றார் அத்வானி.

அத்வானியின் யோசனைக்கு எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ், முரளி மனோகர் ஜோஷி, ஜஸ்வந்த்சிங், சத்ருகன்சின்கா, ஆகியோர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்த இழுபறி நிலையால் பா.ஜ. பிளவடையும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது. (ற)

ஆஸ்திரேலியாவின் சிட்னி மற்றும் நியூசவுத் வேல்ஸ் பகுதிகளில் கடும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இருக்கும் ப்ளூ மவுன்டெய்ன்ஸ் பகுதி மற்றும் மேற்கு சிட்னி பகுதியிலேயே இந்தக் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகின்றது. "நியூசவுத் வேல்ஸில் மட்டும் 63 இடங்களில் தீ ஏற்பட்டுள்ளது. 31 இடங்களில் தீ கட்டுக்கடங்காத அளவு இருக்கின்றது" என்று தீயணைப்பு படையினர் கூறுகின்றனர். கடும் தீ காரணமாக குறித்த பகுதிகளில் கடும் புகைமூட்டம் காணப்படுகின்றது. அதையடுத்து அங்கிருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். தீயணைப்புப் பணிகளில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 7 பேர் காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற)

சிரிய சமரசத் திட்டம் தயார்

அமெரிக்காவிடம் கையளித்தது ரஷ்யா

மொஸ்கோ, செப்.13

தன்னிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை சர்வதேச சமூகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு சிரிய அரசு உடன்பட்டுள்ள நிலையில் அதற்கான சமரசத் திட்ட வரைபை அமெரிக்காவிடம் ஒப்படைத்துள்ளனர் ரஷ்ய அதிகாரிகள்.

சிரிய விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்ற ரஷ்ய மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கலந்துரையாடலின் பின்னரே ரஷ்ய அதிகாரிகள் அந்தத் திட்ட வரைபை அமெரிக்க அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர் என்று தெரிவருகின்றது.

இந்தத் திட்டவரைவு குறித்து இரு நாட்டு அதிகாரிகளும் விவாதித்து இறுதி முடிவு எட்டுப்படவுள்ளது என்றும் தகவல்கள் கூறுகின்றன.

அமைதிக்குச் சந்தர்ப்பம்

அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்கச் சந்தர்ப்பம் கிடைக்குமானால் அதற்கொரு வாய்ப்புக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இராணுவம் தற்போதும் தயார் நிலையிலேயே உள்ளது. சமரச முயற்சிகள் தோல்வியடையும் பட்சத்தில் அமெரிக்க இராணுவம் தாக்குதல்களை ஆரம்பிக்கும்

-பராக் ஒபாமா.

"சிரியாவும், ரஷ்யாவும் மிக நெருங்கிய நட்பு நாடுகள் என்ற ரீதியில் இராணுவநடவடிக்கை இல்லாமலேயே இரசாயன ஆயுத அச்சுறுத்தலை நிறுத்துவதற்கு ரஷ்யாவின் முன் முயற்சிகள் உதவும் என்று நம்பலாம். இதுகுறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சருடன், நமது வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி பேச்சுக்களை நடத்தியுள்ளார். நானும் ரஷ்ய ஜனாதிபதி புடினும் பேச்சுகளை நடத்தவுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார் ஒபாமா.

எச்சரிக்கை

அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகின்றதுஎன்றுகூறியுள்ளஅமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சிரியா அமைதி முயற்சிகளில் உளச்சுத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

'அமெரிக்க இராணுவம் தற்போதும் தயார் நிலையிலேயே உள்ளது. சமரச முயற்சிகள் தோல்வியடையும் பட்சத்தில் அமெரிக்க இராணுவம் தாக்குதல்களை ஆரம்பிக்கும்" என்று கடுந்தொனியில் தெரிவித்துள்ளார் ஒபாமா.(ற)

புடினை போன்று 'டோப்பி'

நட்டஈடு கோரி வழக்கு தாக்கல்

மொஸ்கோ, செப்.13

'ஹரிபொட்டர்' திரைப்படத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினைச் சித்திரித்துக் கதாபாத்திரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து நஷ்டஈடு வழக்குத் தொடரப்படவுள்ளது.

'ஹரிபொட்டர்' திரைப்படம் பல பாகங்களாக தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதும் அமோகமாக ஓடி வசூலில் சாதனை படைத்தது.

அதில் 'டோப்பி' என்ற ஒரு கதாபாத்திரம் உள்ளது. வழுக்கைத் தலை, கூர்மையான மூக்கு, மின்னும் கண்கள், தளர்ந்து தொங்குகிற பெரிய காதுகள் என அப்பாத்திரத்தின் உடல் உறுப்புகள் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

அந்த உருவம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினைச் சித்திரித்து உருவாக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

'ஹரிபொட்டர்' திரைப்படத்தை 'வோர்னர் பிரதர்ஸ்' நிறுவனம் விலைக்கு வாங்கி விநியோகம் செய்து வருகிறது. எனவே அந்த நிறுவனத்தின் மீதே நஷ்டஈடு வழக்கு தொடரப்படவுள்ளது என்று ரஷ்யத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ற)

சீனாவின் ஹெலிக்கு வந்தது 'மவுசு'

பீஜிங், செப்.13

சீனாவில் நடைபெற்ற உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ஹெலிகளுக்கான கண்காட்சியில் நூற்றுக்கும் அதிகமான ஹெலிகள் விற்பனையாகியுள்ளன என்று கூறப் படுகின்றது.

நான்கு நாள்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் ஆளில்லாது இயங்கும் ஹெலிகொப்டர் ஒன்று பார்வையாளர்களின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.

'ஜேவை - 8' எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த வகை ஹெலிகள் 100க்கும் மேல் கண்காட்சியில் விற்பனையாகியுள்ளமை உலக நாடுகளை ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது.

"கண்காட்சியில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலதிபர்கள் மற்றும் 40 ஆயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் அனேகரின் வரவேற்பைப் பெற்றது ஜேவை - 8' எனப்படும் ஆளில் லாது இயங்கும் ஹெலி கொப்டரே. அந்தக் ஹெலி கொப்டர் மணிக்கு 400 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளனர் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள். (ற)

உயரமான விமான நிலையம் சீனாவில்

பீஜிங், செப்.13

சீனாவில் உருவாக்கப்பட்டுள்ள உலகின் மிக உயரமான இடத்தில் உள்ள விமான நிலையம் இம்மாத இறுதியில் பாவனைக்காகத் திறந்துவிடப்படவுள்ளது.

சீனாவின் கட்டுப்பாட்டிலுள்ள திபெத்தில் ஏற்கனவே ஐந்து விமான நிலையங்கள் அமைந்துள்ளன. தற்போது திபெத்தில் டாவுசெங் யாடிங் என்ற இடத்தில் கடல் மட்டத்திலிருந்து 4411 மீற்றர் உயரத்தில் புதிய விமான நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்படவுள்ள இந்த விமான நிலையம் உலகிலேயே உயரமான விமான நிலையம் என்ற பெருமையைப் பெறுகின்றது. அதே வேளை, அதே பகுதி யில் 3 ஆயிரத்து 780 மீற்றர் உயரத்தில் மற்றொரு புதிய விமான நிலையம் அமைப்பதற்கு சீனா திட்டமிட்டுள்ளது. அதற்காக, 76 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணம் உடைய இடம் தெரிவு செய்யப்பட்டு முழு வரைபடமும் தயாரிக்கப்பட்டுள்ளது.



அந்த விமான நிலையமும் அமைக்கப்பட்டபின்னர் உயரமான இடத்தில் ஏழு விமான நிலையங்களைக் கொண்டுள்ள ஒரே நாடு என்ற பெருமையை சீனா பெற்றுக்கொள்ளும். (ற)

இராணுவ முகாம் தாக்குதல்: 6 பேருக்குச் சிறைத் தண்டனை

கொங்கோ நீதிமன்றம் விதித்தது

பிறஸ்ஸவில், செப்.13

கொங்கோவில் இராணுவ முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக 6 பேருக்குச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இராணு முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 300 பேர் உயிரிழந்தனர். அது தொடர்பான வழக்கு விசாரணைகளின் முடிவிலேயே குற்றவாளிகளுக்கு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தாக்குதலில் சுமார் 2 ஆயிரத்து 300 பேர் காயமடைந்துள்ளனர். சுமார் 10 ஆயிரம் பேர் தமது இருப்பிடங்களை இழந்தனர். தாக்குதலின்போது நடத்தப்பட்ட சக்தி வாய்ந்த குண்டுத் தாக்குதலால் பல பிரதேசங்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்தன.(ற)

புற்றுநோயை தடுக்கும் கோப்பி

ஆய்வில் தகவல்

லண்டன், செப்.13

கோப்பி அருந்துவதன் மூலம் கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பினைக் குறைத்துக் கொள்ள முடியும் என உலக புற்றுநோய் ஆய்வு நிதியம் தெரிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு முதல் பிரிட்டன் பெண்களிடையே மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் "முறையான உணவுப் பழக்கம் , உடற்பயிற்சிகளினால் 57 வீதமான பெண்களுக்கு புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பினை குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. (ற)

முக்கிய ஆவணங்களை ரயிலில் தவற விட்ட கமரூன்

லண்டன், செப்.13

அரச இரகசியங்கள் அடங்கிய 'சிவப்புப் பெட்டி'யை ரயிலில் தவற விட்டு சர்ச்சைகளில் சிக்கியுள்ளார் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்.

உலகின் முக்கிய தலைவர்களில் ஒருவர் டேவிட் கமரூன். அவருக்கு ஞாபக மறதி கொஞ்சம் அதிகம்தான். கடந்த ஆண்டு கேளிக்கை விடுதி ஒன்றில் விருந்துக்குத் தனது மகளை அழைத்துச் சென்ற கமரூன், தனது ஞாபக மறதியால் மகளை அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டார். பின்னர் கமரூனின் மனைவி சமந்தா அங்கு சென்று மகளைக் கூட்டி வந்தார். இந்தத் தகவல் பிரிட்டன் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாகி சக்கை போடு போட்டது.

தற்போது தனது ஞாபக மறதியால் மீண்டும் மாட்டிக் கொண்டுள்ளார் டேவிட் கமரூன்.

பிரிட்டன் அரச இரகசியங்கள் 'ரெட் பொக்ஸ்' எனப்படும் சிவப்புப் பெட்டியில் பாதுகாக்கப்படும். பிரதமரிடம் இருக்கும் அந்தப் பெட்டியில், முக்கிய ஆவணங்கள் மற்றும் உடன் படிக்கைகள், தற்கால நிகழ்வுகள், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய திட்டங்கள், பற்றிய ஆவணங்கள் பாதுகாக்கப்படும்.

அண்மையில் உறவினர் ஒருவரின் திருமணத்துக்குச் சென்ற கமரூன், அந்தப் பெட்டியையும் தன்னுடன் எடுத்துச் சென்றார். திருமணத்துக்குச் சென்று விட்டு ரயில் மூலம் தனது இருப்பிடத்துக்குத் திரும்பிய கமரூன் வழமை போன்று ஞாபக மறதியால் அந்தப் பெட்டியை ரயிலிலேயே விட்டு விட்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்.

கமரூனின் நல்லகாலம், அந்தப் பெட்டியைக் கண்ட ரயில் பயணி ஒருவர் அதை எடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார். தற்போது அந்தப் பெட்டி பாதுகாப்பாக கமரூன் கைகளுக்குப் போய் சேர்ந்து விட்டது.

ஆனால் கண்டெடுத்துக் கொடுத்த வருக்கு திண்டாட்டம்தான். அந்தப் பெட்டியில் சிரியா பற்றிய தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் இருந்துள்ளன. அவற்றை அந்தப் பெட்டியை ஒப்படைத்தவர் படித்தாரா என்பது பற்றி அவரிடம் கடும் விசாரணைகள் நடக்கின்றனவாம்.

எது எப்படியோ.. தனது ஞாபக மறதியால் அடிக்கடி பிரிட்டன் ஊடகங்களின் தலைப்புச் செய்திகளில் இடம்பிடிக்கின்றார் கமரூன். (ற)

இராணுவ முகாமை உடன் அகற்றுங்கள்

கோத்தாவிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,செப்.13

அக்கரைப்பற்று, கண்ணகி புரம் முருகன் ஆலய வளாகத் தில் அமைக்கப்பட்டுள்ள இரா ணுவ முகாமை அகற்றி ஆலயத்தையும், அதன் வளா கத்தையும் மீளப் பெற்றுத் தருமாறு பாதுகாப்பு அமைச் சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஆலய பரிபா லன சபையினர் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து ஆலய பரிபாலன சபையினர் அவருக்கு அனுப்பி வைத்துள்ள மனு வில் மேலும் தெரிவிக்கப்பட் டிருப்பதாவது:-

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையையடுத்து 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வன்செயலால் இந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்ததை யடுத்து, ஆலய வளாகத்தி னையும் அங்கிருந்த பாடசா லைக் கட்டடத்தையும் விசேட அதிரடிப்படையினர் கைப் பற்றி முகாம் அமைத்தனர். அதன் பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடத் தில் குடியமர்த்தப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாகியும் விசேட அதிரடிப்படை முகாம் அதே இடத்தில் இயங்கி வந்தது.

கடந்த 2010 ஆம் ஆண்டு விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்து வெளியேறி ஆல யத்தை மக்களிடம் கைய ளித்தனர்.

அதன் பின்னர் பாழ டைந்திருந்த ஆலய வளா கத்தை சிரமதானம் செய்து கட்டுமானப்பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருப்பதுடன் மலையில் 21 அடி உயரம் கொண்ட முருகன் சிலை ஒன் றும் அமைக்கப்பட்டு வழிபாடு கள் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையில் இந்த வருடம் ஏப்ரல் மாதம் ஆலய வளா கத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலை கட்டடத்தில் மீண் டும் இராணுவத்தினர் முகாம் அமைத்ததுடன், ஆலய பரிபா லன சபையினரை இராணு வத்தினர் அழைத்து ஆலய வளாகத்தில் உள்ள கட்ட டத்தை தமது உயர் அதிகாரி களின் பாவனைக்குத் தரு மாறு கேட்டனர். அதனை மக் கள் வழங்க மறுப்பு தெரிவித் தனர்.

இராணுவத்தினர் எந்தவித மான அறிவிப்பும் இன்றி கடந்த மே மாதம் ஆலய வளாகத்தைச் சுற்றி வேலிகள் அமைத்து ஆலய வளாகத்தை தன்வச மாக்கிக் கொண்டதுடன் ஆலய கட்டு மானப் பணிகளையும் இடை நிறுத்தி கட்டட பொருள் களையும் அகற்றுமாறு பணித் துள்ளனர்.

தற்போது சமாதான சூழ்நிலை ஏற்பட்டு மூன்று வருடங்க ளுக்கு மேலாகின்ற நிலையில் தமிழ் மக்களிடையே நம்பிக் கையை கட்டி எழுப்ப வேண் டிய இந்தத் தருணத்தில் மீண்டும் ஆலயத்தில் முகாம் அமைக்கப்பட்டமை இந்து மக்கள் மத்தியில் இராணுவத் தினர் மீது வெறுப்புணர்வுவை ஏற்படுத்தக் கூடும்.

எனவே அமைக்கப்பட்ட இரா ணுவ முகாமை எமது ஆலய வளாகத்தில் இருந்து அகற்றி ஆலயத்தில் மக்கள் வழிபாடு செயவதற்கான சூழ் நிலையை உருவாக்கித் தரவேண் டும்.-என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச)

30 பேருக்கு மட்டுமே நிரந்தர நியமனம்

அம்பாறை,செப்.13

அம்பாறை, அட்டாளைச் சேனை பிரதேச செயலகத் தில் 142 பயிலுநர் பட்டதாரிகள் இணைக்கப்பட்டிருந்த போதி லும் 30 பேருக்கு மாத்திரமே நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளது என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமையாற் றும் பட்டதாரி பயிலுநர்களில் 30 பேருக்கு செவ்வாய்க் கிழமை நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 26 பட்டதா ரிகள், அபிவிருத்தி உத்தி யோகத்தர்களாகவும் ஏனைய நான்கு பட்டதாரிகளும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும் நியமனம் பெற்றனர்.

அவர்களுக்கான நியம னக் கடிதங்களை பொது நிர்வாக மற்றும் உள்நாட்ட லுவல்கள் அமைச்சு வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக அம்பாறை மாவட்ட செயலர் நீல் டி அல்விஸ் கலந்து கொண்டு நியமனக் கடிதங் களை கையளித்தார். (ச)

நெல் கொள்வனவு முறைகேடுகள் குறித்து விசாரணை

அம்பாறை,செப்.13

அம்பாறை மாவட்டத்தில் நெற் கொள்வனவில் பல்வேறு முறை கேடுகள் இடம்பெற்றுள்ளன என்று முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் குறித்து விசா ரணை நடத்தப்படுகிறது என்று மாவட்ட செயலர் நீல் டி அல்விஸ் தெரிவித்தார்.

விவசாயிகள் என்ற போர்வை யில் ஒருசில வியாபாரிகள் மொத்தமாக அரசுக்கு நெல்லை விற்பனை செய்வதற்கு முயற் சித்து வருகின்றனர் என்று அவர் கூறினார்.

இந்த நடவடிக்கைக்காக அரச உத்தியோகத்தர்கள் சிலரும் ஒத்துழைப்பு வழங்குகின்ற னர் என்று குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சம்மாந்துறை ஆஸ்பத்திரி வளவுக்குள் காட்டு யானைகள்

அம்பாறை, சம்மாந்துறை யில் காட்டு யானைகள் புதன்கிழமை அதி காலை ஒரு மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் புகுந்து மீண்டும் அட்டகாசம் புரிந்துள்ளன.

சம்மாந்துறை அன்வர் இஸ் மாயில் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையின் பின் புறமாகவுள்ள மதிலை உடைத் துக் கொண்டு வைத்தியசாலை வளாகத்தில் நுழைந்த காட்டு யானைகள் அங்குள்ள வாழை மரங்களைச் சேதப்படுத்தியுள் ளன. இந்தக் காட்டு யானை களைக் கண்டு வைத்திய சாலையில் உள்ள நோயா ளர்கள் பலர் பீதியடைந்தனர். காட்டு யானைகள் வைத்திய சாலையின் மற்றொருபக்க மதிலை உடைத்துக் கொண்டு வெளியே சென்று சம்மாந்து றைப் பொலிஸ் வீதியில் உள்ள கடை ஒன்றையும் உடைத்துச் சேதப் படுத்தியுள்ளன. (ச)

நிகழ்ச்சி நிரலுக்கமைய இந்திய வீட்டுத் திட்டம்

விசேட செயலர் ராகவன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,செப்.13

இந்திய வீட்டுத் திட்டம் நிகழ்ச்சி நிரலின் படிமுறைப் படியே நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் தற்போது மட்டக்களப்பு மாவட் டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வீட்டுத் திட் டம் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் தக்க தருணத்தில் நடை முறைப்படுத்தப்படும்.

இவ்வாறு இந்திய வெளி யுறவு அமைச்சின் அபிவி ருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான விசேட செயலர் பி.எஸ்.ராகவன் தெரி வித்தார்.

இந்த வீட மைப்புப் பணிகள் மட்டக்களப்பு, செங்கலடி பிரதேசத்திலுள்ள உறுகாமம், புல்லுமலை மற்றும் மங்கள கம ஆகிய கிராமங்களில் முதற்கட்டமாக கடந்த மே மாதம் தொடக் கம் இடம்பெற்று வருகின்றன.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நேரில் பார்வையிட வந்த இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் உறு காமம் கிராமத்துக்கு சென்றி ருந்தனர்.

அதன்போது, உறுகாமம் கிரா மத்திலுள்ள பயனாளிகளைச் சந்தித்து வீடமைப்புத் திட்டத் தின் முன்னேற்றம் தொடர்பாக கேட்டறிந்ததையடுத்து ஊட க வியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீட்டுத் திட்டத்துக்கான முத லாம் கட்டக் கொடுப்பனவு முடிவடைந்து இரண்டாவது கட்டக் கொடுப்பனவைப் பெறு வதற்கு பயனாளிகள் தகுதி பெற்றிருக்கின்றனர். வீடமைப்பு வேலைகள் குறித்துப் பயனாளி கள் திருப்பியடைகின்றனர். பய னாளிகளின் திருப்தியே இந் திய அரசின் திருப்தியாகும். வீட்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், வடபகுதியிலிருந்து இப்பொழுது கிழக்குக்கு வந்திருக்கின்றோம். கிழக்கின் அடுத்த மாவட்டங்கள் இரண் டிலும் எப்போது இந்திய உதவி வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக் கப்படும் என்பதை துல்லிய மாகத் தற்போது கூறிவிட முடி யாது. -என்றார். (ச)

கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் இலங்கைக்கான ஈரான் நாட்டு தூதர் முகம்மட் நபி ஹசானிபோரை புதன்கிழமை தூதரக அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மட்டக்களப்பு சிறையில் 11 கைதிகள் விடுதலை

மட்டக்களப்பு,செப்.13

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்த 11 கைதிகள் நேற்று வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

கைதிகள் தினத்தையொட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய பொதுமன்னிப்பின் அடிப்படையிலேயே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை யின் பிரதம ஜெயிலர் இ.மோகனராஜ் மற்றும் சிறைச் சாலை பிரதான நலன்புரி உத்தியோகத்தர் எஸ்.கிறினி வாசன் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள் முன்னிலையில் அவர்கள் விடுதலை செய்யப் பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட இந்தக் கைதிகள் சிறிய குற்றங்க ளுக்காக தண்டனை அனுப வித்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

அட்டப்பள்ளத்துக்குச் செல்லும் வீதி கவனிப்பாரற்ற நிலையில்

அம்பாறை, செப். 13

கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதியிலிருந்து அட டப்பள்ளம் கிராமத்துக்குச் செல் லும் பிரதான உள்வீதியின் அவலம் குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி திணைக்க ளத்தின் பராமரிப்பின் கீழுள்ள இந்த முக்கிய வீதி பல வருட காலமாக படுமோசமான நிலை யில் காணப்படுகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் அட்டப் பள்ளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான உள் வீதி யின் அவலம் குறித்து அகில இலங்கை அரச பொது ஊழி யர் சங்கம், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெவ்வையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

சங்கத்தின் சார்பில் தலைவர் எஸ்.லோகநாதன் இந்த வீதி யின் அவலம் குறித்து அமைச்சர் உதுமாலெவ் வைக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

"நிந்தவூர் பிரதேச சபைப் பிரி வைச் சேர்ந்த அட்டப்பள்ளம் பிரதேசத்தில் ஜநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும் பங்கள் வாழ்ந்து வருகின் றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தமிழ், முஸ் லிம் மக்களைக் கொண்ட சமாதான கிராம வீடமைப்புத்

திட்டமும், ஏழைகளுக்கான சகாத்கிராம வீடமைப்புத் திட் டமும் அங்கு அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

மின்விநியோகத்தில் பாகுபாடு; கோரக்கன்கட்டு மக்கள் விசனம்

கிளிநொச்சி,செப். 13

கிளிநொச்சி கோரக்கன்கட்டு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மின்சார விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவ தாக மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர்.

ஏ-35 வீதியில் அமைந்துள்ள பரந்தன் கோரக்கன்கட்டு கிரா மத்தின் குறிப்பிட்ட சில பகுதி களுக்கு இன்றுவரை மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட வில்லை.

பரந்தன் ஏ-35 வீதியின் உண் டியல்சந்தியில் இருந்துவை.எம். சீ.ஏ. சந்தி வரையான பகுதி களுக்கே இதுவரை மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட வில்லை. பரந்தன் சந்தியில் இருந்து உண்டியல் சந்தி வரையான பகுதிக்கும், வை.எம். சீ.ஏ. சந்தியில் இருந்து முரசு மோட்டை வரையான பகுதிக் குமே மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இடைப்பட்ட சில பகுதிகள் புறக் கணிக்கப்பட்ட பகுதிகளாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இதனால் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப் படுகின்றன என்றும், தமது பகுதிக்கு மின்சாரம் வழங்கு மாறு பல தடவைகள் தாங்கள் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை தமக்கு மின்சாரம் வழங்க எந்த அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(க-6)

வவுனியாவில் மீள் எழுச்சிக் கிராமமான சாஸ்திரிகூழாங்குளம் சுந்தரபுரம் சர்வசித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விநாயக சதுர்த்திப் பூசையின் போது...

(க-9)

கிளிநொச்சியில் மீன் வளர்ப்பு நிலையம்

கிளிநொச்சி,செப். 13

கிளிநொச்சி மாவட்டத்தில் நன் னீர் மீன் பிடித்துறையை மேம் படுத்தும் நோக்குடன் மீன் வளர்ப்பு நிலையமொன்று கிளிநொச்சி இரணைமடுவில் அமைக்கப்படவுள்ளது.

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்த மீன் வளர்ப்பு நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரட்ண, பிரதி அமைச் சர் சரத்குமார குணரத்ன, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திர சிறி, நாடாளுமன்ற உறுப்பி னர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-9)

சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைவோர் தொகை அதிகரிப்பு

கிளிநொச்சி,செப். 13

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூ தியத் திட்டத்தில் இணையும் சுயதொழில் புரிவோரின் எண் ணிக்கை அதிகரித்து வருவ தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர்களின் ஏற் பாட்டின் கீழ் நடத்தப்படும் நடமாடும் சேவைகளின் போது மக்கள் தாமாகவே முன் வந்து இந்தத் திட்டத்தில் இணைந்து வருவதையும் காணமுடிகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இது வரை 578 பேர் இதில் இணைந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலரின் ஏற்பாட்டில் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக நடத்தப்பட்டு வரும் நடமாடும் சேவைகளின் போது சமூக பாதுகாப்பு சபை யின் மாவட்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் இந்தத் திட்டத்தின் நன்மைகள் பற்றிய விளக்கவு ரையை நிகழ்த்தி வருகிறார்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிருஷ்ணபுரம், பாரதிபுரம் ஆகிய கிராம அலு வலர் பிரிவுகளில் இந்தத் திட் டத்தில் பயனாளிகளை இணைக் கும் நடமாடும் சேவை நடத்தப் பட்டது. ஏனைய பிரிவுகளில் தேர்தல் முடிவுற்ற பின்னர் நடமாடும் சேவைகள் நடத் தப்படுமெனவும் பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபடுவோர் அப்போது இதில் இணைந்து கொள்ள முடியுமெனவும் பிர தேச செயலர் தெரிவித்துள்ளார்.

(க-9)

நிரந்தர வீடுகள் வழங்கவில்லை உருத்திரபுரம் மக்கள் விசனம்

கிளிநொச்சி,செப். 13

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உருத்திரபுரம் பிரதேச மக்கள் தமக்கு இதுவரை நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்பட வில்லையெனத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிவநகர், உருத்திர புரம் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு ஆகிய கிரா மங்களில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் தமக்கு இதுவரை வீட்டுத் திட்டங்கள் எவையும் வழங் கப்படவில்லையெனவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு மனுக்களைக் கையளித்ததாக வும் ஆனால் இன்றுவரை எந்தவித வீட்டுத் திட்டமும் தமக்கு வழங்கப்படவில்லை எனவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் கிராமங்களில் சுமார் 800 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவற்றில் பத்து வீதமான குடும்பங்களுக்கே மீள்குடிய மர்வின் ஆரம்பத்தில் தற்காலிக வீடுகள் வழங் கப்பட்டிருந்தன. அவையும் சேதமடைந்து மோச மான நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் இந்தக் கிராமங்களிலுள்ள வீதிகள் கூட இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்துச் சிரமங்களையும் இங்குள்ள குடும்பங்கள் எதிர்கொண்டு வருகின்றன.

இதனைவிடப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், தனிநபர்களைக் கொண்ட குடும் பங்கள் ஆகியவற்றுக்கான உதவித் திட்டங் களும் இதுவரை அமுல் செய்யப்படாத நிலையே காணப்படுகின்றது.

தமது பகுதிக்கு இதுவரை வீட்டுத்திட்டங்கள் எவையும் வழங்கப்படாமை குறித்து இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

(க-6)

பெண்கள் மீது வன்முறை; தடுக்கும் வகையில் பிரதேச மட்டக் கூட்டம்

கிளிநொச்சி,செப். 13

கிளிநொச்சியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் மாதந் தோறும் இது தொடர்பான பிரதேச மட்டக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண் கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வரு வதைக் கருத்தில் கொண்டு கரைச்சி பிரதேச செயலக பிரி வின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் பிரதேச மட்டக் குழுக் கூட்டம் பிரதி மாதமும் இரண்டாவது புதன்கிழமைகளில் நடைபெறும் என்று பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித் துள்ளார்.

பிரதேச மட்டக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம், இடம்பெற்ற போது அவர் இதனைத் தெரி வித்தார்.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சமூக சேவைகள் அலுவலர், மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவ லர், மாவட்ட உளவள அலுவ லர், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அலுவலர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிர திநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(க-9)

பச்சிலைப்பள்ளியில் தென்னை நடுகையில் மிகுந்த ஆர்வம் காட்டும் பிரதேச மக்கள்

பளை,செப். 13

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள தென்னைச் செய்கையாளர்கள் தென்னை மீள் நடுகையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

நீண்ட காலம் நடைபெற்ற போர் காரணமாக பல்லாயிரக் கணக்கான தென்னைகள் அழிக்கப்பட்டன. தற்போது மீள் குடியமர்வின் பின்னர் இங்கு தென்னைச் செய்கையில் மக் கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரு கின்றனர். மேலும் காடழித் தல், தென்னம்பிள்ளைகளை மீள் நடுகை செய்தல், வேலி அமைத்தல் ஆகிய பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியின் கிராஞ்சியிலும், பளைப் பிரதேச செயலகப் பிரிவிலும் தென்னைகள் அதி களவில் காணப்படுகின்றன. மேலும் அக்கராயன் பிரதேசத்

தின் கோணாவில், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளிலும் கரைச்சி கிழக்கின் வட்டக்கச்சி, இராமநாத புரம்போன்ற பகுதிகளிலும்தென் னைகள் கூடுதலாகக் காணப் பட்ட போதிலும் போரின் போது எறிகணை வீச்சு, விமா னத் தாக்குதல் என்பவற்றி னால் பெருமளவு தென்னை மரங் கள் அழிக் கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைச் செய் கைக்குரிய பெருமளவு நிலப் பரப்பு காணப்படுவதால் அரச உதவிகளின் மூலமாக இதனை மேலும் விருத்தி செய்ய முடியு மெனத் தெரிவிக்கப்படுகின் றது.

(க-18)

கழிவுநீர் தேங்கி நிற்பதால் தொற்றுநோய் பரவும் ஆபத்து

அக்கராயன், செப். 13

கிளிநொச்சி நகரின் பல இடங்களிலும் கழிவுநீர் தேங்கி நிற்பதால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரம் போரினால் மோசமான அழிவுகளை எதிர்கொண்டது. குடியமர்வின் பின்னர் கட்டடங்கள் அமைக் கப்பட்டு வருகின்றன.

ஆனால் தேவையான கழிவு நீர் வாய்க் கால்கள் உரிய முறையில் அமைக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் மக்களின் வாழ்விடங்கள், உணவகங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையம் என பல இடங்களில் இருந்தும் வெளியேறும் கழிவு நீர் பல இடங்களிலும் தேங்கி நிற்கின்றது. இதனால் துர்நாற்றம் வீசுவதோடு தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாய நிலையும் உருவாகியுள்ளது.

மாரிமழை ஆரம்பிக்கவுள்ள நிலையில் கிளிநொச்சி நகரில் தொற்றுநோய்களின் தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-18)

நிறைவு பெற்றது வேலைத் திட்டம்

அக்கராயன்,செப். 13

பச்சிலைப்பள்ளி கிராம அலு வலர் பிரிவிலுள்ள கிளாலி கிரா மத்தில் கடந்த 150 நாள்களாக இடம்பெற்று வந்த வேலைத் திட்டமொன்று நிறைவு பெற் றுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத் தின் கீழ் இந்த வேலைத்திட்டம் இடம்பெற்று வந்தது.

இந்தக் கிராமத்தில் மழை காலத் தில் தேங்கும் வெள்ள நீரை வாய்க்கால் மூலமாக கடலில் செலுத்துவதற்கான கால்வாய் அமைத்தல், ஒழுங்கைகளைத் துப்புரவு செய்தல் ஆகிய வேலை கள் இடம்பெற்று வந்த நிலை யில் தற்போது அவ்வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. மீள்குடியமர்வுக் கிராமம் என்பதால் இந்த வேலைகள் இங்கு முன்னெடுக்கப் பட்டன. இதேவேளை கிளாலிக் கிரா மத்தில் 236 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் இங்கு மிதிவெடி அபாயம் உள்ள தாகமக்கள் தெரிவித்தனர்.

(க-18)

சிறப்பான சதுர்த்தி திருவிழா

நெடுங்கேணி, செப்.13

வரலாற்றுச் சிறப்புமிக்க மம்மில் பிள்ளை யார் ஆலயத்தின் வருடாந்த ஆவணி மாத சதுர்த்தித் திருவிழா திங்கட்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து எம்பெருமான் முதலில் உள் வீதி வலம் வந்தார். பின்னர் முத்துச் சப்பரத்தில் வெளி வீதியில் எழுந்தருளினார். இதன் போது அடியார்கள் பாற்செம்பு, தீச்சட்டி, காவடி ஆகியவற்றை ஏந்தி தமது நேர்த் திக் கடன்களை நிறைவு செய்தனர். இதில் சிறு வர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது.

ஆலயத்தில் குழுமியிருந்த அடியார் களுக்கு அன்னதானமும் வழங்கப் பட்டது.

இரவு வேலை கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-435)



களி மண்ணால் வீதி புனரமைப்பு; மழை பெய்ததால் விபத்துகள்

பாண்டியன்குளம், செப்.13

கரும்புள்ளியான் கிராமத்தை மல்லாவியுடன் இணைக்கும் உள்ளக வீதி களிமண் கொண்டு புனரமைக்கப்பட்டதால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின் றன.

மல்லாவியில் இருந்து கரும் புள்ளியான், பாண்டியன்குளம் மற்றும் ஏனைய கிராமங் களுக்கு மிகவும் இலகுவில் செல்லக்கூடிய வகையில் இந்த வீதி அமைந்துள்ளது. ஆனால் களிமண் கொண்டு அமைக் கப்பட்டதால் தற்போது பெய்து வரும் மழையின் போது இவ் வீதியில் பயணிப்போர் பாதிப் புகளை எதிர்கொண்டு வரு கின்றனர். கடந்த வெள்ளிக் கிழமை அமைச்சர்கள் வரு வதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்த தகவலை அடுத்து பிரதேச செயலக வாகன சாரதி தனது மோட்டார் சைக்கிளில் இந்த வீதியூடாகச் சென்றபோது களிமண் பகுதியில் சிக்குண்டு காயங்களுக்குள்ளானார்.

இது போன்று இந்த வீதியூ டாகப் பயணித்த பாடசாலை மாணவர்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

(க-415)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வாக்குகளின் மகத்துவத்தை மசிக்க இடமளியாதீர்.....

பிந்திய தகவல்களின் பிரகாரம், வடக்கு மாகாண சபைத் தேர்தலில், பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்புக் குழுவும் தெற்காசிய தேர்தல் கண்காணிப்புக் குழுவும் செயற்பட உள்ளன. ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கும் எமது தேர்தல் ஆணையாளரால் அழைப்பு விடுக்கப் பட்டிருந்தபோதிலும், தமக்குப் போதிய அவகாசம் இல்லாமையால் வரமுடியவில்லை என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கு மற்றும் மத்திய, வட மத்திய மாகாண சபைகளுக்கு ஒரே நாளில்-எதிர்வரும் இருபத்தோராம் திகதி-தேர்தல் நடைபெறுமாயினும், ஒப்பீட்டளவில் அனைத்துலக நாடுகளினதும், மிகப்பல அமைப்புகளினதும் கவனத்தை ஈர்த்துள்ளது வட மாகாண சபைத் தேர்தலே ஆகும்.

அதனைக் கருத்தில் கொண்டு அனைத்துலகத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களை வடக்கிலேயே பணிக்கு அமர்த்துவதற்குத் தேர்தல் ஆணையாளர் முடிவு செய்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுக்குப் புறம்பாக, 'பவ்ரல்' அமைப்பின் அழைப்பின் பேரில், சுதந்திரமான தேர்தலுக்குரிய ஆசிய வலையமைப்பிலிருந்தும் கண்காணிப்பாளர்கள் வடக்குத் தேர்தல் காலத்தில் இங்கு பிரசன்னமாகி இருந்து பணியாற்ற உள்ளனர்.

ஏனைய இரண்டு மாகாணங்களையும் விட, ஒப்பீட்டளவில் வடக்கிலேயே, தேர்தல் விதிகள் மீறப்படுவதும், வாக்காளர்கள் அச்சுறுத்தப்படுவதும் "விலைக்கு" வாங்கப்படுவதும் உயர்ந்து நிற்கும் என்பது இப்போதே ஒளிர்ந்து தெறிக்கிறது.

மாகாண சபைக்குத் தாம் தெரிவு செய்யப்பட்டால், மக்களின் ஜனநாயக உரிமைகளை நாடியும், அவர்களின் தேவைகளை எவ்வகையில் நிறைவேற்றுவர் என்று தமது செயல் திட்டங்களை அறிவிப்பதற்கே தேர்தல் பரப்புரைக்கு வகை செய்யப்படுகிறது.

அனைத்துலக மனித உரிமைகள் தரத்துக்கு இசைவாக, அமைவாக, வாக்குரிமை உள்ள ஒவ்வொரு பிரசையினதும் வாக்களிக்கும் உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இதனை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அண்மையில் நடைபெற்ற வழிகாட்டல் நிகழ்வு ஒன்றில், நீதியான தேர்தலை நடத்துவதில் பங்காளிகளாக இருக்க வேண்டிய தரப்புக்களுக்கு விஸ்தாரமாக எடுத்து விளக்கியது.

ஆனால் தேர்தலில் தமது தரப்பு வென்றுவிட வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்குடன், தேர்தல் விதிகளை மட்டுமன்றி ஜனநாயகக் கோட்பாடுகளையும் காலால் மிதித்துச் செயற்படும் போக்கு வடக்குத் தேர்தலில் மேலெழுந்து வருகிறது.

★ இம்மாதம் ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பு வேளையில் தேர்தல் பரப்புரை செய்யப்பட்டமை.

★தபால் மூல வாக்களிப்பின்போது, ஒரு நிலையத்தில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டதான குற்றச்சாட்டு.

★தேர்தல் பரப்புரைகளில் அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுவதான குற்றச்சாட்டு.

மேற்கூறியவை, சட்டவிரோதச் செயற்பாடுகள் குறித்த தகவல்கள் அதிகரித்து வருகின்றமையைச் சுட்டுகிறது. இவை நீதியான தேர்தலுக்குரிய ஆரோக்கியமான செயல்கள் அல்ல.

இத்தகைய ஒரு நிலையில், வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியும் நியாயமும் உள்ளதாக, உரிய நியமங்களையும் விதிமுறைகளையும் கொண்டதாக நடைபெறுமா, நடத்தப்படுமா என்ற சந்தேகம் வலுத்துவிடும்.

அனைத்துலகத்தின் கண் வடக்கு மாகாண சபைத் தேர்தல் மீதே மிகக் கூடிய பார்வையை கொண்டுள்ளது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

வடக்கே வரும் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அவர்கள் சார்பான உயர் அதிகாரிகள் எல்லோரும், தேர்தலில் யார் வெல்வார்கள் என்ற கேள்விக்கு முன்னதாக-

சுதந்திரமான, நியாயமான, தேர்தல் விதிகளுக்கு அமைவாக மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமா என்ற வினாவையே முதன்மைப்படுத்திக் கேட்கிறார்கள், நேரில் கண்டறிந்தும் செல்கிறார்கள்.

அதேவேளை, தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்து மக்களுக்கு அறிவுறுத்த உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் நடவடிக்கை எடுத்து வருவது இவ்வேளையின் அத்தியாவசிய தேவை.

தேர்தல் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு வாக்காளர் மத்தியிலான விழிப்புணர்வே முதன்மையான தேவை.

எல்லாவற்றுக்கும் மேலாக, உங்களுக்குள்ள ஜன நாயகத்தின் முதல் சொத்தான வாக்குரிமையை, "விலை" பேசி வருபவர்களிடம் விற்காமல், அசட்டை செய்து அதனை வீணாக்காமல், நீங்களே தேர்தலின் நாயகர்கள் என்பதனை மனதார உணர்ந்து செயற்பட வேண்டிய வேளை இது. இதனை இப்போதே நெஞ்சிருத்தி மனங்கொள்ளுங்கள்.

விக்னேஸ்வரனின் தெரிவால் சிங்களத் தலைமைகளுக்கு கிலி

தொல்காப்பியன்

சிங்களத் தலைமைகள், அரசியல்வாதிகள், இராஜதந்திரிகளால் அவர் பற்றி ஒருமித்த கருத்தை வெளிப்படுத்த முடியாதுள்ளது. சிலர் அவரைத் தாடி வைத்த பிரபாகரன் என்கின்றனர். இன்னும் சிலர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் லக்ஸ்மன் கதிர்காமர் என்கின்றனர். வேறு சிலர் அன்ரன் பாலசிங்கத்தின் மறு வடிவம் என்கின்றனர். எஸ். எல். குணசேகர போன்ற சிங்கள இனவாதிகள் இவரை இன்னொரு செல்வநாயகம் என்கின்றனர்.

இப்போது எல்லோருடைய கவனமும், வடக்குமாகாண சபைத் தேர்தலின் மீது திரும்பியுள்ளது போலவே, எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற ஒருவராக மாறியிருக்கிறார் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட் பாளராக, இவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிறுத்தியுள்ளதுதான். இந்தக் கவனிப்புக்கு மிகமுக்கியமான காரணம், குறிப்பாக, சிங்கள அரசியல் தலைமைகள் மத்தியில் சி.வி.விக்னேஸ்வரன் சவால்மிக்க ஒருவராகவே பார்க்கப்படுகிறார் என்பதை, அவர்களின் கருத்துகளில் இருந்து புரிந்து கொள்ளலாம். வடக்கு மாகாண சபைத் தேர்தலில், மாவை சேனாதி ராசாவோ அல்லது இரா.சம்பந்தனோ முதலமைச்சர் பதவிக்கான வேட்பா ளராக நிறுத்தப்பட்டிருந்தால் கூட, சிங்கள அரசியல் தலைமைகள் இந்தளவுக்கு மிரண்டு போயிருக்காது.

ஏனென்றால், அவர்கள் தமக்கென ஒரு வழக்கமான அரசியல் பாணியைக் கொண்டவர்கள், ஏற்கனவே அவர்களின் அரசியல், இராஜதந்திர அணுகுமுறைகள் சிங்களத் தலைமைகளுக்குப் பரிச்சயமானவை. எனவே, இரா.சம்பந்தனையோ, மாவை சேனாதி ராசாவையோ கையாள்வதற்கான புதிய உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை. வழக்கம்போலவே, அவர்களைப் புலிகளின் பிரதிநிதிகள் என்ற முத்திரை குத்திக் கொண்டால் சரி.

எதிர்வு கூறமுடியாத் தலைவர்

ஆனால், முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்ரனைப் பொறுத்த வரையில், இதுவரை அரசியல் பேசாதவர். அரசியலுக்குள் இருக்காதவர். அரசியலுக்குப் புதியவரான அவர், எவ்வாறு அரசியல் நகர்வுகளை மேற் கொள்ளப் போகிறார் என்று கணிக்க முடியாமல் சிங்களத் தலைமைகள் திணறுவதைக் காணமுடிகிறது. ஒரு நியாயமான நீதிபதியாக பெயரெடுத்த அவர், அரசியலில் எத்தகைய உத்திகளைக் கையாளுவார் என்று எதிர்வு கூறமுடியாதவராகவே இருக்கிறார். அதனால் தான், சிங்களத் தலைமைகள், அரசியல்வாதிகள், இராஜதந்திரிகளால் அவர் பற்றி ஒருமித்த கருத்தை வெளிப்படுத்த முடியாதுள்ளது.

சிலர் அவரைத் தாடி வைத்த பிரபாகரன் என்கின்றனர்.

இன்னும் சிலர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் லக்ஸ்மன் கதிர்காமர் என்கின்றனர்.

வேறு சிலர் அன்ரன் பாலசிங்கத்தின் மறு வடிவம் என்கின்றனர்.

எஸ்.எல்.குணசேகர போன்ற சிங்கள இனவாதிகள் இவரை இன்னொரு செல்வநாயகம் என்கின்றனர்.

அதாவது அவரவர் பார்வைக்கு சி.வி.விக்னேஸ்வரன் வித்தியாசமான தோற்றத்தைக் கொடுக்கிறார். தம்மை வித்தியாசமாகப் பார்க்க வைத்துள்ளார்.

முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் அரசியல் பிரவேசம் தெளிவான முடிவொன்றை எடுக்க முடியாமல் திண்டாடுகின்ற நிலைக்கு சிங்களத் தலைமைகளைத் தள்ளி விட்டுள்ளது என்பதே உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொடுத்த முதல் அடி

வடக்கு மாகாணசபைத் தேர்தலை தனது அரசியல் நலனுக்காகப் பயன் படுத்திக் கொள்ளத் திட்டமிட்ட அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொடுத்த முதல் அடி என்றே இதைக் கூறலாம். இப்போது, சிங்கள அரசியல் தலைமைகள் அனைத்தின தும் கவனம், விக்னேஸ்வரனை நோக் கியே குவிந்துள்ளது.

அதற்கான காரணம், அவரது எதிர்கால நகர்வுகள் எவ்வாறு இருக்கப் போகின்றன என்ற கேள்விக்கு விடை தேடுவது தான்.

இத்தகைய சூழலில், அவர் தற்போது வெளியிடும் கருத்துகள், சிங்களத் தலைமைகளுக்கு நெருக்கடி கொடுக்கக் கூடியதாகவே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இன்னொரு பிரபாகரன்

2002ஆம் ஆண்டு போர்நிறுத்தம் ஏற்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளை ஆயுதப் போராட்டத்தில் இருந்து அகற்றி, பிரபாகரனை வேட்டி கட்டிய அரசியல் வாதியாக மாற்றவே அமெரிக்கா விரும்பியதாக அரசியல் ஆய்வாளர்களும், இராஜதந்திரிகளும் குறிப்பிடுவது வழங்கம்.

ஒரு தீவிர தமிழ்த் தேசியவாதியான, சி.வி.விக்னேஸ்வரனை சிங்களத் தலைமைகள் சில பிரபாகரனின் மறு வடிவம் என்று விமர்சிக்கின்றனர்.

இங்கே இப்போது, ஆயுதம் ஏந்திய ஒரு பிரபாகரன் உருவானால் கூட, சிங்களத் தலைமைகளுக்கு இந்தளவுக்கு அச்சம் ஏற்பட்டிருக்காது.

ஏனென்றால், அமெரிக்கா அல்லது மேற்குலகம் விரும்பியது போல - வேட்டி கட்டிய ஒரு பிரபாகரன் போல, அரசியலில் சி.வி.விக்னேஸ்வரன் உருவெடுத்துள்ளமை தான் சிங்களத் தலைமைகளைத் திணற வைக்கிறது.

மேற்குலகின் ஆதரவு பெற்ற, இந்தியாவினால் புறக்கணிக்க முடியாத, வலுவானதொரு தலைமை, இலங்கையில் தமிழர்கள் மத்தியில் இருந்து உருவாவது, அரசியல் ரீதியாக தமக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்பது சிங்களத் தலைமைகளுக்கு நன்றாகவே தெரியும்.

இதில் வேடிக்கையான விடயம் ஒன்று உள்ளது.

தமிழர்களுக்கு புதிய அரசியல் தலைமை ஒன்று தேவை என்றும், அதை உருவாக்க வேண்டும் என்றும் அடிக்கடி வலியுறுத்தி வந்தவர் வேறு யாருமல்ல, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான். வடக்கு மாகாணசபைக்கு சி.வி.விக்னேஸ்வரன் போன்றதொரு புதிய தலைமை போட்டியில் இறக்கப்படக் கூடும் என்று அவர் சற்றும் எதிர்பார்த்திருந்திருக்கவில்லை.

ஜனாதிபதி எதிர்பார்க்காத புதிய தலைமை

காரணம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்பார்த்த தமிழர்களின் புதிய தலைமை, தமக்கு வாலாட்டுகின்றதாக இருக்க வேண்டும் என்றே அவர் எதிர்பார்த்திருந்தார்.

13ஆவது திருத்தத்தின் அதிகாரங்களையோ, தமிழர்களின் நியாயமான உரிமைகளையோ தட்டிக் கேட்கத்தக்கவராக, இருக்க வேண்டும் என்று அவர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. இப்போது வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்று, சி.வி. விக்னேஸ்வரன் முதல்வர் பதவியைக் கைப்பற்றி விட்டால் என்ன செய்வதென்ற குழப்பம் சிங்களத் தலைமைகளிடம் தோன்ற ஆரம்பித்து விட்டது.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சித்தோம் என்று இந்தியாவையும், வெளியுலகையும் நம்ப வைப்பது தான் முக்கியமானது, என்று நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கிளிநொச்சிக் கூட்டத்தில் குறிப்பிட்டது அரசை யோசிக்கவே வைத்திருக்கும். ஏனென்றால், முன்னர் புலிகளையும், பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தந்திரமான முறையில் பேச்சு மேசையில் இருந்து ஒதுங்க வைத்து, பேச்சுக்கு வருகிறார்களில்லை, தீர்வுக்கு ஒத்துழைக்கிறார்கள் இல்லை என்று வெளியுலகை நம்பவைத்தது அரசு. அந்த நகர்வுகளுக்குச் சவாலாக, விக்னேஸ்வரனின் அரசியல் நகர்வுகள் இருக்கும் என்பதை, அவரது கருத்துகளில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

அதுமட்டுமன்றி, முதற்கட்டமாக அகிம்சைப் போராட்டம், அடுத்து ஆயுதப் போராட்டம், இப்போது மூன்றாவது கட்டமாக, ஜனநாயகப் போராட்டம் நடத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளதும், சிங்களத் தலைமைகளை வெகுவாகச் சிந்திக்க வைத்திருக்கும் என்றே கருதப்படுகிறது.

வடக்கு மாகாணசபையின் முதன்மை வேட்பாளர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இராஜதந்திர ரீதியாகவும், சட்டரீதியாகவும் மஹிந்த அரசுக்குச் சவாலை ஏற்படுத்தப் போவதென்னமோ உண்மையே.

பூமி வெப்பமாதல்; நமக்குக் கேடு



சங்கவி

ஆண்டுதோறும் பூமியின் வெப்பம் அதிகரித்து நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பின்பு உலகெங்கும் வருடா வருடம் மூன்று லட்சம் பேர் பூமியின் சூட்டின் காரணமாக மரணமடையக் கூடும் என்று ஓர் ஆய்வு கூறுகிறது. கடந்த பத்து ஆண்டுகளாக இது ஒன்றரை லட்சமாக இருந்து வருகிறது.

பூமியைச் சுற்றிலும் ஏற்படுகிற ஒரு வகை பசை வளையம் காரணமாக ஒளி உள்ளே வருகின்றது. பூமிக்கு வரும் வெளிச்சம் வானத்துக்கு திரும்புவது தடைபடுகின்றது. பசுமை இல்ல 'விளைவு' என்ற இதில் சூழும் காற்றில், கரி அமில வாயு அதிகமாக இருக்கிறது. இது வெப்பக் கூட்டலுக்கு காரணமாக இருக்கிறது.

வளர்ச்சியடைந்த நாடுகள் இந்தக் கேடுகளுக்கு காரணமாக இருக்கின்றன. வளர்முக நாடுகள் இதன் பாதிப்புக்களை பெரும்பாலும் அனுபவித்து வாழ்கின்றன. இதில் இந்தியாவும் ஒன்று. உலகம் வெப்பமாதல் காரணமாக கடல் மட்டம் மெல்ல மெல்ல உயர்ந்து கொண்டிருக்கிறது. இதன் விளைவாக கடலோரப் பகுதிகள் கடலுக்குள் சென்று விடும். கடல் சூழலைப் பெரிதும் காப்பாற்றி வரும் பவளப் பாறைகள் அழிவுக்குள்ளாகும். கல்சியத்தை உள்ளீடாகக் கொண்ட பவளப் பாறைகள், சுண்ணாம்பு தயாரிக்கவும், சிமெண்ட் தயாரிக்கும் தொழிற் சாலைகளில் பயன்படுத்தவும் திருட்டுத்தனமாக வெட்டி எடுக்கப்படுகின்றன. மருத்துவத்துறை, அழகு சாதனப் பொருள்கள் தயாரிக்கவும் இவை பயன்படுத்தப்படுகின்றன. மீனவர்கள் பிடிக்கும் பலவகை மீன்கள் பவளப் பாறையைச் சார்ந்தே உள்ளன. மண் அரிப்பையும் சுனாமிப் பேரலைகளால் ஆபத்து ஏற்படுவதையும் இந்தப் பவளப் பாறைகள் தடுக்கின்றன. இவற்றைத் தகர்ப்பதற்காக வெடிமருந்துகள் பயன்படுத்தப்படுவதால் சுற்றுச் சூழல் மாசுபடும் அபாயம் ஏற்படுகிறது.

உலக வெப்பமுறுதலால் இமயமலையின் பவளப்பாறைகள் உருகும். அதன் விளைவாக, நிலத்தடி நீர் மட்டம் கீழே போவதோடு நீர் உப்பாகவும் மாறும். டெங்கு, மலேரியா, போன்ற நோய்கள் கூட அதிகரிக்க வாய்ப்பாகும். இதனால், வானம் பார்த்த பயிர்ச் செய்கை பெரிதும் பாதிக்கப்படும். விவசாயமும் வெகுவாகக் குறைந்து போகும்.

உலக வெப்பமுறுதலுக்கு பெரிதும் காரணமான நாடுகளில் ஒன்று அமெரிக்கா. பசுமை இல்ல வாயுக்களை அதிகமாக வெளியிட்டு பசுமைச் சூழலை அது கெடுக்கிறது. காரியத்தால் ஏற்படும் மாசுபாட்டைத் தடுக்க எடுக்கும் முயற்சிகள் குறைவாகவே இருக்கின்றன.

எரிபொருள்களைப் பொறுத்தவரை சூரிய ஒளி, காற்று விசை, காட்டாமணக்கு, கரும்புச் சக்கை போன்ற வற்றைக் கொண்டு மாற்று எரிபொருளை உருவாக்க வேண்டும்.

புகை வண்டிகள், மோட்டார் வாகனங்கள், விமானங்கள், தொழிற் சாலைகள் போன்றவை மரபு சாரா இயற்கை ஆற்றலால் இயக்கப்பட்டால் வெப்பமுறும் சூழலைத் தவிர்க்கலாம். தொடரும் தட்ப வெப்ப மாற்றத்தை தவிர்க்க, பெட்ரோலியப் பொருள்கள், நிலக்கரி போன்றவற்றைத் தவிர்த்து, மாசடைதலை உண்டாக்காத இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் வெப்ப முறுதலைக் குறைக்கலாம்.

முறையான நீர் மேலாண்மையானது முறை பயிர்களுக்கு வரும் நோய்களைக் கட்டுப்படுத்தும். தட்ப வெப்ப மாற்றத்திற்கேற்ப உயர்தர விதைகள், நிலத்தை பாதிக்காத இயற்கை உரங்கள் மாசுபாட்டையும், வெப்பமுறுதலையும் குறைக்கும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் எரிபொருள் உபயோகத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டபோது அமெரிக்கர்களின் வாழ்க்கை முறையில் எரிபொருள்களை குறைத்துக் கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை' என்று கூறியது அமெரிக்கா.

சுற்றுச்சூழலில் அக்கறை கொண்டவர்கள், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உரக்கச் சொல்ல வேண்டிய கடமைக்கு தற்போது தள்ளப்பட்டுள்ளார்கள்.

உயிர் காக்கும் உன்னதப் பணி

ந. இலங்கேஸ்வரன்,
முதலுதவி போதனாசிரியர்,
இலங்கை செஞ்சிலுவைச்சங்க
யாழ். கிளை

இன்று உலக முதலுதவி தினம்

முதலுதவியானது இன்று முக்கிய ஒன்றாக கருதப்படுகின்றது. இயற்கை மற்றும் செயற்கை அழிவுகளினால் பாதிக்கப்படும் மனித உயிர்கள் இறப்புகள் மற்றும் அங்கவீனம் ஏற்படுவதற்கு காரணம் சரியான முதலுதவி இல்லாமையாகும்.

திடீர் விபத்து அல்லது திடீர் நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அந்த இடத்தில் இருந்து வைத்திய உதவி கிடைக்கும் வரை சூழலில் உள்ள பொருள்களைக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பயிற்றப்பட்ட ஒரு முதலுதவியாளரினால் செய்யப்படும் உதவியே முதலுதவி ஆகும்.

முதலுதவியின் நோக்கங்கள்

1. உயிரைக் காத்தல்
2. நோயின் தீவிரத்தன்மையைக் குறைத்தல்
3. சுகமடைதலை ஊக்கப்படுத்தல்

மேற்கூறப்பட்ட மூன்று நோக்கங்களும் எந்த நோயாளிக்கு முதலுதவி செய்யும் போது இருக்க வேண்டும்.

விபத்து நடந்த இடத்துக்குச் செல்லும் போது முதலுதவியாளர் பின்வரும் விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

1. நிலைமையை மதிப்பீடு செய்தல்.
2. சம்பவம் நடந்த இடம் முதலுதவியாளனுக்குப் பாதுகாப்பானதா, சுற்றியுள்ளவர்களுக்கு பாதுகாப்பானதா என்பதை ஆராய வேண்டும். எத்தனை பேரின் உதவி தேவைப்படும், எத்தகையோர் அந்த இடத்தில் உதவி செய்யக் கூடியவர்கள், இதை விட வெளியில் இருந்து தேவைப்படும் விசேட உதவிகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அந்தச் சம்பவ இடத்தினை பாதுகாப்பான தாக மாற்றுதல். அந்த விடயம் பாதுகாப்பான தாக இருந்தால் உடனடியாக முதலுதவியை மேற்கொள்ள முடியும். பாது காப்பான இடம் இல்லையெனில் எச்சரிக்கை முக்கோணிகளை வைக்க வேண்டும். அதன் பின் பாதுகாப்பானதாக மாற்றக் கூடிய பொலிஸ் தரப்புக்கு தக வல்களை வழங்கி அவர்கள் வரும் வரை காத்திருக்க வேண்டும். ஆபத்தான விடயங்களை முதலுதவியாளன் கையில் எடுக்க வேண்டாம்.
3. அவசர உதவி

அந்தச் சம்பவத்தின்போது நோயாளருக்கு அவசர உதவி தேவையென்பதை தீர்மானிக்க வேண்டும்.

A. விபத்தின் போது உதவி கோரல்

இரு வகையான உதவி கோரல்

1. அருகில் இருப்பவர்களை உதவி கோரல்.
2. தூர இருப்பவர்களை உதவிக்கு அழைத்தல்

அருகில் இருப்பவர்களை உதவிக்கு அழைக்கும் போது சத்தமிட்டு அழைக்கலாம்.

தூர இருப்பவர்களை அழைக்கும் போது தொலைபேசியுடனான அழைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. எப்போதும் தொலைபேசியூடாக உதவி பெற்றுக் கொள்ளும் போது, முதலுதவியாளன் தன்னைப் பற்றி ஒரு சில வார்த்தைகளில் அறிமுகப்படுத்த வேண்டும். இதன் பின், தான் எந்த நிறுவனத்துக்கு உதவி கோரினாரோ அந்த நிறுவனமா என்பதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். இதன் பின்னர் தான் எந்தச் சம்பவத்தில் இருக்கின்றார் என்பதையும் சரியான இத்தையும் குறிப்பிட வேண்டும். சம்பவம் தொடர்பாக தெளிவாக குறைந்தளவு நேரத்தில் செல்ல வேண்டும். அந்த நிறுவனத்திடம் இருந்து என்ன உதவி தேவை என்பதைத் தெளிவாக கூறவேண்டும். ஒரு விபத்து ஆரம்பத்தின் போது உதவி கோரும் போது குறைந்தளவு நேரத்தில் சம்பவத்தை விளக்கமாக குறிப்பிட வேண்டியது முக்கியமானது.

அதிக குருதிப் பெருக்குக்கு உள்ளானோர்

அதிக குருதிப் பெருக்கு ஆபத்தானது என்பதால் அடுத்ததாக விபத்தொன்றின் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம் அதுவே ஆகும். நாடி நாளம் போன்றவை பாதிக்கப்பட்டால் கூடுதலான குருதி வெளியேறும் சந்தர்ப்பம் உண்டு. குருதி வெளியேறும் பொழுது பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. ஏதாவது பொருள்கள் காயத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில் பல அடுக்குகளால் மடிக்கப்பட்ட துணி ஒன்றினால் (அணியம்) நேரடி அழுத்தம் கொடுக்க வேண்டும்.
2. குருதியைக் கட்டுப்படுத்த வேண்டும். முதலுதவியாளன் தனது கைகளை சவர்க்காரம் இட்டுக் கழுவ வேண்டும். கையுறை அணிதல் வேண்டும்.
3. காயங்களுக்கு மிக அண்மையில் இருமுவதையும், தும்முவதையும், தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
4. இதன் பின் பாதிக்கப்பட்ட பகுதியை இதயத்துக்கு மேல் உயர்த்த வேண்டும்.
5. நோயாளியை இருக்க, படுக்க வைக்க வேண்டும். இது காயத்துக்கு ஏற்றவாறு அமையலாம்.
6. இதன் பின் ஏற்கனவே வைத்த அணியத்தை பந்தன்மிட வேண்டும்
7. அந்தச் சந்தர்ப்பத்தில் கூடுதலான குருதி வெளியேறுமாயின் இன்னொரு அணியத்தை மேலாக வைக்க வேண்டும். அதற்கும் குருதி கட்டுப்பட வில்லையாயின் புதிதாக அணியம் ஒன்று தயார் செய்து வைக்கப்பட்ட இரண்டையும் விலக்கி புதிய அணியத்தை வைத்துப் பந்தனமிட வேண்டும். பந்தனமிடும்போது குருதிச் சுற்றோட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் ஆகும்.
8. வேறு காயங்கள் தொடர்பாக ஆராயும் ஒரு சந்தர்ப்பத்தின் போது பெரிய காயம் இருந்தாலும் சில இடங்களில் இருக்கும் சிறிய காயங்கள் பெரிய பாதிப்பை உண்டு பண்ணலாம். ஏனைய காயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.
9. இதன் பின் அதிர்ச்சி தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். அதிர்ச்சி கூடியளவு குருதி உள்ளகமோ, வெளியகமோ வெளியேறினால் தீர்க்கலாம். மின்சாரம், நீரிழிவு ஏற்பட்டால் அதிர்ச்சி ஏற்படலாம். சுவாச வீதம் குறைவானதாகவும், நாடித் துடிப்பு வீதம் மாற்றமானதாகவும், குளிர்காற்று வருவது போன்ற உணர்வு ஆகியன அதிர்ச்சிக்குரிய அறிகுறிகள். அதிர்ச்சி உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியது. உடனடியாக அதிர்ச்சிக்குரிய முதலுதவி வழங்கவும்.

வீக்கம், விகாரம், அதிர்ச்சி, மென்மைத்தன்மை, வலி, நிறமாற்றம், சத்தம் ஆகும். முறிவின்போது சுய நினைவுடன் இருந்தால் நோயாளி தனக்கு சுகமான நிலையில் உறுப்பை வைத்திருப்பார். அந்த நிலையிலேயே நாம் முதலுதவி செய்ய வேண்டும். முறிவுக்குரிய முதலுதவி முறிந்த பகுதியை அசைக்கக் கூடாது. அசைக்காமல் அதிதூரத்தை நிலைப்படுத்த வேண்டும். ஆதாரமாக கடதாசி, மட்டை பாவிப்பது நல்லது. முறிவுக்குக் கட்டுப்போடும் போது முக்கோண கட்டுத்துணிகளைப் பாவிப்பது சிறந்ததாகும்.

விபத்தின் போது மேற்குறிப்பிட்ட விடயங்களை முதலுதவியாளர் மேற்கொண்டு உயிரைக் காக்கும் உன்னத பணியினை மேற்கொள்ளலாம். கடந்த காலங்களில் விபத்துக்குட்பட்ட வீதியில் இருக்கும் நோயாளியை முதலுதவி செய்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு தயக்கம் காட்டினார். அதற்குப் பின்னர் தங்களுக்கு விசாரணைகள் ஏற்படும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் இருக்கின்றது.

விபத்து ஒன்றின்போது பாதிக்கப்பட்டு இருந்தாலும் இன்னொருவர் யாராவது உதவி செய்ய வேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பார்கள். அந்த நிலையில் நாம் அவரை விட்டுச் சென்றால் அத்தகைய நிலை நமக்கு ஒரு நாளில் நடக்கும்போது மற்றவர்களும் விட்டுச் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படும். எனவே எல்லோரும் விபத்தொன்றில் பாதிக்கப்பட்டவரை உரிய முதலுதவி செய்து வைத்தியசாலையில் சேர்ப்போம் என்று இந்த உலக முதலுதவி தினத்தில் உறுதி எடுத்துக்கொள்வோமாக.

தருவது வித்தியா

இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

மேடம்: அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். அநாவசியமாக யாருக்கும் எந்த உறுதி மொழியும் வழங்க வேண்டாம். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடி வந்து நீங்கும்.

இடபம்: பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.

மிதுனம்: நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷ மடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

கடகம்: எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்துவந்த தேக்கநிலைமாறும்.

சிங்கம்: வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

கன்னி: புதிய எண்ணங்கள் தோன்றும். பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு உண்டு.

நாளை

ஆவணி-29 சனிக்கிழமை 14.09.2013
திதி: தசமி பி.இ. 03.21 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.இ.01.35 வரை
சுபநேரம்: 03.03 - 04.33 வரை
இராகுகாலம்: 09.03 - 10.33 வரை

துலாம்: எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

விருச்சிகம்: ஒரே நாளில் முக்கியமான பல வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். சிலரின் நயவஞ்சகச் செயலை நினைத்து வருந்துவீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

தனுசு: வியாபாரத்தில் மிகுதிகளை நயமாகப் பேசிப் பெற்றுக்கொள்ளுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

மகரம்: புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

கும்பம்: வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

மீனம்: குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வாகனச் செலவுகள் குறையும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

சுடோக்கு

எண் விளையாட்டு

8				1	3	2		9
		7		2			4	
2	6	1						7
			4	7	2			
5			1		6			4
		4	8	3	5			
4						6	7	8
	5			8		4		
9		8	2	6				1

நேற்றைய சுடோக்கின் விடை

1	3	4	2	7	9	5	8	6
2	7	9	6	8	5	1	3	4
6	8	5	4	3	1	2	9	7
5	1	7	9	4	3	8	6	2
9	4	6	1	2	8	7	5	3
3	2	8	7	5	6	4	1	9
4	5	3	8	6	7	9	2	1
8	9	2	3	1	4	6	7	5
7	6	1	5	9	2	3	4	8

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஆண்டுகள் நான்கு ஆனபின்பும் ஆறவில்லை உம் நினைவு

மண்ணோடு
06.07.1951

கண்ணோடு
28.08.2009

திதி: நவமி (13.09.2013)

எம்மைப் பெற்று வளர்த்து பேணிக்காத்து
அன்பும் அறிவும் ஊட்டி வளர்த்து
தரணியிலே வாழ வைத்த -எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள்

எம்மை விட்டுப் பிரிந்து நான்கு
ஆண்டுகள் ஆனபோதும் எம் நெஞ்சத்தில்
உங்கள் நினைவுகள் என்றும்-பசுமையாய்
நித்தம் உங்களை அழைக்கின்றோம்

நான்கு ஆண்டுகள் என்ன நூறாண்டு ஆனாலும்
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும் நேசமும்
மறைந்து போகுமா? -எம்மைவிட்டு
என்றும் உங்கள் நினைவுடன் நாம்

என்றும் எம்மோடு இருப்பாய்!

அமரர்
சின்னத்தம்பி செல்வராஜா
(முன்னாள் மாயவன் பாரவூர்தி உரிமையாளர்)

குடும்பத்தினர்.

சங்கானை வீதி,அச்சுவேலி.

(சி/12406)(5.6.3)

ஐ.தே.க. ஆட்சியமைக்கும் அதுவெகு விரைவில் நடக்கும்

கொழும்பு.செப்.13

இனி ஆட்சியில் அமரப் போவது ஐக்கிய தேசியக் கட்சிதான் என்பது வெறும் வாய்ப்பேச்சல்ல. அது வெகு விரையில் நடக்கும். இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம்.

புதன்கிழமை இராஜகிரியவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த ஆண்டில் ஆட்சி அமைக்கும்.

கடந்த தேர்தலில் புலிகளின் உதவியோடே அரசு ஆட்சி அமைத்தது. இதனை யாரும் மறந்து விடக் கூடாது.

இது வெறும் வார்த்தைகள் அல்ல. அதற்கான ஓர் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாகவே. இம் முறை மாகாண சபைத் தேர்தல் கள் அமையப் போகின்றன. நாம் விடுதலைப் புலிகளுடன் இணைந்து வடக்கில் ஆட்சி அமைக்க முற்படுவதாக அரசு தெரிவிக்கின்றது.

ஆனால் கடந்த தேர்தலில் புலிகளின் உதவியுடனேயே அரசு ஆட்சி அமைத்தது. இதனை யாரும் மறந்து விடக் கூடாது.- என்றார். (ச-10)

அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

புத்தளத்தில் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டபோது, அமைச்சர்கள் தினேஷ் குணவர்தன, பிரியாங்கர ஜயரத்ன, பாடலி சம்பிக்க ரணவக்க உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பரப்புரை நடவடிக்கைகளில் ஆளுநர்கள் ஈடுபடக்கூடாது

மஹிந்த தேசப்பிரிய அறிவிப்பு

கொழும்பு.செப்.13

மாகாண ஆளுநர்கள் தேர் தல் பரப்புரை நடவடிக்கை களில் ஈடுபட கூடாது என்று தேர்தல் ஆணை யாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித் தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஆளுநர்கள் ஈடுபடக்கூடாது. வடக்கு மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்கள் ஆளும் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

ஆளும் கட்சித் தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஆளுநர்கள் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறு செயற் படக் கூடாது என்று கட்சி செய லர்கள் ஊடாக அறிவித்துள் ளேன் என்று அவர் குறிப் பிட்டார்.

இதேவேளை அரச தரப்பு தேர்தல் பரப்புரை நடவடிக் கையில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஈடுபட்டு வரு கிறார். அரச சேவையாளரான அவர், தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவது விதிமுறைகளை மீறும் செயலாகும்.

ஆளுநரின் இந்த நடவடிக் கையை உடனடியாகத் தடுத்து நிறுத் துங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவ ணபவன் தேர்தல் ஆணையா ளருக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை ஏற்கனவே அனுப்பி வைத்திருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஒ-ச)

பொதுநலவாய உச்சி மாநாடு; 31 பாடசாலைளுக்கு லீவு

கொழும்பு.செப்.13

பொதுநலவாய உச்சி மாநாட்டை முன்னிட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை கொழும்பிலுள்ள 31 பாடசாலைகளை தற்காலிகமாக மூடு வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. பாதுகாப்பு ஏற்பா டுகள் கருதியே தெரிவு செய்யப்பட்ட 31 பாடசாலைகள் மூடப் படவுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

அரச ஊழியர்களுக்கு வழிகாட்டல் கையேடு

கொழும்பு.செப்.13

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின்போது அரச ஊழி யர்களின் செயற்பாடுகள் தொடர் பில் ஆலோசனை வழிகாட் டல்கள் அடங்கிய கையேடு ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள் ளது.

இந்த ஆலோசனைக் கையேடு தேர்தல் அதிகாரிகள், பாது காப்பு அமைச்சின் உத்தியோ கத்தர்கள், பொலிஸ் உத்தியோ கத்தர்கள் ஆகியோருடன் புதன் கிழமை நடைபெற்ற கலந்து ரையாடலின்போதே வெளி யிடப்பட்டது. தேர்தலின் போது, அரச உத்தியோகத் தர்கள் தமது செயற்பாடுகள், பொறுப் புகள் என்பவற்றை உரிய வாறு பிற்பற்ற வைக்கும் நோக்குடன் இந்த ஆலோ சனை வழிகாட்டல்கள் வெளி யிடப்பட்டுள்ளன என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வின் ஆணையாளர் பிரதீபா மஹா நாமஹேவா குறிப்பிட் டார்.

இந்தக் கையேட்டில் தேர்தல் சட்டங்களை உரிய முறையில் கடைப்பிடித்தல் மற்றும் தேர் தலின்போது மனித உரிமைக ளுக்கு மதிப்பளித்தல் ஆகிய விடயங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

சட்டவிரோதமாக மருந்து, சிகரெட் கொண்டு வந்த இருவர் சுங்கப் பிரிவிடம் சிக்கினர்

கொழும்பு.செப்.13

சட்டவிரோதமாக மருந்து வகை ஒன்றை இலங்கைக்குக் கொண்டுவந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத் தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னையில் இருந்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை விமானம் மூலம் வந்த நபரொருவரின் பயணப்பையில் குறித்த மருந்து வகை கண்டுபிடிக் கப்பட்டது என்று சுங்கப் பிரிவு தெரி வித்துள்ளது.

இந்த நபரிடம் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 'ட்ரெமடோல் ஹைரோ குளோரைட்' எனப்படும் வலி நிவாரணி வில்லைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மருந்தை அனுமதி இன்றி இலங்கைக்குக் கொண்டுவருவது தடை செய்யப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இதேவேளை, சட்டவிரோதமாக சிகரெட் வகைகளை இலங்கைக்கு கொண்டு வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். சார்ஜாவில் இருந்து வந்த குறித்த நபரிடம் இருந்து 9 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்கப் பட்டுள்ளன. (ச)

நாடு முழுவதும் மின்னல் தாக்கம்



கொழும்பு.செப்.13

நாடு முழுவதிலும் இடி மின் னல் தாக்கம் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள் ளது.

கடந்த இரண்டு வாரங்களில் மின்னல் தாக்கத்துக்கு இலக் காகி இரண்டு பேர் உயிரி ழந்துள்ளனர்.

இந்த ஆண்டில் மின்னல் தாக்கி பதினைந்து பேர் உயி ரிழந்துள்ளனர்.

மக்கள் மழை நேரங்களில் திறந்த வெளிகளில் உலாவுதல், மின் சார உபகரணங்கள், உலோகப் பொருள்கள் போன்ற வற்றைப் பயன்படுத்துதல் என்பவற்றைத் தவிர்க்கு மாறு வளி மண்டலவியல் திணைக் களம் ஆலோசனை வழங்கியுள்ளது. (ச)

தேர்தல் சட்டத்தை மீறுவோர் கைதாவர்

கொழும்பு.செப்.13

வடக்கு,மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் தேர் தல் சட்டங்களை மீறுபவர் களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெ கப்பட்டுள்ளன என்று பொலி ஸார் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளரினால் வழங் கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் தேர்தல் கட்டளைச் சட்டத்தை மீறும் வகையில் செயற்படும் நபர்கள் கைது செய்யப்படவுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறுகின் றவர்களைக் கைது செய்வதற் காக விசேட பொலிஸ் குழு வொன்று ஈடுபடுத்தப்பட் டுள்ளது என்று பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

இதேவேளை சட்டவிரோத பதாகைகள், சுவரொட்டிகளை அகற்றுவதற்காக பொலிஸ் திணைக்களத்துக்கு நிதி ஒதுக் கப்பட்டுள்ளது என்று தேர் தல்கள் செயலகம் குறிப்பிட் டுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறிய 101 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர் பில் இதுவரை 123 முறைப் பாடுகள் பொலிஸாரிடம் பதி வாகியுள்ளன. (ச)

தேர்தல் நடவடிக்கையில் அரச ஊழியரை பயன்படுத்தும் முறைப்பாடுகள் அதிகரிப்பு

தேர்தல்கள் செயலகம் தகவல்

கொழும்பு.செப்.13

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரச ஊழியர்களை அரசியல் நடவடிக்கைகளுக்காக பல்வேறு சந்தர்ப்பங் களில் ஈடுபடுத்துவது தொடர்பில் பதி வாகும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பில் தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவுக்கு இதுவரையில் 78 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில் அதிகளவிலான முறைப்பாடுகள் குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

பணி நேரத்தில் அரச ஊழியர்களை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பாடசாலை அதிபர்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் கூட்டங்களை நடத்தியதாக முறைப்பாடுகள் கிடைத்துள் ளன என்றும் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட் டுள்ளது. (ச)

உயர்கல்வி பிரதி அமைச்சருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு,செப்.13

உயர்கல்வி பிரதி அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்கவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்களுக்கு புறம் பான வகையில் அவர் செயற் பட்டு வருவதாக மாத்தளை மாவட்ட ஆளும் கட்சி தலைமை வேட்பாளர் பந்துல யால்கம முறைப்பாடு செய்துள் ளார்.

இந்த முறைப்பாடு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரியவிடம் செய்யப்பட்டுள் ளது. நீதியான தேர்தலுக்கு இடையூறு ஏற்படும் வகையில் பிரதி அமைச்சர் செயற்பட்டு வருகிறார், என அந்த முறைப்பாட் டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

இன்னிசை நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.13

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இன்னிசை நிகழ்வு பக்க வாத்தியங்கள் சகிதம் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ச.சௌந்தரி ப.சுபோசினி, அ.சோபிகா ஆகியோர் பாடல்களை வழங்குவர். (ந-8)

வேட்டைத் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.13

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் வேட்டைத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து வழமை போன்று மாலையில் புதிய கைலாச வாகனத்தில் சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஒ-86)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியை

திருமதி லலிதா தவநேசன் அவர்களின் அன்புத் தந்தை

சரவணமுத்து இராமலிங்கம்

அவர்களது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம், யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

(31698) (4.6.3)

கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயப் பரிபாலன சபைப் பொருளாளரும், முன்னாள் உப தலைவரும், முன்னாள் செயலாளரும், சிறந்த சமூக சேவையாளருமான

சண்முகம் ஏகாம்பரநாதன் (JP)

அவர்கள் 11.09.2013 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்

உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம்.

உரும்பிராய்.

(ஒ/12410)(6.3.11)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
021 5671111
advt@uthayan.com

7ஆம் மாத நினைவஞ்சலியும் 31ஆவது பிறந்தநாளும்

தோற்றம் 13.09.1982 மறைவு 12.02.2013

ஏழு மாதங்களாகிய போதிலும்
பறந்து சென்ற உன் அன்பினை பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே– நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்கின்றோம்
நீர் இல்லாத எம் கோயில் கொண்ட வீடும் வெறிச்சோடியது
நிம்மதி ஏதுமின்றி தவியாய் தவிக்கின்றோம்
பரராஜசேகரன் பாதங்களினை விசாலமாகப் பற்றிவிட்ட நீர்
காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பக் குலவிளக்கே...

அமரர்
பரராசசிங்கம் பிரசன்னா

அப்பா -பரராசசிங்கம்
அண்ணா - பிரதீஸன்,
அண்ணி- ஷகானா
பெறாமகன்- ஷாகீசன்
தம்பி - லதன்

பிரசன்னா பந்தல் சேவை
கோண்டாவில் மேற்கு,கோண்டாவில்.

(ஒ/12409)(5.6.3)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23.02.1945

ஆண்டவன் அடியில்
18.08.2010

திதி :
13.09.2013

அமரர்
வேலுப்பிள்ளை விவேகானந்தன்

தந்தையாய் – நல் ஆசானாய்
எங்களை வாழவைத்த தெய்வமாய்
எம்முள்ளே தோன்றாப்பொருளாய்
நல்லூக்கம் தரும் பரம்பொருளாய் எல்லாமுமாகி
எம்மை வழிநடத்தி நிற்கும் நீங்கள்
எங்களைவிட்டுப் பிரிந்ததாய்
நாம் இன்னும் உணரவில்லை
ஏனெனில் நீங்கள் எமக்குள்ளே... எப்போதும்...

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

அருந்தியார் வளவு,
அல்வாய் மேற்கு,
திக்கம்.

உங்கள் நினைவுகளுடன்
சகி, நிரஞ்சா, முகுந்தன் மற்றும்
உறவினர்கள்.

(29523)(3.6.7)

மரண அறிவித்தல்

சரவணமுத்து இராமலிங்கம்

முதலாம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராமலிங்கம் 11.09.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரவணமுத்து- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், ஞானசேகரம், லலிதா (ஆசிரியை, யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) புஸ்பலதா (ஆசிரியை, கிளி/அக்கராயன் ம.வி) இராம்குமார், ஹரிதாஸ், விஜயகுமாரி, இளங்கீரன், சசிகரன், (மிருக வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவநேசன், உதயமூர்த்தி (ஆசிரியர்) கோகிலா, தனுசன் (தபாலதிபர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தினேஸ்காந், கபில்ராஜ், டிலானி, பபிசன், பபிசனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 92/A , பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

92/A, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி

செல்வநாயகி இரத்தினம்

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகி இரத்தினம் நேற்று முன் தினம் (11.09.2013) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தி னத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான வயிரவப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் இளைய மகளும், நகுலேஸ்வரியின் அன்புச் சகோதரியும், அன்னபூரணம், விமலாதேவி, அற்புதநாதன், பராசக்தி, கேதாரகௌரி, பாலகிருஷ்ணன், ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (15.09.2013) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள் - 077 844 6483
கல்கிசை

(31694)(4.6.3)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
14
-
11
-
1932

மறைவு
14
-
08
-
2013

எங்கள் குடும்பத்தின் இதயமாகவும்
இராணுவத்தில் Staff Sergeant ஆகவும்
நிறுவனத்தில் தலைவனாகவும்
சமுதாயத்தில் சிறந்த சேவையாளனாகவும்
இல்லறத்தில் சிறந்த துணைவனாகவும்
பண்பில் சிறந்த பண்பாளனாகவும்
வழிநடத்தலில் சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்ந்தவரே!
இன்று உங்கள் உடல்தான் இங்கு இல்லை, ஆனால்....
உங்கள் நோக்கங்கள், சிந்தனைகள், செயல்வடிவங்கள்
வெற்றி பெற்று உங்கள் பெயர் சொல்லும்

கடந்த (14.08.2013) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வத்தின் நினைவாக இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணியளவில் எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறவிருப்பதால் உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

(31704)(5.6.3)

651/12, நாவலர் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அமரர் **கந்தையா அம்பலவாணர்**
Rtd.Staff Sergeant -Srilankan Army Ordnance Corp.
Chairman - Mercantile Security Services(Pvt)Ltd.

காணி விற்பனைக்கு

நல்லூர், பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கையில் 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இக்காணி நல்ல சூழலில் அமைந்துள்ளதால் வாங்க விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: றூபன் கோபிநாத்
31, கொண்டலடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
021 222 1551
(31693) (4.6.3)

வீடு வாடகைக்கு

கந்தர் மடம் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:077 656 2661
(31662) (4.6.3)

மணமகன் தேவை

லண்டன் பிரஜாவுரிமையுடைய 32 வயது MBA படித்த அழகிய பெண்ணுக்கு அவரது உறவினர்கள் படித்த நல்லொழுக்கமுள்ள மணமகனைத் தேடுகின்ற னர்.தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
vaikugathas@gmail.com.

கார் விற்பனைக்கு

JC. 9xxx தொடர் இலக்கமுடைய KIA Car விற்பனைக்கு உண்டு.
(31703) (46.6.3) தொடர்பு: 077 583 4770

சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள்

உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், A/L முடித்தவர்களுக்கும், மிக இலகுமுறையில், குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பயிற்சியினை முடித்துக் கொள்ள...

COMPUTER SALES, SERVICE & REPAIR

சகல விதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor, LED TV, Printer, UPS என்பன உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் தருகின்றோம்.

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

NORTH LEAD No : 328, Staly Road, Jaffna
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460

காணி விற்பனைக்கு

மீசாலை புகையிரத நிலையத்திற்கும் புத்தூர்ச்சந்திக்கும் இடையில் A9 வீதிக்கு அண்மையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கி/11997) (4.6.3)
தொடர்பு:077 828 2208

J.C.B விற்பனைக்கு

லண்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2004 J.C.B Backo மலிவு விற்பனைக்கு உண்டு. 2012 J.C.B Backo லண்டனில் இருந்து இறக்குமதி புது மிசின் மலிவு விற்பனைக்கு உண்டு. மற்றும் லீசிங், பினான்சும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு:077 652 5400
(26522) (4.6.3)

புங்குடுதீவு சர்வோதயத்தில் சகோதர சங்கமம்

இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை 3 தினங்கள் புங்குடுதீவு சர்வோதயத்தில் சகோதர சங்கமம் நிகழ்வு இடம்பெறவுள்ளது. நாட்டில் சமூக இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் வட மாகாணக் கல்வித் திணைக்களம், தீவக வலயம் என்பன இணைந்து நடத் தும் இந்த நிகழ்வில் தீவக வலயம், வவுனியா தெற்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர் என்று தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரீ.ஜோண்குயின்ரஸ் தெரிவித்தார். (ஒ-7)

வேலையாள்கள் தேவை

* கணினி அறிவுடைய - பெண்
* சிட்டை எழுதுபவர் - பெண்
* பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு ஆண் உதவியாளர்

தொடர்பு:
சோதி களஞ்சியம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
(பலாலி வீதி சந்தி அருகில் இருபாலை வீதி)
T.P : 077 789 0398 (31706)(7.6.3)

கவிதை தொகுப்பு நூல் இன்று வெளியீடு

யாழ். திருமறைக் கலா மன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் கவிதைத் தொகுப்பு வெளியீட்டுவிழா இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. வேம் படி மகளிர் உயர்தரபாட சாலை மாணவியான சுமித்திரேயி சிவபால னின் புல் அரும்புகள் (கிறாஸ் புளொஸ்ம்ஸ்) என்ற கவிதைத் தொகுப்பே இன்று வெளி யிடப்படுகிறது. (க)

ஒத்திவைப்பு

பருத்தித்துறை, வல் வெட்டித்துறை நகரப் பகுதியில் படையினர் வசமுள்ள வீடுகள், காணிகள் கையளிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகள், காணி கள் பருத்தித்துறையில் வைத்து இவ்வாரம் கையளிக்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட் டிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் கையளிக் கும் நிகழ்வு ஒத்தி வைக் கப்பட்டுள்ளது. (வ-8)

அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

கேதாரகௌரி விரதம்

எதிர்வரும் 14.10.2013 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாக விருக்கும் கேதாரகௌரி விரதம் தொடர்ந்து 21 நாள் அனுஷ்டிக் கப்பட்டு 03.11.2013 ஞாயிற்றுக் கிழமையுடன் நிறைவடையவுள்ளது. விரதகாரர்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்வதற்கு வசதியாக 19.09.2013 வியாழக்கிழமை முதல் பதிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ள தென்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

பலவேலைகாரர் தேவை

விண்ணப்பதாரர், ஆசாரசீலராகவும், கோயில் வேலைகளில் முன் அனுபவம் உள்ளவராகவும் கிட்டிய தூரத்தில் வதிபவராகவும் இருக்கும் பட்சத்தில் மிகவும் வரவேற்கப்படும். பெயர், விலாசமுடன், வயது, அனுபவம் யாவற்றையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

செயலாளர்
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5770
(31699) (4.6.3)

நீங்கள் அவதானிப்புடன் இருக்கின்றீர்களா?

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லது எந்தவொரு நபரும்,

- அரசின் வாகனங்கள்
- அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள்
- அரச கட்டடம் மற்றும் அரசின் பணம்
- அரச ஊடகங்களின் ஒளி, ஒலிபரப்பு நேரம்
- அரசின் பணத்தால் வெளியிடப்படும் விளம்பரங்கள்
- அரசின் அச்சு வசதிகள்
- அரச வங்கிகள் வழங்கும் நிவாரணங்கள் - விசேட கடன் மற்றும் வேறு வசதிகள்

போன்ற எந்தவொரு பொதுச் சொத்தினையும், தவறான வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்

பொது சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வதை எதிர்ப்போம்

அரச உத்தியோகத்தரான நீங்கள் தேர்தல் மோசடிகளை எதிர்த்ததனால் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தால் அல்லது தேர்தல் மோசடிகளினால் உங்கள் உரிமைகள் மீறப்பட்டிருந்தால் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் சட்ட உதவிகளை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

நீங்கள் அறிந்தவற்றை உறுதி செய்யக்கூடிய தகவல்களுடன் எமக்கு அறியத்தாருங்கள்

பொது சொத்துக்கள் பாதுகாப்பு வேலைத்திட்டம்
183/5, ஹைலெவல் வீதி,கொழும்பு 06
தொலைபேசி: 0772180334 / 0772950433
மின்னஞ்சல்: help@tisrilanka.org

நேர்மையின் புகலிடம்
ஊழலைத் தடுப்பதற்கான சட்ட ஆலோசனை சேவை
0112513313

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

அகவை 6 இல் காலடி பதிக்கும் உங்கள்

RK& Sons Electronics
ஆர்கே அன் சன்ஸ் எலக்ரோனிக்ஸ்
120, பிரதான வீதி நெல்லியடி
021 226 2981

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் உற்றார்,உறவினர்கள், அனைவருக்கும் எமது உள்ளம்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மேலும் உங்கள் ஆசியுடன் எமது சேவை தொடரும்.
(31697)(4.6)

புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு

காந்தன் பாமில், உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, 2-4 கிலோ நிறைகளிலுள்ள கோழிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (31681)(4.6.3)
விலாசம்: 27/7, பிப்பிலிவீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
தொடர்பு: 077 219 5483, 075 222 0405.

அருணாகிரிநாதர் விழா வவுனியாவில் ஞாயிறன்று

வவுனியா, செப்.13

வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் அருணகிரிநாதர் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் நடைபெறவுள்ளது. தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அருணகிரிநாதசுவாமிகளின் திருவுருவப்படமும் அவர் ஆக்கிய நூல்களும் ஆதிவிநாயக ராலயத்திலிருந்து விழாமண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பெற்று பூசை வழிபாடுகள் இடம்பெறும். விழாவின் தொடக்கவுரையை வவுனியா இந்து மாமன்றச் செயலாளர் சிவநெறிப் புரவலர் சி.ஏ. இராமசாமி ஆற்றுவார். சிறப்பு நிகழ்ச்சியாக அருணகிரியாரின் பாடல்களின் ஆழம், அழகு காண்போம் என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் கருத் தரங்கத்தில் திருப்புகழ் பற்றி இந்துநாகரி கத்துறை ஆசிரியர் சிவகஜனும் கந்தரனு பூதி பற்றி தமிழ்மணி கே.கே.அருந்தவராஜாவும் கந்தரலங்காரம் பற்றி மன்னார் சைவக்கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகுமாரக் குருக்களும் கந்தரந்தாதி பற்றி இந்து நாகரிக பாடசேவைக் கால ஆசிரிய ஆலோசகர் திருமதி வி.முரு கேசம்பிள்ளையும் திருவகுப்பு பற்றி சிவ தட்சணாமூர்த்தியும் கருத்துரை வழங்குவார்கள். (ஒ)

நோயாளியைக் காப்பாற்ற சாரதியாக மாறினார் வைத்தியர்

கொழும்பு,செப்.13

சாரதி இருக்காத நிலையில், கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக வைத்தியர் ஒருவர் அம்புலன்ஸ் வாகனத்தைச் செலுத்த நேரிட்ட சம்பவம் அம்பலாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

அம்பலாங்கொடை வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி பிரசன்ன விஜேசிங்க என்பவரே நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இந்த மனிதநேய செயற்பாட்டை மேற்கொண்டார்.

இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவரை அவசர சிகிச்சைக்காக உடனடியாக பலப்பிட்டிய வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு புதன்கிழமை மாலை வைத்தியர்கள் தீர்மானித்தனர். இதன் போது வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வாகனம் இருந்த போதிலும் அதன் சாரதி அங்கிருக்காத காரணத்தினால் பிரச்சினை ஏற்பட்டது. குறிப்பிட்ட இருதய நோயாளியைத் தொடர்ந்தும் அதே வைத்தியசாலையில் வைத்திருப்பது அவரது உயிருக்கு அச்சுறுத்தலாகும் என்பதை உணர்ந்த வைத்திய அதிகாரி பிரசன்ன விஜேசிங்க, அந்த நோயளியை ஏற்றிக் கொண்டு அம்புலன்ஸ் வாகனத்தை பலப்பிட்டி வைத்தியசாலைக்கு செலுத்தியுள்ளார். வைத்தியரின் இந்த மனிதநேய செயற்பாட்டினால் நோயாளியின் உயிரைக் காப்பாற்ற முடிந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

23 ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
இராஜேஸ்வரி
கதிரவேலு

மலர்வு
07.02.1947

உதிர்வு
29.08.1990

(திதி: நவமி
(13.09.2013)

அன்பும் பண்பும் கொண்ட அன்னையே!
இன்ப வாழ்வில் எம்முடன் இணைந்த தெய்வமே!
இருபத்து மூன்று ஆண்டுகள் கழிந்தாலும்
இதயத்தில் உம் நினைவு மாறவே மாறாது!
உப்பிட்டவரை உள்ளளவும் நினைத்தல் நன்று!

103/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(31638) (4.3.6)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04.06.1927

மறைவு
25.08.2012

அமரர் வே. சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

(திதி: ஆவணி பூர்வபக்க நவமி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகி விட்ட

எங்கள் குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் சமயக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து நமக்கு ஆறுதலளிக்கும் வண்ணம் உறவினர்கள், அயலவர்கள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
'சுபநிதி'
கரவெட்டி மத்தி.கரவெட்டி.

(29515)
(6.3.11)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
09.09.1933

உதிர்வு
25.08.2012

திதி : 13.09.2013

அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அமைதியின் உறைவிடமாய்
அவனியில் வாழ்ந்து - எமக்குக்
கல்வி அறிவூட்டி நல்வழிகாட்டி
இன்பமாய் நாம் வாழ
வழிஅமைத்த எமதருமை அப்பாவே!
எங்கு சென்றீர்- ஆண்டொன்று
ஓடி மறைந்தாலும் - உங்கள்
நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காய்
தட்டாங்குளத்தானை வேண்டி நிற்கின்றோம்.

அமரர் வேலுப்பிள்ளை
சுப்பிரமணியம்
(முன்னாள் V.S.V போக்குவரத்து உரிமையாளர்)

(31678) (7.6.3)

எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தட்டான்குள வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

வைத்திலிங்கம் தடாதகை

சுருவிலைப் பிறப்பிடமாகவும், ஆறு கால் மடம், புது வீதியை வசிப்பிடமாக வும் கொண்ட வைத்திலிங்கம் தடாதகை 09.09.2013 திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசுப்பிள்ளை - தெய்வானை தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான வல்லிபுரம் -பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், வைத்தி லிங்கம் அவர்களின் பாசமிகு மனைவி யும், தவயோகராஜா, சந்திரநாயகி, சர்வானந்த ராஜா, வரதராஜா, காலஞ் சென்ற கோமளா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, பொன்னுத்துரை, சுப்பிரமணியம், விஸ் வலிங்கம், கெங்கா லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான சித்திரப்பிள்ளை, கயிலாயர், பசுவதிப் பிள்ளை, பூமணிப் பிள்ளை, அருளம்பலம் ஆகியோரின் அன்பு மைத் துனியும், உமாதேவி, கதிர்சுந்தரலிங்கம், பவளராணி, உஷாராணி, காலஞ்சென்ற குமரகுருநாதன் ஆகியோரின் மாமியும், விஜி, றஜி, கலா, உகந்தன், றாகினி, ஐங்கரன், ஹரிகரன், சஞ்சீவன், சஞ்சீவினி, சேதுராமன், கோகில நாதன், உமாசுதன், அனுசியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தனுசா, சகானா, சபரீசன், சபரீனா, மோனிக்கா, ஜோதிகா, துளசிகா, ஐஸ்வரியா, ஸ்ரீராம், ஆர்த்தி, சிவாஜினி, ஹரிராம், சோபிகா, வர்ணிகா, தமிழினி, டீனுஜா, மீனுஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்-மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
சர்வானந்தராஜா (மகன்)

(31692) (45.6.3)

சண்முகம் ஏகாம்பரநாதன் (J.P)

(வலிகாமம் கிழக்கு பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் ஏகாம்பரநாதன் 11.09.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் -கண்மணி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்- அன்னம்மா தம்பதியரின் மருமகனும், அற்புதமலரின் அன்புக் கணவரும், கீதாம்பிகையின் (லண்டன்) அன்புத்தந்தையும், மனோரமணனின் (லண்டன்) மாமனாரும், கமலாம்பிகை (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் (நிறைவேற்றுப் பொறியியலாளர், மூதூர்) மற்றும் பத்மநாதன்(பாலா-கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குகநாக ராஜாவின் (லண்டன்) மைத்துனரும், தனிசா (லண்டன்), லவின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ந.ப 12.00 மணியளவில் எருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 321 9734

(31695)(3.6.11)

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02.03.1973

ஆண்டவன் அடியில் 24.08.2004

அமரர்

சுப்பையா சுபேந்திரன்

(செல்வா)

திதி : நவமி வளர்பிறை

அன்புச் செல்வமே செல்வா காலமெல்லாம் எம்மோடு
கலந்திருப்பாய் என்றிருந்தோம் இடைநடுவே தவிக்கவிட்டு
எங்குதான் சென்றாயோ செல்வா!!

உன் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

'மிஷாந்த மஹால்'
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

(31702)(5.6.3)

குடும்பத்தினர்.

நன்றி நவில்தல்

எமது அன்புத் தாயார்
திருமதி
புவனராணி சண்முகதாஸ்
(ஓய்வுபெற்ற, உப தபால் அதிபர்-அத்தியடி, யாழ்ப்பாணம்)

அவர்களின் மரணச் செய்தி (04.09.2013) அறிந்து தொலைபேசி, மின்னஞ்சல், தொலைத் தந்தி, குறுஞ்செய்தி மற்றும் நேரடியாக சமூகமளித்து எமது துயரத்தில் பகிர்ந்து கொண்ட, உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், ஊழியர்கள் (Sri Lanka Telecom PLC, Library, University of Jaffna) மற்றும் ஏனையோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகன் - பிரியதர்சன், நாகேந்திரன் (செல்வன்)
021 222 2827,
(31714)(10,16) 021 222 2987

மரண அறிவித்தல்

கபிரியேல் வெலிச்சோர் (ஜேம்ஸ்)

ஓய்வுபெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பாதுகாப்பு அதிகாரி

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் 7(3), மூளாய் வீதி, சுண்டுக்குளியையும், கனடாவையும் இறுதியாக கல்கிசையையும் வசிப்பிடமாகக் கொண்ட திரு. கபிரியேல் வெலிச்சோர் (ஜேம்ஸ்) ஓய்வு பெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பாதுகாப்பு அதிகாரி கொழும்பில் 10.09.2013 அன்று காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற மரியம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற கயித்தான் கபிரியேல், சூசானம் தம்பதியரின் அன்பு மகனும் ஜெயமலர் (கனடா), மேரி ராஜேஸ்வரி (இலங்கை), ஜெயவதி (இலங்கை), ஜோர்ச் செல்வநாயகம் (கனடா), பேளி ஜோயிஸ் (ஜேர்மனி), அன்ரன் செல்வகுமார் (ஒல்லாந்து), றஞ்சினிதேவி எமலின் (பிரான்ஸ்), ஸ்ரான்லி ஜெயக்குமார் (கனடா), றெக்ஸ் அமரக்குமார் (கனடா), றொபின்சன் சந்திரகுமார் (ஜேர்மனி), ஜேன் பெலிசிற்றா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு தந்தையும், பாக்கியநாதர் (கனடா), நடராஜா, செல்வரட்ணம் (ஜேர்மனி), அல்வின் (பிரான்ஸ்), சந்திரலீலா (கனடா), சுலோசனா (ஒல்லாந்து), புளோரி (கனடா), ஷர்மிளா (கனடா), லிடியா (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், செபமாலை (இருதயம்), மாகிரட், காலஞ்சென்றவர்களான சகாயம், அனந்தாசி, அபிநாசி, ஞானம்மா, சந்தியாப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் அன்பு சகோதரரும், றீற்றம்மா காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை ஜோசேப்பு ஆகியோரின் மைத்துனரும் சியாமளா, அனுஷியா, பற்றீசியா, கருணா, ஜெறன்ஸ் ராஜினி, டிலோன் ரத்னா, மேவின்ராஜ், கத்தின், மிஷேல், நிஷாந்தி, சிபோனி, சிப்போறா, மகேர்ஷ், நிலோபர், சந்திரின், வெனிபர், பிறன்டன், பிறட்லி, றெஷான், ஹஷான், சாரா, பெஞ்சமின், லறிஷா, ஆர்மிளா, ஒரேலியா, ஆர்னோ, ஆகியோரின் அன்பு பாட்டனாரும், அன்ரு, அலெக்ஸ், அஞ்சலோ, எற்றியன், கெனத், மெலிசா, கெவின், லிவிங்ஸ்ரன், ஜெனிபர், எட்வின், ஷயிலி, கெரன், டேவிட், லுக்காஸ், ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலை (Mahinda Funeral Parlour) வைக்கப்பட்டு 16ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு இறுதிக் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கல்கிசை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்களுக்கு
தொலைபேசி இல: +94112715384, +94777913873
No. 25/2, Wijaya Road, Mount Lavinia.

கண்ணீர் அஞ்சலி

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

சண்முகம் ஏகாம்பரநாதன் (J.P)

(உரும்பிராய் வடக்கு)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய வரும் இக்கல்லூரியின் பழைய மாணவனுமாகிய ச.ஏகாம்பரநாதன் (J.P) 11.09.2013 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாம் எல்லோரும் ஆழ்ந்த துயர் அடைகிறோம். அன்னார் எமது கல்லூரியின் வளர்ச்சி யில் ஆற்றிய பணியும், பங்களிப்பும் அளப்பரியது. அது மட்டுமல்ல கடந்த ஆண்டில் இடம்பெற்ற நூற்றாண்டு விழாவில் அன்னா ரின் பங்களிப்பு என்றென்றும் மறக்க முடியாதவை. அவரது மறைவு இக்கல்லூரிச் சமூகத் திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

இக்கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் சார்பிலும் கனடா பழைய மாண வர் சங்கத்தின் சார்பிலும் உரும்பிராய் இந்துக் கல்லூரிச் சமூகம் அவரது குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், கண்ணீர்ப் பூக்களையும் சமர்ப்பிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல உரும்பிராய் கற்பக விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து இறைஞ்சி நிற்கின்றோம்.

உரும்பிராயி இந்துக் கல்லூரிச் சமூகம்,
கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்.

(31707)(7.6.3)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கைலாய வாகனத் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப்.13

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் கைலாய வாகனத்திருவிழா இன்று காலை இடம்பெறவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட கைலாய வாகனத்தில் அம்பாள் வீதியுலா வருகை தருவாள். பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4பப)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. கணினிப் பிரயோகவியலாளர் பயிற்சி (4 மாதம்)
2. தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பயிற்சி (6 மாதம்)

பதிவு செய்யும் திகதி-14.09.2013, 15.09.2013 (8.30- 1.00)

ஆரம்பம்-16.09.2013-மு.ப 8.30

விசேட சலுகைகள்

* பொது அலுவலகங்களில் 6 மாத கால செயன்முறைப் பயிற்சி ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு நேரில் அல்லது தொலைபேசியில்
021 226 4211/077 864 8213

குறிப்பு- கழகம் மேற்படி பயிற்சி வகுப்புக்களை நடத்த 3 ஆம் நிலை ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி. (29524)(3.6.11) நிர்வாகம்.

Annai Nagaa Food City
பதவி வெற்றிடம்

* பொதி செய்தல்
* பலகார வகை செய்தல் } (20-40 வயது)
* விற்பனை உதவியாளர் - (ஒரு மணி முதல் இரவு 10.00மணிவரை) (18-30வயது)

நேரடியாக சமுகமளிக்கலாம்.
நேர்: 9.00-12.00p.m.
இடம்: 175,K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு:
077 477 3485,
021 739 0191

(R/12410)(4.6.3)

சிங்களம்

சிங்களம் பேச, எழுத, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
சனி/ஞாயிறு மற்றும் வார நாள்களில்
உங்கள் வசதிக்கேற்ப

ஸ்ரீ மாஸ்டர்

11, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
72, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (மிலேனியம் அருகில்)

SPOKEN ENGLISH
வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.
ஆசிரியர்: மகேஸ்வரன்

பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்
விவரங்களுக்கு:
077 703 3729

(31715)(10.16)

மரண அறிவித்தல்

கந்தசாமி மயூரன் (அப்பன்)

கல்மடுநகர் இராமநாதபுரம், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மயூரன் நேற்றுமுன் தினம் (11.09.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி-ரஞ்சினி தேவி தம்பதியரின் அன்பு மகனும், மீரா, நவநீதன், கல்பனா, கஜந்தன் (பதுளை பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றஜீவன், செந்தில்வேல் ஆகியோரின் மைத்துனரும், சரணிகா, பிருந்தா, றஸ்வினி, கீர்த்திகா, அக்ஷயா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் இராமநாதபுரம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 4, கல்மடு நகர்,
இராமநாதபுரம். (37528)(10,16,14)

தகவல்:
குடும்பத்தினர்.

செல்வி நிகிலா பஞ்சலிங்கம்

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நிகிலா பஞ்சலிங்கம் நேற்று (12.09.2013) வியாழக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் பஞ்சலிங்கம், காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தவறோஜினி மற்றும் தவநேசன் (இத்தாலி), வரலட்சுமி (கனடா), வரதன் (ஜேர்மனி), வக்சலா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பஞ்சலிங்கம் (தந்தை)
ஞானவைரவர் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(31716)(10,16)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

பாராட்டி வாழ்த்துகின்றோம்



வயித்திலிங்கம் மருதலிங்கம்

அவர்கள் இன்று (13.09.2013) வெள்ளிக் கிழமை மல்லாகம் நீதிமன்றில் யாழ்ப் பாண நீதிமன்ற வலயத்துக்கான ஓர் சமாதான நீதவானாக சத்திய பிரமாணம் எடுக்கவுள்ளார்.

ஒய்வுபெற்ற தபாலதிபரும், அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் கௌரவ செயலாளரும், அளவெட்டி கும்பழா வளைப் பிள்ளையார் கோவில் முன் னாள் செயலகக் பொறுப்பாளரும், தொண்டர் சபையினரின் காப்பாளரும் ஆவார். இவர் கும்பழாவளையான் அருள் பெற்று நீடுழி காலம் சமூக, சமயப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

(31713)(10.16)

கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்.

தொண்டர் சபையினர் தர்மகர்த்தாக்கள் சபையினர்

மக்கள் வங்கி
திறப்பு விழா

பிரதான வீதிக் கிளை

மக்களுக்காக மகத்தான வங்கிச் சேவையினை
வழங்கிவரும் மக்கள் வங்கி
புதிய இடத்தில், புதிய கட்டடத்தில், புதுப் பொலிவுடன்
நவீனமயத்துடனும், ATM வசதியுடனும்,
இல. 384, பிரதான வீதி,
வஸ்தியன் சந்தி,
யாழ்ப்பாணம்
என்ற புதிய முகவரியில்
2013.09.14 சனிக்கிழமை முதல் இயங்கவுள்ளது.

கைதடி
சேவை நிலையம்

எமது கைதடி பிரதேச மக்களுக்காக
நவீனமயத்துடனும், நாடளாவிய வங்கி
வலையமைப்புடன் இணைக்கப்பட்ட நிலையிலும்
ATM மற்றும், வெஸ்டன் யூனியன் வசதியுடனும்
எமது சேவையை
கண்டி வீதி, கைதடி சந்தியில்
2013.09.14ம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளோம்.

இத் திறப்பு விழா
மக்கள் வங்கியின் தலைவர்
திரு. காமினி செதர செனரத் அவர்களால்
நாளை 2013.09.14 சனிக்கிழமை
மங்களகரமாகத் திறந்துவைக்கப்படும்.

இந் நன்நாளில் உங்களையும்
எம்முடன் இணைந்திடுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் வங்கி
யாழ் பிராந்தியத்தின்
சேமிப்பு தினம்
2013.09.14

மக்கள் வங்கியில் சேமித்திடுங்கள்

"வீட்டுக்கு வீடு"

சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டம்

"இன்றைய சேமிப்பு நாளைய நிம்மதி"
"உங்கள் காலடிக்கு நாங்களே வருகின்றோம்"

எங்களுடன் கைகோர்த்திடுங்கள்
உங்களுடன் என்றும் நாம் இருப்போம்!

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

தேவை

■ கணக்காளர் ■ சாரதி ■ விற்பனையாளர்

யாழ். நகரை அண்டியவர்களுக்கும். முன் அனுபவம் உள்ளவர் களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
சுயவிவரக்கோவை. புகைப்படம். சாரதி அனுமதிப்பத்திரம். கிராம உத்தியோகத்தர் அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றுடன் இன்று (13.09.2013) வெள்ளிக்கிழமை நேரில் வரவும்

ESWARN TRADERS
69/115, Kasthuriyar road, Jaffna.
021 222 2813 / 4317

(கீ-1242)

இதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

யாழ்ப்பாணத்தில் 09.11.2013 இல் நடைபெறும்
பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்

IELTS
BRITISH COUNCIL

We are "IELTS Registration Center for British Council"

Speciality of British College of English

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

* நீங்கள் எந்தநேரம் வேண்டுமாலும் எமது கல்லூரிக்கு வந்து Listening Practice செய்ய முடியும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி Radio வும் Head Phone ம் தரப்படும்.
* எந்தநேரமும் எமது Library யையும் பயன்படுத்த முடியும்
* IELTS ஆசியரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களினால் Saturday & Sunday விடே Speaking Practice தரப்படும்

வகுப்புக்கள் - 14.09.2013 ஆரம்பம்

Course Schedule
Monday - Tues - Wed - Thursday - Friday
காலை 7.00 - 8.30 வரை 7.11.2013 வரை
தொடர்ச்சியாக இந்த வகுப்புகள் நடைபெறும்
Our Target is Band 7 and above

For Registration and Further details Contact
BRITISH COLLEGE OF ENGLISH
192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)
Tel: 021 222 0384 / 0778803887

நெஞ்சை விட்டகலா 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி...

மலராய்
07.01.1988

விதையாய்
28.08.2009

திதி : பூர்வபக்க நவமி
(13.09.2013)

அமரர் கருணாதேவன் றஜீபன் (றசி)

(வணிக முதற்தேர்வு முதலாம் வருட மாணவன்)

வாழ்க்கை எனும் அகராதியை
ஒரு நொடியில் எமக்கு
புகட்டி சென்றாயே...
பருவங்கள் மாறி செல்கின்றன
அவை கூட இடைவெளி விட்டே
நகருகின்றது.
ஆனால்.... நாம் ஒன்றாக வாழ்ந்த பருவங்கள்
என்றுமே செதுக்கிய சிற்பங்களாய்
இடைவிடாது தொடர்கின்றது...
நம் பந்தம்...

நம் இவரிலும் பதினாறு செல்வங்களையும்
பெற்று
இன்று... நம் வாழ்க்கை தான் இருட்டியது
வானம் இருட்ட வில்லை
மாறாக...
முகில்கள் தான் இருட்டியது.
அதுவும் ஒரு நாள் மழையாக
பொழியும்...
அன்று விலகும் இருள். ஆம்
எம் வாழ்வில் என்றுமே.....

அழகிய நந்தவனத்தில்
புத்த பூங்கொத்தில்
அழகாக ஆடி மகிழ்ந்த போது...
நீ மட்டும்
இடையில் வாடியது
ஏனோ...?

இருப்பினும்

நீ எமக்காக விட்டுச் சென்ற
உன் அடக்கமான பேச்சினும்
அமைதியான சிரிப்பினும்
குறும்பினும்

உன்னை நித்தம் காண்கிறோம்.
மீண்டும் எம் குடும்ப நந்தவனத்தில்
புது நறுமணம் சேர்ப்பாய்
என்ற அசையாத நம்பிக்கையில்...

சுஜீ ஸ்ரோர்ஸ்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

என்றும்
உன் குடும்பத்தினர்.

(31712)(10.16)

விபத்தில் இளைஞர் சாவு

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக் குள்ளானதில் அதில் பயணம் செய்த இளைஞர் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாங்குளம் இந்திரபுரம் பகுதியில் இடம் பெற்ற இவ்விபத்தில் வில்வ ராயன் கட்டு, தர்மபுரம் என்ற இடத்தைச் சேர்ந்த க.மயூரன் (வயது 29) என்ற இளை ஞனே உயிரிழந்தவராவார்.

சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக் கப்பட்டு மரண விசாரணை களின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-400)

மன்னாரில் ஜனாதிபதி

வடக்கு மாகாண சபைத் தேர் தலில் போட்டியிடும் ஆளுங் கட்சி வேட்பாளர்களை அறி முகம் செய்யும் நிகழ்வும் தேர் தல் பரப்புரையும் நேற்று முன் தினம் மன்னார் பொது விளை யாட்டரங்கில் இடம்பெற்றது.

வர்த்தகவாணிபத்துறை அமைச் சர் ரிஷாத் பதியுதீன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ் வில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ கலந்துகொண்டு உரை யாற்றினார்.

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர் தல் பரப்புரைக் கூட்டத்தில் தெரி வித்த கருத்துக்களையே மன் னாரிலும் ஜனாதிபதி தெரிவித் தார். (த-400)

தமிழரின் இருப்பை மாற்றும் முயற்சிக்கு பிரிட்டன் நாடாளுமன்றக் குழு கண்டனம்

லண்டன், செப். 13

இலங்கை நாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசி யல் நோக்கத்துடன் மக்கள் எண்ணிக்கையின் இருப்பை மாற்றி அமைக்கும் விதத்தில் கட்டமைப்பு மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டு வருவது குறித்து பிரிட்டனில் செயற்படும் தமிழர் களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழு ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ள துடன் குறித்த பிரதேசங்களில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் பால்வினை பிரச்சினைகள், பெண்களுக்கும் சிறுமிகளுக் கும்எதிராகுறிப்பாகவன்கலைத் தலைவர்களாகக்கொண்ட குடும் பங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்தும் கவலை தெரிவித்துள்ளது.

அம்மையார் வெளியிட்டிருந்த ஆரம்பக் குறிப்பில், சண்டை முடிவுற்றுள்ள போதிலும் துன் பங்கள் குறையவில்லையென்ற கருத்தை சுட்டிக்காட்டியுள்ள குழுவினர், இதே குரலைத் தான் இலங்கையில் வடக்கு, கிழக்கில் பாதுகாப்புப் படைக ளின் கட்டுப்பாட்டுக்குள் இருந் துவரும் உறவினர்களிடமி ருந்து ஐக்கிய ராஜ்யத்திலுள்ள தமிழர்களும் கேட்டு வருகிறார் கள் என்று தெரிவித்துள்ளது.

சாதாரண நிலைமையைக் கொண்டுவருவதைத் தடுத்துக் கொண்டிருப்பதற்கான பல முக் கிய காரணிகள் தென்படுகின் றன. அவை விரைவாக தீர்க்கப் படாது போகுமாயின் எதிர்கால சீர்குலைவுக்கான விதைகளை விதைப்பதாக அமைந்துவிடும். தனிப்பட்டவர்களின் சுயாதீ னத்தை மற்றும் மனித உரிமை களை முடக்குவது, குற்றம் புரி பவர்களுக்குத் தண்டனையிலி ருந்து பாதுகாப்பளிப்பது மற் றும் சட்ட ஆட்சியின் தோல்வி போன்றவற்றுடன் தொடர்பு டையவையாகும் இவை. என் றவாறு நவிப்பிள்ளை தெரிவித் திருந்தார். இந்த வகையில் அம்மையார் கூற்றுப்படி கட்டு மானங்களை உருவாக்குவது மட்டும் இலங்கையில் காணப் படும்முரண்பாட்டுக்குநல்லிணக் கத்தை, கௌரவத்தை மற்றும் நிலையான அமைதியைக் கொண் டுவரமாட்டாது என்று கூறுகின் றது குழுவின் அறிக்கை.

போர்க் குற்றங்கள், மனித இனங்களுக்கு எதிரான குற் றங்கள், இனப்படுகொலைகள் ஆகியவற்றுக்கு சர்வதேச பொறிமுறையொன்றின் மூலம் நீதியும் பொறுப்புக் கூறலும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட் டன் தொடர்ந்தும் ஆதரிக்க வேண் டும். இவ்வாறு கோரியுள்ள குழுவினர் மேலும் தெரிவித் திருப்பதாவது:

இலங்கையில் நடைபெற விருக்கும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் பிரிட்ட ன் கலந்துகொள்ளும் விட யத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்வ தானது அமெரிக்க தலைமை யில் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளை அது பலவீனப்படுத்தி விடுவதுடன் இப்போதைய எதேச்சாதிகார இலங்கை அரசின் செயற்பாடு களை அங்கீகரிப்பதாகவும் அமைந்துவிடும். செப்ரெம்பர் மாதம்மனிதஉரிமைகள்ஆணை யாளர், மனித உரிமைகள் சபையில் தமது வாய்மூலமான அறிக்கையைச் சமர்ப்பிக்க விருக்கிறார். அந்த அறிக்கையை பிரிட்டிஷ் பிரதமர் கவனமாகப் பரிசீலித்து பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பான தீர்மானத்தை மறுபரிசீலனைசெய்யவேண்டும். இந்த நாடாளுமன்றக் குழுவின் தலைவர் லீ ஸ்கொட். ஆவார். உதவித் தலைவர்களாக சியோ பன் மெக்டொனாத், கிமோன ஹியூக்ஸ், வீரேந்திர சர்மா, செயலாளர் றொபேர்ட் ஹல் பொன் மற்றும் இணைப்பாளர் ஹாஸல்வீன்பேர்க். (ப)

நவிப்பிள்ளையின் அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்றது இந்தியா

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள் ளையின் இலங்கை தொடர்பி லான வாய்மூல அறிக்கை யைத் தாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக ஜெனிவா வில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 24வது கூட்டத் தொடரில் பங்கு கொண்டுள்ள இந்தியப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தீவுக்கான பய ணம் குறித்த தனது அவதா னிப்பைக் கூட்டத் தொடரில் பின்னர் சமர்ப்பிப்பதாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை முதல்நாள் அமர்வில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கூட்டத்தொடர் அமர்வில் உரை நிகழ்த்திய இந்தியப் பிரதிநிதி, இலங்கைக் கான ஐ.நா. ஆணையாளரின் பயணம் பூர்த்தியானதை தாங் கள் வரவேற்பதாகத் தெரிவித் தார்.ஐ.நா.மனிதஉரிமைஆணை யாளரின் அறிக்கையை இந் தியா எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் அங்கு கூறினார். (த)

மினி பஸ் சாரதியின் செயலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். நகரில் யுவதி ஒருவரு டன் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து சேஷ்டையில் ஈடுபட்ட யாழ்.- கொடிகாமம் தனியார் பஸ் சாரதியின் செய லைக் கண்டித்து சாவகச்சேரி நகர சபை, பிரதேச சபை கூட் டங்களில் நேற்றுமுன்தினம் கண்டனத் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இச் சபைகளின் மாதந்தக் கூட் டத்திலும் விசேட கூட்டத்திலும் இந்தக்கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பஸ் சாரதி யின் இந்தச் செயலை வன்மை யாகக் கண்டிப்பதுடன் இனி மேல் இவ்வாறான சம்பவங் கள் இடம்பெறாமல் தடுப்பதற் கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று சபைகளின் தவிசாளர்களும் உறுப்பினர்களும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர்.

இதேவேளை இந்தத் தனியார் பஸ் சாரதி மீதான விசாரணை இன்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வால் நடத்தப்படவுள்ளது என் றும் அதன் பின்னரே அவர் மீதான நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட தனியார் பஸ்சேவைச் சங்கங்களின் இணையம் தெரி வித்தது. (த)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

வடக்கில்

தகவல் ஊடகத்துறை அமைச் சில் நேற்றுப் பிற்பகல் நடை பெற்ற அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசுக்கு எதிராக முன்வைக் கப்பட்டுவரும் குற்றச் சாட்டு களுக்குத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நாம் உரிய பதிலை அளித்துவருகிறோம். வட பகுதி மக்களின் நல்வாழ் வுக்காக முக்கிய செயற்றிட்டங் களை அரசு நடைமுறைப்படுத்தி வருவது அனைவரும் அறிந்த விடயமே. வட பகுதி மக்கள் ஏமாளிகளல்ல. அவர்கள் புத்தி சாலித்தனமாக வாக்களித்து வடக்கில் புதுமாற்றம் ஏற்படுத் துவார்கள் என்று அங்கு மேலும் கூறினார் அமைச்சர் கெஹெ லிய. (த)

இறுதிப்போர்

பர்ஹான் ஹக் வெளியிட்டுள் ளார். இப்பரிசீலனைக்குப் பின் னர் இலங்கை மீதான பரிந் துரைகள் தொடர்பான நடவ டிக்கைகள் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரிசீலனைக்குப் பின் னர் ஐ.நா.தயாரிக்கும் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுமோ எனக் கேட்கப்பட்டதற்கு, ஐ.நா. சில தகவல்களை வெளியிட முயற் சிக்கும் என்று மாத்திரம் அவர் பதிலிறுத்துள்ளார்.

"எனினும், எதை வெளிப் படுத்த வேண்டும் என்பது குறித்தும் கருத்துச் செலுத்தவேண்டிய வர்களாக இருக்கிறோம்" என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் நடை பெற்ற காலத்தில் ஐ.நா. மேற் கொண்டநடவடிக்கைகள்மீதான அறிக்கையில், யுத்தத்துக் குப் பின்னர் ஐ.நாவால் அமைக்கப் பட்ட குழு அளித்துள்ள தகவல் களும் இணைக்கப்படவுள்ளன. இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும், ஆயிரக்கணக்கான சிவிலி யன்கள் கொல்லப்பட்டபோதும் ஐ.நா. தலையிட தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. (த)

தீவகத்தில்

பரப்புரைப் பணிகளை முன் னெடுத்தனர்.

தீவகம் சென்ற இவர்களுக்கு அங்கு மக்கள் பெரும் வரவேற் பளித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன், முதன்மை வேட்பாளர் சி.வி.விக் னேஸ்வரன் மற்றும் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள், வேட்பாளர்கள் உள் ளிட்ட குழுவினர் நேற்று தீவ கத்தில் தீவிர பரப்புரையை மேற் கொண்டனர்.

நயினாதீவு, ஊர்காவற்றுறை, வேலணை, சாட்டி, புங்குடுதீவு உள்ளிட்ட தீவகத்தின் பல பகுதி களுக்கும் சென்ற இவர்கள் வடக் குத் தேர்தலுக்கான பரப்புரைப் பணிகளை முன்னெடுத்தனர். தீவகத்தின் பல இடங்களில் மக்கள் கூட்டமைப்பினருக்கு மாலையிட்டு வரவேற்பளித் தனர். (த)

போரின்

பில் மிக நீண்ட காலத்தின் பின் னர் இராணுவத்தின் சார்பில் நேற்று நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தங் களிடம் எவரும் சரணடைய வில்லை என்றும் யாரையும் எவரிடமிருந்தும் இராணுவம் பொறுப்பேற்கவில்லை என வும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து, ஆள் கொணர்வு மனுக்களில் எதிரிகளாகக் குறிப் பிடப்பட்டுள்ளவர்களை விசா ரணைசெய்வதற்குநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாம் நீதிமன்றத்திடம் கோரிக்கை வைத்தனர் என்று மனுதாரர் சார்பில் மன்றில் முன்னிலை யாகி இருந்த மூத்த சட்டத் தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

இதனையடுத்து மனுதாரர் எதிர் மனுதாரர் ஆகிய இரு தரப் பினரிடமும் ஆரம்ப கட்ட விசா ரணைகளை நடத்தி அறிக் கையை சமர்ப்பிக்குமாறு வவு னியா மேல் நீதிமன்றம் முல் லைத்தீவு நீதிவான் நீதிமன் றத்துக்கு அறிவித்துள்ளது.

இலங்கைஅரசமைப்பின்149ஆம் பிரிவின் கீழ், சம்பவம் எந்த இடத்தில் இடம்பெற்றதாக குறிப் பிடப்படுகின்றதோ அந்தப் பகுதி நியாயாதிக்க எல்லைக்குள் உள்ள நீதிமன்றில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இதனடிப்படையில் முல்லைத் தீவு மாவட்ட நீதிவான் நீதிமன் றில் விசாரணை மேற்கொள் ளப்படவுள்ளது.

இதில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தமது சார் பில் சாட்சிகளை முற்படுத்த முடியும். இந்த விசாரணை முடிவில் அறிக்கையை நீதிவான் மன்று வவுனியா மேல்நீதி மன்றுக்கு அனுப்பி வைக்கும். இந்த விசாரணைகளை ஒக் ரோபர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்து முடிந்த விரைவில் அறிக்கை சமர்பிக்குமாறு வவு னியா மேல்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

மற்றுமொருதொகுதியாகமேலும் 7 பேர் தொடர்பில் தாக்கல் செய் யப்பட்ட ஆள்கொணர்வு மனுக் கள் தொடர்பான இராணுவத் தரப்புக் கருத்துக்களை வரும் ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது. (த-5)

சமஷ்டி

சரவணபவன் தலைமையில் நடைபெற்றது. இதில் முலமைச் சர் வேட்பாளர் மேலும் தெரி வித்தாவது:

வவுனியாவுக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ அங்கு வைத்து "பிர பாகரன் கேட்டதைப்போலவே நாட்டைப் பிரிக்கச்சொல்லி கூட் டமைப்பும் கேட்கிறது" என்று தெரிவித்திருந்தார். ஜனாதி பதியின் இந்தக் கூற்றுத் தவறா னது. ஏனெனில் கூட்டமைப்பு ஒருபோதும் நாட்டை கூறுபோடு மாறு கேட்கவில்லை. மாறாக நம்மை நாமே ஆளக்கூடிய சமஷ்டியை மட்டுமே கேட்கி றோம். அது எங்களின் சுய நிர்ணய உரிமை.

நாட்டின் பெரும்பான்மை இனத் தோடு இணைந்து அதேசம யம், தனித்துவத்தோடு கூடிய அதிகாரங்களைப் பெற்று நம்மை நாமே ஆள்வதுதான் சமஷ்டி. இதற்கு நாட்டைப் பிரிப்பது என்று அர்த்தமல்ல. சட்டம் பயின்றவரான ஜனாதிபதிக்கு இதுகூடப் புரிந்துகொள்ள முடிய வில்லையா?

நான் இங்கு வரும்போது தெரு வோரம் அரச தரப்பால் ஒட்டப் பட்டிருந்த சுவரொட்டியில் "கடந்த காலத்தில் நடந்தவற்றை மறப் போம்" என்று எழுதப்பட்டிருந் தது. நாங்கள் எதை எப்படி மறப்பது?

கடந்த காலங்களில் எங்கள் பெண்களின் கற்பு சூறையாடப் பட்டது. குழந்தைகள் உள்ளிட்ட ஏராளமானோர் கொன்று குவிக் கப்பட்டார்கள். பூர்வீக நிலங் கள் அபகரிக்கப்பட்டன. அகதிக ளாக அநாதைகளாக தமிழ் மக் கள் விரட்டப்பட்டனர். இவற்றை எல்லாம் எப்படி மறக்க முடியும்? மறக்கச்சொல்லி கேட்டவர்கள் தாங்கள் செய்த கொலை களுக்காக, கொடூரங்களுக் காக இதுவரையில் ஒரு மன் னிப்பாவது கேட்டார்களா?

இந்தத் தேர்தலை அரசு சர்வ தேசத்தின் அழுத்தத்தாலேயே நடத்துகின்றது. தொடர்ந்தும் எம்மை ஏமாற்றி அடிமைக ளாகவே தமிழினத்தை வைத் திருக்க இலங்கை அரசு முயலு மானால் சர்வதேசம் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்காது என்பதை அவர்கள் ஞாபகத்தில் கொள்ள வேண் டும் - என்றார். (ங-2)

கூட்டமைப்பின்

விடுத்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாட லில் ஜனாதிபதி மேலும் தெரி வித்தவை வருமாறு:-

முப்பது வருட கால யுத்தத்தின் பின்னர் நாட்டைக் கட்டியெ முப்பவேண்டிய தேவை உள் ளது. வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு மிகவும் குறுகிய காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப் பட்ட வடக்கில் பெரும் அபிவி ருத்தித் திட்டங்களைச் செயற் படுத்தி வருகிறோம். இத் தேர்த லில் யார் வெற்றிபெறுவார்கள் என்பது எனக்குத் தெரியும். சொன்னால் கொட்டை எழுத் தில் போட்டுவிடுவீர்கள். ஆனால் தேர்தலில் நாம் பெறப்போகும் கூடுதல் வாக்குகள்தான் எமக் குள்ள பெரும்வெற்றி. எமக்கு ஆதரவு அதிகரித்துள்ளது.

வடக்கில் பெரிய அளவில், பெரும் பணச் செலவில் உள்கட்ட மைப்பு வேலைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. காபட் வீதிகள், ரயில் பாதைகள் போப் படுகின்றன. வைத்தியசாலை, பாடசாலை வசதிகள் மேம் படுத்தப்பட்டு வருகின்றன. மீன் பிடி வசதிகளும் அதிகரிக்கப் பட்டுள்ளன. கொழும்பை விட யாழ்ப்பாணத்தில் பொருள் களின் விலைகள் குறைவு. இந்தியச் சாரிகளும் மலிவு. அந்நியர் ஆட்சிக் காலத்தில்கூட பள்ளிவாசல்கள், தேவாலயங் கள், கோயில்களை அவர்கள் கட்டிக்கொடுக்கவில்லை. ஆனால் நாங்கள் கட்டிக்கொடுக்கிறோம். அம்பாந்தோட்டைக்குக்கூட ரயில் இல்லை. ஆனால் வடக் கில் துரிதமாக ரயில் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஏப்ரல் புத்தாண்டு தினத்தில் யாழ்ப்பாணம் வரை ரயில் பாதை அமைக்கப்பட்டுவிடும். மேடையில்எதனையும்பேசலாம். ஆனால் தேர்தல் விஞ்ஞா பனம் என்று வரும்போது மிக வும்பொறுப்புடன்நடந்துகொள்ள வேண்டும். சுயநிர்ணயம் பற் றிப் பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. சர்வதேச நாடுகள் கூட இந்தத் தேர்தல் விஞ்ஞா பனத்தை விரும்பவில்லைஎன் பதை அறிந்தேன்.

கூட்டமைப்புத் தலைவர் சம் பந்தன் நாடாளுமன்றத்தைப் பலப்படுத்த வேண்டும் என்கி றார். ஆனால் தெரிவுக்குழுவுக்கு வருகிறாரில்லை. சம்பந்தனை எத்தனையோதடவைகள்அழைத் துப் பேசிவிட்டேன். வருகிறேன் என்பார். பின்பு வரமாட்டார். வெளிநாட்டு அழுத்தம் ஒன்றின் பின் வருவதற்கு ஒப்புக்கொண் டார். ஆனால்இன்னும்வரவில்லை. நாட்டைப் பிரிப்போம் என்று இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள். ஆனால் அவர் களது குடும்பஸ்தர்கள் வெளி நாடுகளில் வாழ்கின்றனர். அரசி யல்வாதிகள் இனவாதத் தைக் கிளப்பிச் செயற்படக் கூடாது. இப்படி ஜனாதிபதி கூறினார்.

கலந்துரையாடலின் இறுதி யில், "அரசுக்குச் சார்பாக எழு துங்கள் என்று நான் கூற வில்லை. நீங்கள் தாக்கியும் எழுதலாம். ஆனால் நீதியாக வும் நியாயமாகவும் எழுதுங் கள் என்றுதான் கூறுகிறேன்" என்றார் ஜனாதிபதி.

அரச நிர்வாக சேவை நியமனத் தின்போது புள்ளிகள் குறைக்கப் பட்டமை குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு ஜனாதிபதி பதில் அளிக்கையில், கூடுதலா னோரை உள்வாங்குவதற்கே இந்த ஏற்பாடு செய்யப்பட்ட தாகக் கூறினார்.

கூட்டமைப்பு

டாம், தனி நாடு, சுயநிர்ணய உரிமை மற்றும் சுயாட்சி என் பவையெல்லாம் மூடை கட்டப் படாவிடின் கூட்டமைப் புக்கு எதிராக நீதிமன்றம் செல் வதுடன், நாடாளுமன்ற நடவடிக்கை எடுப்போம்" - என்றார் சோபித தேரர். (த-5)

கூட்டமைப்பின் பேச்சை

பகுதிக்கும்நான்பயணிப் பதைக் கட்டுப்படுத்த இங்கு எந் தச் சட்டமும் கிடையாது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆளும் தரப்பின் தேர்தல் பரப் புரைக் கூட்டத்தில் ஆளுநர் கலந்துகொள்வது தேர்தல் விதி மீறல் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்கள் ஆணை யாளரிடம் முறையிட்டுள்ளது.

"இது தொடர்பில் ஆளும் தரப் பும் எதிர்த் தரப்பும் இருவேறு கருத்துக்களைக் கொண்டிருக் கின்றன. அதனால் இந்த விட யத்தை விசாரித்துச் சொல்லும் படிமனிதஉரிமைகள்ஆணைக் குழுகேட்கப்பட்டிருக்கிறது" என்று தெரிவித்தார் தேர்தல்கள் ஆணை யாளர் மஹிந்த தேசப்பிரிய.

(ங-5)

தேசிய மட்டப் போட்டிகளின் 2 ஆம் கட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.13

அகில இலங்கைப் பாட சாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் கட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதிகளில் குத்துச் சண்டைப் போட்டி சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும்.

கரப்பந்தாட்டம் - நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதி தேவிசாமர மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

டெனிஸ்-நாளை நாளையும் மறுதினமும் டெனிஸ் சம்மேளன தலைமையகத்தில் நடைபெறும்.

மல்யுத்தம்- நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதிகளில் கொழும்பு அசோக வித்தியாலயத்தில் நடைபெறும்.

கராத்தே- நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதிகளில் விகாரமா தேவி மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

எல்லே- நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதிகளில் பாணந்துறை ஹவத்து விளையாட்டரங்கில் நடைபெறும்.

எறி பந்து- நாளை, நாளை மறுதினம் தங்வெல்ல ராஜ சிங்க மத்திய மகா வித்தியாலயத்திலும்.

பளுதூக்கல்- நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதிகளில் பிலிமத்லாவ சீரானந்த மத்திய மகா வித்தியாலயத்திலும், சதுரங்கம்- நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதிகளில் கண்டி கிங்ஸ் வூட் வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

ஜூடோ- நாளை, நாளை மறுதினம் மற்றும்16 ஆம் திகதிகளில் கம்பளை விக்கிரமபாகு மத்திய மகாவித்தியாலயத்திலும், அரைமரதன்- நாளை, பாணந்துறை ஸ்ரீ அமங்கல ஆண்கள் வித்தியாலயத்திலும், வலைப்பந்தாட்டம்- நாளை, நாளை மறுதினம் மற்றும் 16 ஆம் திகதிகளில் வியாங்கொடை தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நடைபெறும். (த-23)

வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 13

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பரீட்சையை முன்னிட்டு இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கமும் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தரும் வளவாளர்கள் கருத்தரங்கை நடத்துவர்.

வலைப்பந்தாட்டப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சி.சுரேந்தினி அறிவித்துள்ளார். (த-23)

திருமலையில் உதைபந்தாட்டம்

திருகோணமலை, செப். 13

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு திருகோணமலை நகராட்சி மன்றத்தினால் நடத்தப்படும் 40 வயதுக்கு மேற்பட்ட வர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (த-23)

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப 3.30 மணி

♦ பாசையூர் சென்.அன்ரனீஸ் 'பி' அணி எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம்.

மாலை 4.30 மணி

♦ பாசையூர் சென்.அன்ரனீஸ் 'ஏ' அணி எதிர் அச்செழு பாரதி விளையாட்டுக்கழகம். (த-23)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப 3.45 மணி

♦ பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக் கழகம்.

மாலை 4.45 மணி

♦ டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கருணாகரன் விளையாட்டுக் கழகம். (த-23)

வடமராட்சியில் இருந்து நான்கு அணிகள் தெரிவு

பருத்தித்துறை, செப். 13

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில் முதற்கட்டப் போட்டிகளாக வலய ரீதியில் இடம்பெற்ற ஆட்டங்களில் வடமராட்சி வலயத்தில் இருந்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம், வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் மற்றும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகிய நான்கு அணிகள் தெரிவாகியுள்ளன.

தென்மராட்சி வலயத்தில் இருந்து மீசாலை என்.சி.சி விளையாட்டுக் கழகம் மற்றும் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் ஆகிய இரண்டு அணிகளும் அடுத்த கட்ட சுற்றுப்போட்டிகளுக்கு முன்னேறியுள்ளன.

இதேவேளை வலிகாம வலயத்திலிருந்து நான்கு அணிகளை தெரிவு செய்வதற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூடைப்பந்து சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 29 ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என சங்கத்தின் செயலாளர் ரட்சகன் அறிவித்துள்ளார். (த-23)

வென்றது யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் பெற்றிபெற்றது.

இளவாலை யங்ஹென்றீசியன் 'ஏ' அணிக்கும் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றீசியன் 'ஏ' அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கரம் போட்டியில் பெண்களுக்கான 15 வயதுப் பிரிவில் 3 ஆம் இடத்தை வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது. அணிப் பயிற்றுநர், பொறுப்பாசிரியர்களுடன் வீராங்கனைகள். (த-23)

தேசிய மெய்வன்மைப் போட்டியில் யாழ். மாவட்டத்துக்கு 10 பதக்கங்கள்

யாழ்ப்பாணம்,செப்.13

இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்பட்ட ஜோன் டார்பட் என அழைக்கப்படும் 83 ஆவது தேசிய மட்டத் தடகளப் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி 2 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலம் என ஐந்து பதக்கங்களையும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 2 வெள்ளி, 2 வெண்கல பதக்கங்களையும், யாழ். இந்துக் கல்லூரி ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக கொண்டன.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி

20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் இருதயதாஸ் பௌஸ்ரினா 2.90 மீற்றர் தூரத்தைத் தாண்டி முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மேரிஸ் சாள்ஸ் அன்ரனி 3.70 மீற்றர் உயரத்தைத் தாண்டி முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

18 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் மேரி நிலக்சனா 2.50 மீற்றர் உயரத்தைத் தாண்டி 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ஹொகாய் றொசான் 4 மீற்றர் உயரத்தைத் தாண்டி இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பாலசுப்பிரமணியம் லவணன் 3.90 மீற்றர் உயரத்தைத் தாண்டி மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ஜெகதீஸ்வரன் அனிற்றா 3 மீற்றர் தூரத்தைத் தாண்டி இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு ஏறிதல் போட்டியில் உதயகுமார் துயிசாந்த் 40.90 மீற்றர் தூரத்தை எறிந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் சி.தன்ஷகா 2.50 மீற்றர் உயரத்தை தாண்டி இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இதே வயதுப் பிரிவில் வி.மேரி கொலஸ்ரிக்கா 2.50 மீற்றர் தூரத்தை தாண்டி மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியில் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் வசீகரன் யஸ்மினன் 6.75 மீற்றர் தூரத்தை பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார். (த-23)

தெற்காசியச் சம்பியனானது ஆப்கானிஸ்தான்

தெற்காசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் 8 ஆவது வருடப் போட்டிகளின் சம்பியனாக ஆப்கானிஸ்தான் அணி தெரிவாகியுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றே ஆப்கானிஸ்தான் அணி சம்பியன் பட்டம் வென்றது. நடப்பு சம்பியனான இந்திய அணி, ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஆதிக்கத்தை வெளிப்படுத்தத் தவறியிருந்தது.

இந்தப் போட்டியின் 9ஆவது நிமிடத் திலேயே ஆப்கானிஸ்தானின் முஸ்தபா அஸட் ஸோய் கோலொன்றைப் பெற்றுக்கொடுத்து ஆப்கானிஸ்தானுக்கு முன்னிலையை வழங்கினார்.

முதலாவது பாதியில் இந்தியாவின் தடுப்பு அணியின் பலம் குறைவாகக் காணப்பட்ட தோடு தங்களுக்கான வாய்ப்புக்களையும் இந்திய அணி தவறவிட்டது.

இரண்டாவது பாதியில் இந்திய அணி சற்றுச் சிறப்பான நிலையில் ஆட முயற்சித்திருந்தது. ஆனால், கிடைக்கப் பெற்ற வாய்ப்புக்களை அவ்வணி தவறவிட, ஆப்கானிஸ்தான் அணி தொடர்ந்தும் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் காணப்பட்டது.

போட்டியின் 62ஆவது நிமிடத்தில் ஆப்கானிஸ்தான் அணியின் சன்ட்ஜார் அஹ்மாடி கோலொன்றைப் பெற்றுக் கொடுத்து, ஆப்கானிஸ்தான் அணிக்கு 2-0 என்ற முன்னிலையை வழங்கினார். இதன்பின்னர் கோல்களையும் பெற்றுக் கொள்ளப்படாத நிலையில், ஆப்கானிஸ்தான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இது ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றும் முதலாவது தெற்காசிய உதைபந்தாட்டச் சம்பியன் பட்டமாகும். (த)

சச்சின் தொடர்ந்து ஆடலாம்

இந்தியாவுக்காக சச்சின் இன்னும் சிறிது காலம் விளையாடலாம் என இந்திய அணியின் முன்னாள் டெஸ்ட் வீரர் சேட்டன் சவுகான் தெரிவித்துள்ளார்.

சச்சின், ஒருநாள் மற்றும் சர்வதேச 20/20 போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

எனினும் டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார். இதுவரை 198 டெஸ்டில் விளையாடிய இவர், அடுத்து வரவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடர் மூலம், 200 டெஸ்ட்டில் விளையாடிய முதல் வீரர் என்ற புதிய உலக சாதனை படைக்கக் காத்திருக்கிறார்.

இந்தத்தொடருக்கு பின் இவர் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர் சேட்டன் சவுகான், கிரிக்கெட் அரங்கில் பல்வேறு சாதனைகள் படைத்த சச்சின், தற்போதைக்கு ஓய்வு பெறத் தேவையில்லை.

இவர் இன்னும் சிறிது காலம் விளையாடலாம். இவர் கடந்த இரண்டு ஆண்டில் ஒரு முறைகூட டெஸ்ட் போட்டியில் சதம் அடிக்கவில்லை.

இருப்பினும் இவருக்கு டெஸ்டில் விளையாடக் கூடிய திறமையும், தகுதியும் நிறைய உள்ளன என்று தெரிவித்துள்ளார். (த)

7 ஆயிரம் ஓட்டங்கள் கடந்தார் யுனிஸ்கான்

டெஸ்ட் கிரிக்கெட்டில் 7000 ஓட்டங்கள் கடந்த 4ஆவது பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையை யுனிஸ்கான் எட்டியுள்ளார். இவரது இரட்டைச் சதத்தினால் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான், வெற்றி பெற்றது. தற்போது சிம்பாப்வேக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்டிலும் பாகிஸ்தான் அணியை நிமிர்த்தியுள்ளார் யுனிஸ்கான்

பாகிஸ்தான் - சிம்பாப்வே கிரிக்கெட் அணிகள் இடையிலான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஹராரே நகரில் நடந்து வருகிறது. இதில் யுனிஸ்கான் பவுண்டரி அடித்து அரைச் சதத்தைத் தொட்டபோது, டெஸ்ட் கிரிக்கெட்டில் 7 ஆயிரம் ஓட்டங்களையும் கடந்தார். இதுவரை 84 டெஸ்ட்டில் விளையாடி 7004 ஓட்டங்கள் குவித்துள்ள 35 வயதான யுனிஸ்கான் இந்த மைல்கல்லை கடந்த 4ஆவது பாகிஸ்தான் வீரர் ஆவார். அதிக ஓட்டங்கள் குவித்த பாகிஸ்தான் வீரர்களில் மியாண்டட் (8832 ஓட்டங்கள்), இன்சமாம் (8829 ஓட்டங்கள்), முகமது யூசுப் (7530 ஓட்டங்கள்) ஆகியோர் முதல் 3 இடங்களில் இருக்கிறார்கள். (த)

> யுனிஸ்கான் பவுண்டரி அடித்து அரைச் சதத்தைத் தொட்டபோது, டெஸ்ட் கிரிக்கெட்டில் 7 ஆயிரம் ஓட்டங்களையும் கடந்தார்.



அமெரிக்கா, ஆர்ஜென்ரீனா அணிகள்

உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி

அமெரிக்கா அணி

2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இருபதாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு ஆர்ஜென்ரீனா, அமெரிக்கா, இத்தாலி, நெதர் லாந்து உள்ளிட்ட அணிகள் தகுதி பெற்றுள்ளன.

பிரேசிலில் 2014ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் திகதி முதல் ஜூலை 13ஆம் திகதி வரை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெற உள்ளது.

இப்போட்டிக்காக பிரேசில் நகரின் உள்கட்டமைப்பு வசதி கள் பல கோடி ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. பிரேசிலில் 2ஆவது முறையாக உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணத்தில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்கும். தகுதிச்சுற்றுகளின் அடிப்படையில் அந்த 32 அணிகள் தேர்வு செய்யப்படும்.

போட்டியை நடத்தும் நாடு என்ற அந்தஸ்தில், பலம் வாய்ந்த பிரேசில் அணி ஏற்கெனவே தகுதி பெற்று விட்டது. மற்ற அணிகள் தகுதிச் சுற்றுகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

கண்டங்களில் இடம் பெற்றுள்ள நாடுகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டத் தொடரில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் உலகக் கிண்ணத் துக்கு அணிகள் தகுதி பெறும்.

உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் பல்வேறு நாடுகளில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

தென் அமெரிக்காவில் உள்ள நாடுகளுக்கு இடையேயான ஆட்டத்தில் பராகுவேயின் தலைநகர் அசன்சியனில் பராகுவேயும், ஆர்ஜென்ரீனாவும் மோதின. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணி 5-2 என்ற கோல் கணக்கில் வென்று உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது. ஆர்ஜென்ரீனாவுக்குக் கிடைத்த இரு பெனால்டி வாய்ப்புகளை மெஸ்ஸி கோலாக மாற்றினார்.

அதேசமயம், தென் அமெரிக்க பிரிவில் கொலம்பியா, உருகுவே அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில் கொலம்பியா அணி 0-2 என்ற கோல் கணக்கில் தோல்வியைத் தழுவியது. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கு அந்த அணிக்கு மேலும் ஒரு புள்ளிகள் வேண்டும். 1998ஆம் ஆண்டு முதல் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்குத் தகுதி பெறக் கொலம்பியா அணி போராடி வருகிறது.

மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளில் உள்ள நாடுகளுக்கு இடையேயான தகுதிச்சுற்றுப் போட்டிகள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், அமெரிக்க 2-0 என்ற கோல் கணக்கில் மெக்ஸிக்கோவை வீழ்த்தி உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெற்றது.

ஜமெய்க்கா அணியுடனான ஆட்டத்தில் 1-1 என்று சமநிலை செய்ததன் மூலம் கோஸ்டாரிக்கா அணியும் உலகக் கிண்ணத்துக்கு முன்னேறியது. (த)

ஆர்ஜென்ரீனா அணி

இந்தியா செல்லுமா பாகிஸ்தான்?

சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்க இந்தியா செல்ல விருந்த பாகிஸ்தான் உள்ளூர் அணிக்கு அனுமதி கிடைக்கவில்லை.

ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் 20/20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடங்குகிறது. இதில் இந்தியாவில் இருந்து மும்பை, சென்னை, ராஜஸ்தான் என்று மூன்று அணிகள் பங்கேற்கவுள்ளன.

தவிர, ஆஸ்திரேலியாவின் பேர்த் ஸ்கார்ச் சர்ஸ், பிரிஸ்பேன் ஹீட், மேற்கிந்திய தீவுகளின் டிரினிடாட் டுபாகோ உள்ளிட்ட 8 அணிகள் நேரடியாகப் பங்கேற்கும்.

எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடக்கவுள்ள தகுதிச் சுற்றின் மூலம் மீதமுள்ள 2 அணிகள் தெரிவு செய்யப்படும்.

இதில் ஐதராபாத் (இந்தியா), ஒடாகோ வோல்ட்ஸ் (நியூசிலாந்து), கந்துரட்ட மரூன்ஸ் (இலங்கை) மற்றும் பாகிஸ்தானின் பைசலாபாத் வால்வ்ஸ் என்று 4 அணிகள் விளையாட இருந்தன.

ஆனால், சமீபத்தில் எல்லைப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டதால் ஏற்பட்ட பதற்றமான நிலை காரணமாக பாகிஸ்தான் வீரர்கள் இந்தியா வருவதில் சிக்கல் ஏற்பட்டது. இவர்களுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுக்க முடியாது என்று மத்திய அரசு கைவிரித்தது. இதனால், பாகிஸ்தான் வீரர்களுக்கு விசா கிடைக்கவில்லை.

இங்கிலாந்து–ஆஸி. மூன்றாவது போட்டி கைவிடப்பட்டது மழையால்

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3ஆவது போட்டி மழையால் கைவிடப் பட்டது.

மழை காரணமாக தாமதித்தே ஆரம்பித்த இப்போட்டி 50 ஓவர்கள் கொண்ட போட்டியாகவே ஆரம்பித்தது.

எட்ஜ்பஸ்ரன் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது ஓவரின் இறுதிப் பந்திலேயே மைக்கல் கர்பெரியை ரண் அவுட் முறையில் இழந்ததோடு, 2ஆவது விக்கெட்டாக கெவின் பீற்றர்சனை 26 ஓட்டங்களுக்கும், ஜோ றூட்டை 52 ஓட்டங்களுக்கும் இழந்தது.

இங்கிலாந்து அணி 15.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களுடன் காணப்பட்ட போது மழை குறுக்கிட்டது. அதன் பின்னர் போட்டியை மீள ஆரம்பிக்க முடியாது போனது.

இங்கிலாந்து சார்பாக ஜொனதன் ட்ரொட் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது காணப்பட்டார். பந்துவீச்சில் மிற் சல் ஜோன்சன், அடம் வோகஸ் இருவரும் தலா ஓர் இலக்கை கைப்பற்றினர்.

இத்தொடரின் முதலாவது போட்டியும் மழையால் கைவிடப் பட்டிருக்க, 3 போட்டிகளின் நிறைவில் ஆஸ்திரே லிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

(த)

SLEAS மட்டுப் படுத்தப்பட்ட
பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு

ஆரம்பம்:- சனி (14/9) பி.ப. 1.00 மணி
ஏனைய நேரங்கள்:- இம்மாதம் 15ஆம், 19ஆம், 28ஆம், 29ஆம் அடுத்த மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் காலை 9.30-3.30 வரை நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
தொடர்புகளுக்கு:-0754164564

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி இராமலிங்கம்

(RETIRED OFFICER AIR CEYLON)

இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இல. 14 மாட்டீன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமலிங்கம் நேற்று (12.09.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலா பவனம் இல. 14, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தகவல்:- கலா யோகராசா (மகள்)

IDM Nations Campus Since 1981
Nations Campus
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd.
#216, Navalar Road, Jaffna.

Double Diploma
Diploma in Computing +
(Bus. Management, Law, QS, Constru.Mgt)

UNIVERSITY UGC RECOGNIZED AWARDED DEGREE
After the Completion of
Any Diploma Course -
Convocation at BMICH, Colombo.

FREE "One Day Workshop" with Certificate
Programming with Android, Hardware & Networking, Multimedia
On 25th September 2013 (Wednesday)

SELECTION EXAM
on 19th of September (Thursday)
9:00AM
Call and reserve your seat

தொடர்புகளுக்கு : 021 222 9901 | 077 563 2056

15 வருடம் அனுபவம் வாய்ந்த நிபுணரின் பயிற்சி !
உங்கள் கம்பியூட்ரை நீங்களே திருத்துங்கள். !1+2 Months
கணினி பழுது பார்த்தல் பயிற்சி நெறி.
Learn only in 1 Month at :
KU Education.
Creating Employable Graduates
பயிற்சி நெறிக்கையேட்டிற்கும் விபரங்களுக்கும் நேரில் வரவும்.
0777-302882 | More on :http://edu.kugroup.info
இல 75,கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை AIL எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் இணைந்துகொள்ள முடியும்.
பயிற்சிநெறி ஆரம்பம் 16.09.2013 திங்கட்கிழமை
பிரிவு:1 காலை 09-11 பிரிவு:2 மாலை 03-05
SAAMSON இன் ஆங்கிலப் பயிற்சிநெறியானது 10 வருட மொழி ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்டதாகும்! இதில் இணைவதன் மூலம் அடிப்படை ஆங்கிலம் தெரியாதவர்கள் கூட 3 மாதங்களில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசுவது நிரூபிக்கப்பட்டுள்ளது.
அரசமற்றும் தனியார் அலுவலர்களுக்கான தனிப்பிரிவு : 16.09.2013 திங்கட்கிழமை மாலை 05:00-06:00
SAAMSON EASY WAY ENGLISH
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர் 077 621 4567

IIS வழங்கி வரும் UK உயர் கல்வி
A/L 2013 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!, மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்காக காத்திருக்கும் மாணவர்களே! உங்களுக்கான விஷேட பிரிவு ஆரம்பம்.

HND
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT
Leading to DEGREE From UK, US, NZ, Australian Universities
மேற்படி துறைகளில் பிரித்தானிய பட்டத் தகைமைகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை IIS வழங்குகின்றது
மாணவர்களுக்கு இலகு கல்விக் கடன் வசதி செய்து தரப்படும்
புதிய பிரிவு ஆரம்பம் 14/09/2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு
021 4900 900
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk

சி.சரன்ஜா

A/L கணிதத்துறை மாணவியாகிய நான், ஓர் பொறியியல் பட்டதாரியாக வேண்டும் என்ற எனது கனவை IIS City Campus இல் இணைந்ததன் ஊடாக நனவாக்கிக் கொண்டு உள்ளேன் தற்போது எனது இறுதியாண்டு பயிற்சிக் காலத்தை கொழும்பில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றேன். IIS CITY CAMPUSஇல் இணைந்தது எனது வாழக்கைக்கு ஓர் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது.

கி.துவாரகன்

பொறியியல் துறையில் பெற்றோரின் ஆலோசனையின் பிரகாரம் எனது உயர் கல்விக்காக நான் IIS CITY CAMPUS ஐ தெரிவு செய்தேன். ஆற்றலும் அனுபவமும் மிக்க விரிவுரையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் வளங்கள் என்பன எனது உயர்கல்விக்கு உறுதுணையாக இருந்தது. அது மட்டுமல்லாது நிறுவனத்தின் சூழல் ஓர் முழுமையான உயர்கல்வி வளாகத்தில் கற்றுக் கொண்ட அனுபவத்தை எனக்கு அளிக்கின்றது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.